# வெளிச்சம்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

புரட்டாதி - ஐப்பசி, 2004

விலை: ரூபா 50/=



ஐம்பதாவது அகவை காணும்
எங்கள் தலைமகனுக்கு
வெளிச்சம்
மங்கலம் பாடி மகிழ்கிறது.


விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக் கழகம், தமிழீழம்.
நூறாவது இதழ் நோக்கி
பயணிக்கிறது வெளிச்சம்.
விடுதலைக் கனலேந்திய
அனைவரையும்
எங்கள் வாசலுக்கு
அழைக்கிறோம்.
வாருங்கள்
வரலாற்றுக் கடமையில்
ஒன்றிணைந்துகொள்வோம்.
இணையத்தளத்தில் இணைய: www.Velichcham.com



ஐம்பதாவது
அகவை காணும்
எங்கள் தலைமகனுக்கு
வெளிச்சம்
மங்கலம் பாடி
மகிழ்கிறது.


*கவிதை*

மாலிகா
புதுவை இரத்தினதுரை
கல்வயல் வே.குமாரசாமி
யாழ்பாடியார்
க.சந்திரா
வேல் லவன்
மொழிபெயர்ப்புக் கவிதை
வின்சன் புளோரன்ஸ்

*சிறுகதை*

சிதம்பர திருச்செந்திநாதன்
தாட்சாயணி
கலாநிதி சோமாஸ்கந்தன்
க.சட்டநாதன்

*கட்டுரை*

ஞானரதன்
யதீந்திரா

*நேர்காணல்*

மயிலங்கூடலூர் பி.நடராசன்


குறிப்புகள், பதிவுகள் இன்னும்பல...





அக்டோபர் 10
தமிழீழப் பெண்கள் நாளுக்கு
வெளிச்சத்தின் வாழ்த்து.

# தலைவாசல்

இதழ் 88 புரட்டாதி - ஐப்பசி 2004.

## "வெல்வதும் வீழ்வதும் வெளியார் கையில் இல்லை."

இத்தனைக்குப் பிறகும் ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை எவரும் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம், பேச்சுவார்த்தை, சமாதானச் செயலகம், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், புலிகள் - இராணுவம் கூட்டுச்சந்திப்பு என பெரு மெடுப்பில் ஆர்ப்பரித்த விளம்பரங்களுடன் ஆரம்பமான சமாதானத்துக்கான பயணம் இன்று இடைநடுவில் அந்தரிப்புக்குள்ளாகி அநாதரவாக நிற்கிறது. உலகத்தைத் தம்வசப்படுத்த சம்பந்தப்பட்ட இருதரப்புமே பகீரதப் பிரயத்தனம் எடுத்தபோதும் இருதரப்பாருக்குமே உலகம் "பெப்பே"தான் காட்டிக்கொண்டிருக்கிறது.

உலகமென்பது நியாயத்தராசுள்ளவன் கையில் சுழல்வதில்லை. அது வல்லமை உள்ளவனின் பக்கமாகவே தன்னலங்கருதி சரியும் தன்மையுடையது. இன்றைய உலகப்போக்கை எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஏகாதிபத்தியங்களே தீர்மானிக்கின்றன. ஏகாதிபத்தியங்கள் எப்போதும் வளங்களைச் சுரண்டவும், சுரண்டியெடுக்கும் மூலாதாரங்களில் உற்பத்தியாகும் பொருட்களுக்கான விற்பனைச் சந்தையைத் தேடவும், அதற்கெதிராக எழும் விடுதலைப்போராட்டங்களை என்ன விலைகொடுத்தாயினும் அட்க்கவுமே முயலும். இல்லையெனில் நடைபெறும் விடுதலைப்போராட்டங்களை தன்வசப் படுத்தி தனக்குச் சார்பினதாக மாற்றமுற்படும்.

இங்கும் இப்போது இதுதான் நடக்கிறது. ஈழத்தமிழருக்குச் சார்பாக வரும் நாடுகளாயினும், உதவிசெய்யவரும் நிறுவனங்களாயினும், மனித உரிமை அமைப்புக்களாயினும் எல்லாமே எம்மீது பரிவும், பச்சாதாபமும் கொள்வது எமது விடுதலைப்போராட்டத்தின் தருமத்தை ஏற்றுக்கொண்டல்ல. மாறாக எவராலும் அணைக்க முடியாதவாறு பெருநெருப்பாக எரியும் எமது விடுதலைப்போராட்டத்தை அனுசரித்துப்போவதாகக்காட்டி அழித்துவிடுவதற்கே. இந்த மாய வலைப்பின்னலில் வீழ்ந்த மிகப்பெரிய விடுதலைப் போராட்டங்கள் இன்று மண்டியிட்டு பிச்சையேந்தும் நிலைக்குள்ளாகி எமக்குப் பெரும் படிப்பினையாகக் கண்ணெதிரே கிடக்கின்றன.

சரி இப்போது எம்முன்னே கிடக்கும் தெரிவு எது?

- சரியானதை இனங்காணுவது.
- விடுதலைக் கனலை அவிந்துபோகாது தக்கவைப்பது.
- கண்டதுக்குப் பின்னாலும் எடுபட்டு ஓடாதிருப்பது.
- மாவீரர்களது கனவுகளையும், தாகங்களையும் எமதாக்கிக்கொள்வது.
- உள்ளும் புறமுமான போலிகளை அடையாளம் காண்பது.
- விடுதலைப்புலிகளின் இராஜதந்திர நகர்வுகளைப் புரிந்துகொண்டு தலைமைமீதான விசுவாசத்துடன் இருப்பது.

இருப்போமெனில் வெல்வோம்.
இல்லையெனில் வீழ்வோம்.

தொகுப்பும் அமைப்பும்
ஆசிரியர் குழு

ஒளிப்படங்கள்
இயல்வாணன், இ.சோபிதன்,
விடுதலைப்புலிகள்
புகைப்படப்பிரிவு

ஓவியங்கள்
கோபாலி, புகழ், ஆதிமூலம்

அச்சுப்பதிப்பு
நிலா பதிப்பகம்
கிளிநொச்சி

வெளியீடு
விடுதலைப் புலிகள்
கலை,பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
தமிழீழம்.

இணையத்தில் வெளிச்சம்
WWW.Velichcham.com

தொடர்புகளுக்கு:
*வெளிச்சம்*
புதுக்குடியிருப்பு-04
முல்லைத்தீவு

*வெளிச்சம்*
விடுதலைப்புலிகள்
கலை,பண்பாட்டுக்கழகம்
மாவட்டச் செயலகம்
பொற்பதி வீதி
கோண்டாவில்
யாழ்ப்பாணம்.

# வில்லாண்ட பரம்பரையின் விழுதுக்கு பல்லாண்டு

எங்கள் நிலமீது மழைகொண்டுவந்த முகிலுக்கு
ஐம்பது அகவையாகிறது.
எம்மீது இருள் கவிந்த வேளையில்
ஒளிகொண்டு தூவிய வெளிச்சத்துக்கு
வயது ஐம்பதாகிறது.
ஐயனே!
கடுங்கோடை எரித்த நிலமீது
நீயே மழையாகி வந்தாய்.
காரிருள் சூழ்ந்த பொழுதுகளில்
நீயே சோதிப்பிளம்பாகத் தோன்றினாய்.
பகையேவிய அம்புகள் துளைத்து
உயிர்குடித்த வேளையில்
நீயே எமக்கு நெஞ்சின் கவசமானாய்.
நெடுங்காலம் தலைநிமிர்த்தாதிருந்த பரம்பரை
நின் வரவுக்குப் பின்னரே மீண்டும் முடிதரித்தது.
சிதிலமான கொற்றப் பந்தரையும்,
கொலுமண்டபத்தையும்,
சிம்மாசனத்தையும்
புதுக்கிய வரலாறு நினது.
எவரும் மிதித்தேறிப்போகவும்
கேட்க நாதியற்றிருந்த எம் கையில்
வாள்கொடுத்த வல்லமை நீ.
இன்றும் உன்னால் வந்த உயர்வனைத்தையும்
இனத்தின் கரங்களில் தந்துவிட்டு
வெறுங்கையனான வெளிச்சம் நீ.
வழித் தெளிவுணர்ந்த தலைப்பயணியே!
தங்க அகவை நினக்கல்ல
தமிழருக்கு.
ஐம்பது வயதென்பது நினக்கல்ல
அது எமக்கு.
வில்லாண்ட பரம்பரையின் விழுதுக்குப்
பல்லாண்டு பாடுகிறோம்
வாழிய நீ.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்
முன்நின்று கல்நின் றவர்."
*திருவள்ளுவர்*



புதுவை இரத்தினதுரை

## மாலிகா கவிதை



தொட்டு நுழைந்தும்,
விட்டுப் பிரிந்தும்
பயணவழியில் கடக்கும்
ஒவ்வொரு கிராமங்களும், நகரங்களும்
தரும் அநுபவங்களும், பட்டறிவும்
வேறெதிலும் கிட்டாத சிகரங்கள்.
வழிப் பயணங்கள் யாவும் தனித்துவ இயல்பின.
ஒன்றைப்போல் இன்னொன்று இல்லை.
எதிர்கொள்ளும் வழியில் அகப்படும்
ஊர்களுள்ளும் நகர்களுள்ளும் நுழைவது
நூலகத்துள்ளே புகுவது போலத்தான்.
அறியாமுகங்களின் அழகையும், உணர்வுகளையும்
அளவெடுத்து உள்ளே வைத்துக்கொள்வதும்
ஒரு உளவியற் பயிற்சிதான்.
வழியில் எத்தனை இடங்களும்
எத்தனை முகங்களும்
புன்னகைத்துப் பேசிப்போகின்றன.
பயணமென்று ஏறி அமர்ந்ததும்
சீவன்முத்தர் நிலை சித்திக்கிறது.
எதிர்வருவன யாவும் எழில்கொண்டு இலங்குகின்றன
ஏனென்று இன்றும்தான் புரியவில்லையே.
வீதிகள் வித்தியாசமானவையாக,
மரங்கள் மாறுபட்டவையாக,
ஆறுகள், குளங்கள், கிணறுகள்கூட
புதிய அழகுடுத்தினவையாக,
அட; புல், பூண்டு, செடி, கொடிகள் யாவும்
எப்படி இவ்வளவு துரிதத்தில் ஒப்பனை செய்துகொண்டு
ஒய்யாரம் பெற முடிகிறது?
பயணங்கள் முழுமை செய்கின்றன மனிதனை.
என் இறுதிப் பயணத்தில்கூட
வெளியே பார்த்து, அறிந்து சிலிர்த்தபடி போய்
கட்டையில் படுத்தெரியும் வரம்வேண்டும்
தருவாயா?

□□



# ஒரு அவிழ் கூட

**க.சட்டநாதன்**

நான் கூறுவது உங்களுக்கு நம்பிக்கை தருவதாக இராது. ஆனாலும், நீங்கள் நம்பித்தான் ஆகவேணும். கடந்த மூன்று நாளாக, ஒரு அவிழ்கூட, என்ரை வாயில விழேல்லை. காலையிலை அம்மா தந்த வெறும் தேத்தண்ணி மட்டும் ஒரு மிடறு விழுங்கினனான். பச்சைத்தண்ணி மட்டும் நல்லாமண்டுவன். தண்ணிதான் என்ரை உயிரைப்பிடிச்சு வைச்சிருக்கு.

இப்பகூட, கிணத்தில ஒரு வாளிதண்ணி அள்ளிக்குடிச்சனான். வெறுவயித்தில தண்ணி குடிச்சது குமட்டிக்கொண்டு வருகுது. ஓங்காளத்துடன் சத்தி எடுத்திட்டன். சத்தியா....? சத்தி எண்டபேரில தண்ணிதான். தண்ணியில தேத்தண்ணிச் சாயமும் கொஞ்சம் கலந்திருக்கு.



"நிதி இஞ்ச பாரும்.... இந்த அகதிப் பெட்டை வகுப்பில சத்தி எடுக்கிறதை..."

அருகில இருந்த ராதிகா குதிச்செழுந்து, நுனிவிரலால மூக்கைப்பொத்திக் கொண்டு என்னை விலத்தி ஓடினாள்.

கிட்டவந்த மொனிற்றர் நிதி, ஒரு பழந்துணியை என்னிடம் தந்து, "யசோ இதால... இந்தத் துணியால, மேசையைத் துடையும். நிலத்திலையும் சத்தி சிந்திக் கிடக்குது, கொஞ்ச மண்ணள்ளிப் போடும்..." என்றாள்.

ஓடி வந்த கிருஷ்ணி, நிதியின்ரை கையில இருந்த துணியை வாங்கி, மேசையைத் துடைத்தாள். நிலத்தில் கிடந்த சத்திக்கும் மண் அள்ளிப்போட்டாள்.

கிருஷ்ணி நல்ல பிள்ளை. என்ரை தோளைத தொட்டுத் தடவினபடி பட்சமாய்க் கேட்டாள்:

"காலையில ஒண்டும் சாப்பிடேல்லையா...?"

"இல்லை...."

தலையசைத்துப் பதில் தந்தன். என்னாலை பேச முடியேல்லை. அழுகை அழுகையாய் வந்தது. அழுதன்.

"அழாதையும்... உமக்குப் பக்கத்தில நான் வந்திருக்கிறன்.... ராதிகா என்ரை இடத்தில இருப்பா..."

ஆதரவாகக் கூறின கிருஷ்ணி, தன்ரை புத்தகப் பையை எனக்குப் பக்கத்தில கொண்டு வந்து வைத்தாள்.

முதல் மணி அடிக்குது. பிள்ளையள் எழுந்து

வரிசையில நிக்கினம். இரண்டாவது மணி அடிக்க வரிசை நகருது. வரிசையில நிண்ட கிருஷ்ணி ஓடி வந்து என்னைக் கேட்டாள்:

"யசோ..! அசெம்பிளிக்கு வரேலுமா...? உம்மாலை ஏலாது.... பிறிஃபெக்ற் அக்காமார் வந்தால் - தலைசுத்தி, சத்தி எடுத்ததெண்டு சொல்லும்."

கூறியவள், திரும்பவும் வரிசையில சேர்ந்து கொண்டாள்.

பசிக்களைப்பு. கொஞ்சம் கண்ணை மூடினன். முழிச்சுப் பார்த்தா, சிவபுராணம் படிக்கிறது கேக்குது.

எங்கட வகுப்புக் குணேஸ்தான் புராணம் படிக்கிறாள். கணீரெண்ட குரல். சேர்ந்து படிக்கிற பிளளையளின்ரை குரல் தேஞ்சு மெலிசாய்க் கேக்குது. புராணம் முடிஞ்சு - ஆசியுரை, அதிபர் உரை முடியச் சரியான நேரம் எடுக்கப்போகுது....

வயித்தில சுள் எண்டு வலி... பெருங்குட



லைச் சிறுகுடல் பிடிச்சுப் பிசைஞ்சு இழுக்குது. ஊசி முனை பட்டுக் கிழிச்ச மாதிரி ஒரு அராத்தல். அடி வயித்தில கனக்கக் கொட்டின ஊசிகளின்ரை நரநரப்பு...

மூச்சை மெதுவா உள்ள இழுத்து, வெளிய விடுறன். வலி குறைஞ்ச மாதிரி இருக்கு.

காத்தில கலந்து - முட்டைப் பொரியலும் பிலாப்பழமும் மணக்குது. இன்னும், தாளித்த வெங்காயமும் சுறாப்பிட்டும் கலந்த மணம் வேறை....

வாயூறி - அந்தரப்பட்டு, கிருஷ்ணியின்ரை புத்தகப்பையைத் திறந்து பார்த்தன். பேப் பரிலை ஏதோ சுத்தியிருந்தது.

ம்.... பணிஸ். சீனிப் பணிஸ்கூட இல்லை. வெறும் பணிஸ்தான் கொண்டுவந்திருக் கிறா.... பாவம் கிருஷ்ணி.

என்னைப்போல இவளும் ஏழைப்பிள்ளை... செத்தலாய், கருவாடுமாதிரி இருக்கிறாள். வெளிறி, இரத்தம் கெட்ட தேகம். சுள்ளி சுள்ளியாய் கையும் காலும். அந்தக் கண்கள் மட்டும் பெரிசாக.... இரக்கப்படுறவையளுக் குக் கண்கள் இப்படிக் பெரிசா இருக்குமோ...?

நாக்குவழிக்கிற அந்தச் சின்னமேளம் ராதி கான்ரை சாப்பாட்டைத்தான் தின்னவேணும். அவவின்ரை சாப்பாட்டுப் பெட்டியை எடுத்தன். பெட்டி நல்ல வடிவு. நீலம். மூடி வெள்ளை. பெட்டியில அடசி அடசி அரிசிமாப் பிட்டு; மேல முட்டைப் பொரியலும் பிலாப்பழத் துண்டுகளும்...

இந்தச் சொறி, ஒரு நேரம் பட்டினி கிடக்கட் டுமன்.... விதானையாற்றை மகள் எண்டால் எனக்கென்ன.. அவளுக்குக் கொம்பா முளைச் சிருக்கு... அவளின்ரை கெப்பர் அவளோடை.....

ராதிகாவை மனதுக்கை திட்டின சந் தோசத்தில, பிட்டை, பொரியலுடன் விழுங்கி னன். பிலாப்பழத் துண்டுகளையும் அள்ளி அடசினன். விக்கல் வந்திட்டுது. அவளின்ரை

போத்தல் தண்ணியையே எடுத்துக் குடிச்சன். சாப்பிட்டதும் - பெட்டியை அவவின்ரை பையில வச்சிட்டு - நசுக்கிடாமல் வந்து படுத்திட்டன்.

சாப்பிட்ட களைப்பு, கொஞ்சம் கண்ணயர்ந்திட்டன்...

பிறேயர் முடிஞ்சு, பிள்ளையள் வகுப்புக்கு வந்துகொண்டிருக்கினம். கிட்டவந்த கிருஷ்ணி, என்னைப் பார்த்து ஒரு கள்ளச் சிரிப்போட கேட்டாள்:

"உம்மில பிலாப்பழம் மணக்குது.... சாப்பிட்டனீரா? வாயில பிட்டுத்தூளுமிருக்கு, துடையும். துடைச்சுப் போட்டு முழிசாமல் இரும்."

கிருஷ்ணிக்கு விளக்கம் அதிகம்... என்ரை கள்ளத்தைப் பிடிச்சிட்டாள்போல... நான் பேய்த்தரவளிபோல ஒண்டுமே நடவாத மாதிரி இருந்தன்.

கிருஷ்ணி விடேல்லை, தொடர்ந்து காதிலை குசுகுசுத்தாள்:

"இதொண்டும் வகுப்பிலை புதுசில்லை. நான், லதா, றோசலின், சாந்தி எண்டு எல்லாருமே கள்ளச் சாப்பாடு சாப்பிட்டு அடிவாங்கி இருக்கிறம். எரிமலை வெடிக்கப் போகுது.... எப்ப வெடிக்குமெண்டு பாப்பம்..?"

"எரிமலையா! வெடிக்குமா...? வெடிக்கிற நேரம் வெடிக்கட்டும். எனக்குப் பயமில்லை."

"ஆள் நல்ல உசாராய்த்தான் இருக்கிறீர். திருட்டு முழி முழிச்சுக் குழப்பாமல் இருந்தாச் சரி..."

"இப்ப என்ன பாடம். தமிழா? தமிழ் வாத்தியார் வாறார். ஒருகிழமையா ஆள் வரேல்லை. அவற்றை உடம்பு சரியாக் கொட்டிண்டு கிடக்கு. காச்சலாக்கும்..."

கிருஷ்ணிதான் தொடர்ந்து கதையளந்தாள்.

"தமிழ் வாத்தியார் ராமலிங்கம் நல்லவர். ஏழைப் பிள்ளையளில அவருக்குச் சரியான விருப்பம். இரக்கம். அட்சரம் தப்பாத உச்சரிப்பு. அவர் எந்தக் கஷ்ட மான பாடத்தையும் விளங்கிறமாதிரிப் படிப்பிப்பார். அவர் எது சொன்னாலும் புதிசு புதிசா இருக்கும். படிப்பிக்கேக்கை எட்டாம் வகுப்பு எண்டதை மறந்திடுவார். பெரிய பெரிய விஷயங்களைப் பற்றி எல்லாம் சொல்லுவார். சொல்லேக்கை எங்களுக்கு விளங்கிறமாதிரிச் சொல்லுவார்."



கிருஷ்ணியின் வாயூறலும் சளசளப்பும் எனக்கு எரிச்சலைத் தருகுது.

வகுப்பறைக்கு வந்த வாத்தியார் - வணக்கம் சொல்லிப்போட்டு - தமிழ்ப் புத்தகத்தை எடுத்தார்.

"ஐந்தாம் பாடமா... அட பாரதியா... பாரதி யின் இலட்சியப் பெண்...!"

தேன்குடிச்ச நரியாட்டம் இளிச்சபடி நிண்டவர், ராதிகாவின்ரை குரலைக்கேட்டு, அவளது பக்கமாகத் திரும்பினார்.

"இந்த அகதிச் சனியன் சத்தி எடுத்திட்டா, வகுப்பு முழுதும் நாறுது... இஞ்ச இருக்கேலாது சேர்...!"

"ஆரது... எந்தப் பிள்ளை...? அகதி, சனியன் எண்டெல்லாம் சொல்லப்படாதம்மா. நாங்கள் எல்லாரும் அகதிகள்தான். தொண்ணூற்றைஞ்சு ஐப்பசி மாசத்தை மறக்கேலுமா...?

"ஆளார்... பிள்ளை எழுந்திரும்..."

நான் மசிண்டிக்கொண்டு எழுந்து நிண்டன்.

"என்ன பேரம்மா உமக்கு...?

"யசோதா..."

"இடம் பெயர்ந்து வன்னியில எங்க இருந்தனீங்க...?"

"புதுக்குடியிப்பில."

"இஞ்சை எந்த இடம்?"

"கட்டுவன்"

"அங்க போகேலாது. அவங்கட அதி பாதுகாப்பு வலயம் எண்ட கோதாரி. எங்கட மண்ணில அவங்கட நாட்டாண்மை வலுத்திட்டுது... ஹூம்... என்னசெய்யேலும்."

வாத்தியார் முணுமுணுத்தார்.

"இப்ப, இவ இருக்கிறது கொட்டு தோட்டப் பக்கம். முத்துமாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில..."

கிருஷ்ணிதான் திரும்பவும் என்ரை உதவிக்கு வந்தாள்.

"சேர்! யசோ காலையில சாப்பிடேல்லை... வெறும்வயிறு... அதுதான் சத்தி எடுத்தவ. அதைத்தான் இந்தக் கோள்குண்டணி சொண்டு உரைஞ்சிறா."

என்னைப் பார்த்த கிருஷ்ணி மனசிளகிச் சிரிச்சாள்.

கண்கலங்கியபடி, கிருஷ்ணியை அன்போடை பார்த்தன்.

"அதுசரி பிள்ளை, உங்களுக்கு உலர் உணவு, அது இதெண்டு கிடைக்குமே..."

"இவை வந்து மூண்டு கிழமைதானாகுது. விதானையார் இழுத்தடிக்கிறார். நல்ல விதானையும் பானையும். உந்தக் குறளி ராதிகாவின்ரை அப்பாதான் விதானை."

கிருஷ்ணி பொரிந்து தள்ளினாள்.

"கிருஷ்ணி பெரியாக்களை இப்பிடிப் பேசப்படாது பிள்ளை. அதுசரி, குடும்பத்திலை நீங்க எத்தனை பேர்..."

"அம்மா, தங்கச்சி, நான்."

"அப்பா...?"

"தொண்ணூற்றேழில, வள்ளிபுனம் பள்ளிக்கூடத்தடியில, பொம்மர் அடிச்சது. அப்ப குண்டுபட்டு, அப்பா செத்துப்போயிட்டார்."

வகுப்பு இறுகி, உறைஞ்சுபோனது. எல்லாப் பிள்ளையளும் கண்கொட்டாமல் என்னையே பார்த்தபடி இருந்தினம்.

அப்ப, இரண்டாம் பாடவேளை மணி அடிச்சது.

இனி, கணக்குப்பாடம். வகுப்புக்கு நண்டு வரப்போகுது. எங்கட கணக்கு ரீச்சர மிஸ்ஸிஸ் தம்பையா. அவவுக்கு நண்டு எண்டு பட்டப் பேர். அந்தப் பேரை வைச்சது கிருஷ்ணிதான். பட்டப்பேர் வைக்கிறதிலை அவள் சரியான விண்ணி.

கால்கள் அகலவைத்து, தனது கனத்த உடம்பை அசைக்க முடியாமல் - தம்பையா அரக்கி அரக்கி நடந்து வாறது, சினை நண்டு வாறதுபோல இருக்கும்.

வகுப்பில கணக்குச் செய்யேக்கை பிழை விட்டா, நண்டு - துடையில, சள்ளையில, சொக்கேல எண்டு கோலிக் கோலி நுள்ளும். நுள்ளின இடத்தில இரத்தம் வரும்.

அதின்ரை தண்டனைமுறை எல்லாம் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறும். சில வேளையில நெஞ்சிலையும் முதுகிலையும் மூசிமூசிக்குத்தும். மூச்சு அடைக்க அடைக்க இந்தக் கூத்து நடக்கும். கொலைபாதகி, யமன்ரை தங்கச்சி எண்ட பேரும் அதுக்கு வலு பொருத்தம்.

அதுகிட்ட வந்தா, எங்களுக்குத் தெரிஞ்ச கணக்கும் தெரியாமல் போயிடும். அதுக்கு உடம்பு முழுக்கக் கண். மனசை உள்ளாலை பார்த்து, எங்கடை கள்ளமெல்லாத்தையும் சட்டெனக் கண்டுபிடிச்சிடும்.

என்ரை குட்டெல்லாம் உடையப் போகுது எண்ட பயம் எனக்கு. ராதிகாவிலையே என்ரை கவனம் முழுக்க இருந்தது. புத்தகப் பையைத் திறந்து, கணக்குப் புத்தகத்தை அவள் வெளியில எடுத்தாள். புத்தகத்தோடை சாப்பாட்டுப் பெட்டியும் தட்டுப்பட்டு, வெளியில வந்து விழுந்தது. விழுந்த வேகத்தில பெட்டி திறந்திட்டுது.

ராதிகா டான்சாடத் தொடங்கினாள். வகுப்பறைக்கு வந்த நண்டைப் பார்த்து, கத்தினாள்.

"ஆரோ அம்புலோதிப்பட்டது என்ரை சாப்பாட்டைத் திருடித்திண்டிட்டுது ரீச்சர்....!"

"எரிமலை புகையிது. கொதிகுழம்பு வெளியில வருகுது. பட்டென வெடிச்சுச் சிதறப் போகுது. கவனம். ரெடியாய் இரும் யசோதா!"

கூறின கிருஷ்ணி, என்னைப் பார்த்து - உதடுகளைக் குவித்து - ஒரு கள்ளச் சிரிப்புச் சிரித்தாள்.

நடந்து வந்த களைப்பு... அதோட ராதிகாவின்ரை கூச்சலும் சேர, நண்டு கோபத்தில அதிர்ந்தது. கண்களை அகல விரித்து ஒரு பார்வை பார்த்தது. இமை வெட்டாத அந்தப் பார்வை என்னை நிலை குலையச் செய்தது.




**அப்பால் தமிழ்**

பாரிஸ் கதைகள்

இத்தொகுப்பில் பிரான்சில் வாழும் தமிழ்ப் படைப்பாளிகள் 1980க்கும் பின்னால் எழுதிய 15 கதைகள் இணைக்கப்பட்டுள்ளன.

தொகுப்பாசிரியர்: கி.பி.அரவிந்தன்

தொடர்புகளுக்கு:

***Appaal - Tamil Publications and Book Distribution***
***465, Kandy Road,***
***Trincomalee,***
***Sri Lankan.***

பயத்திலை, எனக்கு மூத்திரம் வந்தது. கையை உயர்த்தி, சுட்டுவிரலை நண்டுக்குக் காட்டிப்போட்டு, ஒண்டுக்கு இருக்க ஓட்ட மெடுத்தன்.

திரும்பிவந்து பார்த்தா - வகுப்பறை அமைதியாக இருந்தது. நண்டுக்கு எல்லாமே விளங்கி இருக்கவேணும்.

"வந்த மூண்டு நாளாகேல்லை, உனக்குத் திருட்டுச் சாப்பாடு வேணுமா? கழுதை, குட்டிப் பிசாசு, தட்டுவானித் தேவ..."

கெட்ட வார்த்தையள் அதுக்குத் தண்ணி பட்டபாடு.

ராதிகாவின்ரை பார்வையில மட்டும் ஒரு குரோதமிருந்தது. உதடுகளில லேசான ஏளனச் சிரிப்பும் குமிழிட்டது.

நண்டின்ரை மனசை ஆழங்காணே லாது... எப்ப என்ன செய்யுமெண்டு சொல்லேலாது....

"உங்களை அடிச்சுச் சரிவராது. உங்களுக் குத் தோல் தடிச்சுப்போச்சு. புதிசா ஏதாவது உறைக்கிறமாதிரிச் செய்யவேணும். வெக்கத் தில இனி இந்த மாதிரி எளிய வேலையளைச் செய்யாத அளவுக்கு அது இருக்கவேணும்."

கூறின நண்டு, என்னைத் தரதரவெண்டு, தன்ரை மேசையடிக்கு இழுத்துக்கொண்டு போனது.

அதுக்குக் கோபத்தில மூச்சுமுட்டி, ஈழை மாதிரி இழுத்தது. தரையில விழுந்த மீன் கணக்கா வாயை மூடிமூடித் திறந்தது. பின்னாலை கூச்சலிட்டது:

"டிசிப்ளின்... டிசிப்ளின்.... டிசிப்ளின்... அது இல்லாமல் படிப்பெதுக்கு, குப்பையில கொட்டவா?"

அதிர்ந்த உடலை ஆறுதல்படுத்திக் கொண்ட நண்டு, தான் கொண்டு வந்திருந்த பிறிஸ்ரல் போர்ட் ஒண்டை எடுத்து, சரிபாதி யாக மடித்துக் கிழித்து, அதில கறுப்பு ஃபெல் பேனையால தன்ரை கிறுக்கல் எழுத்தில ஏதோ எழுதினது:

'நான் கள்ளச் சாப்பாடு தின்னிற பட்டி னிப்பட்டாளமாம். எனக்குப் பகாசுரப் பசியாம். அண்டா அண்டாவாகச் சாப்பிடுவனாம். சாப்பிட எனக்குக் கொட்டிக் கொடுக்க வேணு மாம்.'

எழுதின போர்ட்டைத் துளையிட்டு, நூல்கட்டி, என்ரை கழுத்தில மாட்டிவிட்ட நண்டு; பள்ளிக்கூடத்தைச் சுற்றி வரும்படி கட்டளை இட்டது.

நான் அசையாமல் விறுமன் கணக்கா நிண்டன்.

அதைப் பார்த்துக் கோபங்கொண்ட நண்டு,




**சமாதானமும் ஊடகங்களும்**

22.05.2004 அன்று திருகோணமலையில் சமாதானமும் ஊடகங்களும் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் வெளியிடப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு இந்நூலாகும்.

தொகுப்பு: ஏ.யதீந்திரா

வெளியீடு:
சமூக அபிவிருத்தி ஆய்வு நிறுவனம்
188/1 லோவர் வீதி,
உவர்மலை,
திருகோணமலை.

ஓடிவந்து என்ரை முதுகில ஒரு குத்துவிட்டது. தளம்பி விழப்போன நான், மனசுடைஞ்சு அழுதபடி, மெதுவாக நடக்கத் தொடங்கினன். கூட, நிதியும் என்னோடை வந்தாள்.

நான் பக்கத்து வகுப்பறையள், விஞ்ஞான கூடம், நூலகம் எண்டு நடந்து, விளையாட்டு மைதானத்தை அடையேக்க, அங்கு விளை யாடிக் கொண்டிருந்த பிள்ளையள் எனக்குப் பின்னாலை ஓடிவந்தினம். அவையளுக்கு இது புதினமா இருந்திருக்கவேணும்.... ஆனா, எனக்குச் சீலைகழண்ட வெக்கமாயிருந்தது.

எனக்கு ஏன் இந்தத் தண்டனை...? நாலு பேர் பகிடி பண்ணிறமாதிரி... நண்டை வட்டாரியாலை - கூரை நல்லாத் தீட்டிப்போட்டுக் குத்தவேணும்... ரத்தம் சொட்டச் சொட்டக் குத்தவேணும்....

மனம் கறுவிக்கொண்டது.

அதிபர் அலுவலகத்துக்கு முன்னாலை வந்தபோது, வெளிய வந்த அதிபர், கொடுப்புக் குள்ள சிரிச்சது தெரிஞ்சது.

"மிஸ்ஸிஸ் தம்பையான்ர வகுப்பா?"

"ம்..." நிதி தலையாட்டினாள்.

"நாளைக்கு அசெம்பிளியிலயும் இவவை நிறுத்தவேணும்..."

தம்பையா நண்டெண்டால், இது நரி. உலாந்தா மாதிரி வளர்ந்து, சின்னத் தொந் தியைத் தடவினபடி அது நிண்டது.

எரிச்சலுடன் அதைப் பார்த்தும் பாராத மாதிரிக் காறித் துப்பினன்.

மனிசனுக்கு விளங்கினமாதிரித் தெரி யேல்லை. அவரது கவனமெல்லாம் பிள்ளைய ளுக்கு வலைப்பந்தாட்டம் பழக்கிற பவானி ரீச்சரின் குதிப்பிலும் மதமதப்பிலுமிருந்தது.

குட்டைபிடிச்ச சனங்கள். இனி இந்தப் பள்ளிக்கூடப் பக்கம் வரப்படாது. செல்வரா சண்ணற்ரை தோட்டத்தில அம்மாவோடை வேலைக்குப் போகவேணும்.

மனசு தீர்மானித்துக்கொண்டது.

தம்பிமுத்து மண்டபத்தைக் கடந்து, நடந்த போது - தெரிஞ்ச... தெரியாத ஆசிரியர்களும் ஆசிரியைகளும் வகுப்பறையைவிட்டு வெளி யவந்து, விடுப்புப் பார்த்தினம். அவையளுக் குப் பின்னாலை வகுப்புப் பிள்ளையள், பெரிய வகுப்பு அக்காமாரும் ஒருத்தரை ஒருத்தர் இடிச்சு இடிச்சு ஏதோ சொல்லிச் சிரிச்சினம்.



என்ன விண்ணாணம் பார்க்கினையோ தெரி யேல்லை.

அருணாசலம் மண்டபப் பக்கமா வாறன். அப்ப தயாரீச்சரும், அமலன்சேரும் வாறது தெரியுது. பின்னாலை, தமிழ் வாத்தியார் ராமலிங்கம்சேர் ஓடிவாறார்.

அமலன் சேர் என்னமோ சொன்ன மாதிரி இருந்தது:

"திஸ் இஸ் ரூ மச்... எ ப்பாட் பிறிசிடெ

னஸ்..."

ஆங்கிலத்தில சொன்னதாலை எனக்கு விளங்கேல்லை. தயா ரீச்சர் கலங்கிப் போய் என்னை அணைத்துக்கொண்டா. அவவின்ரை கண்கள் கலங்கி இருந்தன.

"என்னம்மா இது....?"

ராமலிங்கம் சேர் அழுவாரைப்போலக் கேட்டார்.

நிதி பதில் சொன்னாள்:

"தம்பையா ரீச்சர்தான் அனுப்பினவ..."

"இவ என்ன வாத்தி... பெரியபட்டதாரி... டிப்ளோமா... கல்வி உளவியல், அது இதெண்டு படிச்சுக் கிழிச்சிருப்பா... ஓகோ.... அவவுக்குப் பகுதித் தலைவர் எண்ட மிதப் பாக்கும். விசர்க்குடுக்கை. இதுகள் பிழை யெண்டு ஏன் இவவுக்குத் தெரியேல்லை... பிள்ளையளின்ரை சமூக நிலையை அறிஞ்சு உதவி செய்யிறது தானே வடிவு.."

இயல்புக்கு மாறாக வாத்தியார் உரத்துப் பேசினது போலத்தான் எனக்கு இருந்தது.

அவசர அவசரமா என்ரை கழுத்தில கிடந்த பிறிஸ்ரல்போர்ட்டைக் கழட்டி, கிழித்துத் தூரவீசினவர், நிதியிற்ரைக் கூறினார்:

"இவவின்ர புத்தகங்களை எடுத்துக் கொண்டு வாரும். இவ வீட்டை போகட்டும். அதிபரிட்டை நான் சொல்லிறன்."

நன்றி உணர்வு கண்களில் மின்ன, தமிழ் சேரைப் பார்த்தன். அவர் என்ரை கையைப் பிடிச்சு, தன்ரை வகுப்பறைக்குக் கூட்டிக் கொண்டு போனார். எவ்வளவு நிதானம் இவர். ஏதேன் பிழை எண்டா நல்ல மனிசருக்குத்தான் இப்பிடிக் கோவம் பொதுக்கொண்டு வரும் போல....

தூரத்திலை, நிதி புத்தகப்பையோட ஓடிவந் கையைப்பிடிச்சு கனிவாய்ச் சொன்னாள்:

"பயப்பிடாதையும்....நாளைக்குப் பள்ளிக் கூடத்துக்கு வாரும்... கட்டாயம் வாரும்... இண்டைக்கு நடந்ததை மறந்திடும்..."

அவளது குரலில் அழுகை இருந்தது.

புத்தகப்பையை வாங்கிக்கொண்டு, பள்ளிக் கூடத்தைவிட்டு வெளிய வந்தன்.

என்னில் எனக்கே வெறுப்புவந்தமாதிரி இருந்தது. தனிய விடுபட்டுத் தவிக்கிற மாதிரி இருந்தது. பசியிலதானே செய்தனான். இது பிழையா..? கெட்டபழக்கமா...? பசி... பசிக் கொடுமையிலதானே இப்படி நடந்திட்டுது.

நல்ல வெய்யிலடிக்குது. அனல்காத்தும் வீசுது. நாவறண்டு போனமாதிரி இருக்குது. செல்வராசா அண்ணற்ற தோட்டத்தில தண்ணி அள்ளிக் குடிக்கவேணும். தாகம் தீரக்குடிக்கவேணும். இந்த அவமானத்தில, நெருக்குவாரத்தில இருந்து விடுதலை கிடையாதா..? ஆயிரம் பேர் படிக்கிற பள்ளிக் கூடத்தில - ராமலிங்க வாத்தியார், அமலன் சேர், தயாரீச்சர், நிதி, கிருஷ்ணி இவை மட்டும்தான் எனக்காகக் கலங்கிற மாதிரி இருக்கு... இவை மட்டும் போதுமா...? செத்தி டலாம்போல இருக்கு. சாகப்படாது. ஏன் சாகவேணும். அம்மாவை, தங்கச்சியை விட்டிட்டு எப்பிடி...? பள்ளிக்கூடம் போகாமல் விடுவம். போனால்தானே கெட்டபேரும் கிரிசைகேடும்.

நினைவுகளோடை, மில்லடி ஒழுங்கைக்கு வந்திட்டன். மில்லைக் கடந்து, கொட்டு தோட்டத்தடியிலை வரேக்கை, தண்ணி குடிப் பம் எண்டு கிணத்தடிப் பக்கம் போனன். தமரோன் மணத்தது. செல்வராசா அண்ணர் தோட்டத்தில மிளகாய்க் கண்டுகளுக்குப் பூச்சி மருந்து அடிக்கிறது தெரியுது. அவர் தூரத்தில, தோட்டத்துக்குத் தெற்குத் துண்டில நிக்கிறார்.

கிணத்தில தண்ணி அள்ளிக் குடிச்சுப் போட்டுத் திரும்பேக்கை, அது.... அந்தப் போத்தில் தெரிஞ்சது. தமரோன் போத்தில்.

போத்திலிலை மருந்து முக்காப் பதத்துக்கு இருந்தது. போத்திலைக் கையில எடுத்தன்; எடுத்ததும் அந்த எண்ணம் என்ரை மனதில ஊடுருவியது. எல்லாமே சடுதியில நடந்தது. ஒரு வேகத்திலை என்னை மறந்த நிலையில, மூக்கைப் பொத்திக் கொண்டு லபக்கென மருந்தை விழுங்கினன். தொண்டை எரிஞ்சது. நெஞ்சும் எரிஞ்சது. குடிச்சபிறகுதான் மூளைக்கு ஏதோ வெளிப்பு வந்தமாதிரி இருந்தது. இனி என்ன... சாகவேண்டியதுதான். விக்கலோடை அழுகை வந்தது. உயிராசை மனசைக் குடைஞ்சது.

மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில அம்மா வாறது தெரியுது. இடுப்பில தங்கச்சி.

ஓடிப்போய் அம்மான்ரை கையை எடுத்துக கொஞ்சினன்.

குனிஞ்சு என்னைப் பார்த்த அம்மா,"ஏன் பள்ளிக்கூடம் முடியமுந்தி வந்தனி..?" எண்டு கேட்டா.

பதிலென்ன சொல்லேலும். புத்தகப் பையை அம்மாற்றைக் குடுத்திட்டு தங்கச் சியை வாங்கி அணைச்சுத் தூக்கிக் கொண்டு நடந்தன்.

வீட்டுப்படலையடியில வரேக்கை நெஞ்சு அடைச்சது. மூச்சுவிட முடியேல்லை.... கால் தடக்கின மாதிரி இருந் தது. லேசா நுரை வாயில வழிஞ்சது....



நிலைதடுமாறி விழப் போன என்னை, அம்மா அணைச்சுக்கொண்டா. புத்தகப் பையோடை தங கச்சியையும் வாங்கிக் கொண்டா.

"என்ன... உன்னில பூச்சிமருந்து மணக்குது."

"அம்மா நான்...நான் தமரோன் மருந்தைக் குடிச்சிட்டன்...."

"அடிபாதகத்தி, என்ன செய்து போட்டை...."

அம்மா பதறி அழுதா.

செல்வராசா அண்ணர் ஓடிவாறது தெரியுது. ஆனால் மங்கலாய்த்தான். நினைவு இழந்து கொண்டு போவதுபோல இருந்தது. எல்லாமே ஒளியில்லாமல் இருளாய் இருந்தது.

"நான் செத்துப் போவனா..?" மனசு அடிச் சுக்கொண்டது.

"ஆள் அம்மனிட்டைப் போய்விடுவா போலத் தான் இருக்கு. மூச்சுப் பேச்சில்லை.... எதுக்கும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு போவம்."

செல்வராசா அண்ணற்ரை குரல் கன விலை... தூரத்தில கேக்கிறமாதிரி இருந்தது.

'கெதியிலை கொண்டு போங்களேன்' எண்டு கத்தவேணும்போல இருந்தது... ஆனால் முடியேல்லை.

அம்மா கதறிக் கதறி அழுகிறா. கூடத் தங்கச்சியும் அழுகிறா...

"பயப்பிடாதையும்... நாளைக்குப் பள்ளிக்கூடத் துக்கு வாரும்... கட்டாயம் வாரும்...."

கிருஷ்ணியின்ரை குரல், ஏதோ அதள பாதாளத்தில இருந்து ஒலிப்பதுபோல இருந்தது.

"கிருஷ்ணி...!"

அவளைக் கூப்பிட வேணும் போல இருக்கு... ஆனால் என்னாலை முடியா மல் இருக்கே....

(தொடரும்)

# அரசுசாரா நிறுவனங்கள் ஓர் அரசியல் ஊடறுப்பு

யதீந்திரா



இன்று மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரையில் அரசுசாரா நிறுவனங்கள் என்று சொல்லப்படும் (Non Governmental Organization - NGOs) தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் தலையீடும் தீர்மான மேலாதிக்கமும் அபரிமிதமானது. மூன்றாம் உலக நாடுகளை மையப்படுத்தி இத்தகைய நிறுவனங்கள் சுமார் 50000 அளவில் இயங்கு வதாகச் சொல்லப்படுகின்றது. இத்தகைய நிறுவனங்கள் உள்ளூர் சூழலில் உருவாகும் சிறு நிறுவனங்களின் (Local NGOs) துணை கொண்டு தமது திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றன. இதனை ஒரு வகையில் நவ காலனித்துவ அரசியலுடன் இணைத்தும் புரிந்துகொள்ளலாம். இவ்வாறான அரசுசாரா நிறுவனங்கள் குறித்த லத்தீன் அமெரிக்க ஆய்வுகள், இத்தகைய நிறுவனங்கள் குறித்து போராடும் தேசங்கள் விழிப்பாக இருக்க வேண்டிய அவசியப் பாட்டை வலியுறுத்து கின்றன. குறிப்பாக பொஷவியா, சிலே, பிரேசில், எவ்சல்வடோர் போன்ற புரட்சிகர அரசியல் மேலோங்கியிருந்த லத்தீன் அமெரிக்க தேசங்களில் இத்தகைய அரசு சாரா நிறுவனங்கள் புரட்சிகர அரசியலுக்கு எதிரான நடவடிக்கைகளில் மறைமுகமாக ஈடுபட்டதுடன், முற்போக்கு இயக்கங்களுட னும், மக்கள் இயக்கங்களுடனும் போட்டி யிட்டு அவற்றின் வீழ்ச்சிக்கு வழிவகுத்திருக் கின்றன.

லத்தீன் அமெரிக்க படிப்பினைகள் முன்னி றுத்தும் உண்மையின்படி எங்கெல்லாம் அரசுசாரா நிறுவனங்கள் ஆழமாகக் காலூன் றினவோ அங்கெல்லாம் முற்போக்கு இயக் கங்களும், சமூக இயக்கங்களும் மடிந்து போனதே வரலாறு. பத்துவருடகால அரசுசாரா நிறுவன நடவடிக்கைகள் குறிப்பிட்ட பகுதி யில் அல்லது குறிப்பிட்ட சூழலில் வாழும் இளைஞர்கள், பெண்களை அரசியல்

பிரக்ஞையற்றவர்களாக்குவதுடன். முற்போக்கு சிந்தனையற்றவர்களாகவும் மாற்றிவிடுகின்றன. நமது சூழலில் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் கிராமியச்சங்கங்கள் என்றும் மக்கள் மேம்பாட்டு நிலையங்கள் என்றும், வாசகர் வட்டங்கள் என்றும் செயற்பட்ட அமைப்புகள் யாவும் இன்று அரசுசாரா நிறுவன வழிமுறைக்கு மாற்றப்பட்டிருக்கும் நிலைமையை, மேற்குறிப்பிட்ட கருத்துக்களோடு இணைத்து நோக்கினால், அதன் உண்மைத்தன்மையை இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும்.

அரசுசாரா நிறுவனங்களின் அரசியல் உள்ளடக்கத்தையும், அவற்றின் புரட்சிகர எதிர்மறைமுக நடவடிக்கைகளையும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு, அவற்றின் தோற்றப் புள்ளியையும், படிமுறை சார்ந்த வளர்ச்சிப் போக்கையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. (வாசகர்கள் அரசுசாரா நிறுவனங்கள் என்பதை சர்வதேச அரசுசாரா நிறுவனங்கள் என்ற அர்த்தத்தில் கொள்ளவும் - INGOs) இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் யுத்த அனர்த்தங்களினால் சீரழிந்த மக்களின் வாழ்வியலை மீளக் கட்டியெழுப்பும் நோக்கிலேயே இவ்வாறான அரசுசாரா நிறுவனங்கள் உருவாக்கப்பட்டதாக, அரசுசாரா நிறுவன வழிமுறையில் உள்ளோர் கூறுகின்றனர். சர்வதேச அளவிலும், உள்ளூர் அளவிலும் யுத்தச் சூழலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மனிதநேய அடிப்படையில் உதவுவதே இந் நிறுவனங்களின் அடிப்படை இலக்கெனச் சொல்லப்படுகிறது. இடதுசாரி அறிஞரான 'ஹென்றி வெல்ட்மெயர்' அரசுசாரா நிறுவனங்களின் தோற்றப்பாடு குறித்து முற்றிலும் மாறுபட்ட அபிப்பிராயங்களை முன்னிறுத்துகின்றார். அவர் இத்தகைய நிறுவனங்களின் தோற்றப் புள்ளியை மூன்று விதமான பின்னணிகளை அடித்தளமாகக் கொண்டு இனங்காட்ட முற்படுகின்றார்.



"ஒன்று சர்வாதிகார ஆட்சிகளின்போது அவற்றிலிருந்து தப்புவதற்கு பாதுகாப்புமிக்க புகலிடங்கள் என்ற அடிப்படையில் இவ்வாறான நிறுவனங்கள் (INGOs) வடிவம் பெற்றமை, சர்வதிகார ஆட்சியுடன் முரண்பட்ட அறிவாளிகள் இவ்வாறான நிறுவனங்களை கைவசப்படுத்தினர். பின்னர் ஏகாதிபத்திய மேலாதிக்கத்திற்கு சவால்விடும் வகையில் பரந்துபட்ட மக்கள் இயக்கங்கள் எழுச்சி பெற்றபோது முற்போக்கு இயக்கங்களுக்கு மாற்றாக அரசுசாரா நிறுவனங்கள் பல்கிப் பெருகின. மூன்றாவதாக முதலாளித்துவத்தால் அடிக்கடி ஏற்படும் ஆழமான பொருளாதார நெருக்கடி களின்போது அறிவாளிகள், கல்வியாளர்கள், தொழில் நிபுணர்கள் வேலை இழக்கின்றனர் அல்லது அவர்களது சம்பளம் குறைக்கப் படுகின்றது. இந் நிலைமையைத் தணிக்கும் முகமாக மாற்று வேலை தரும் நிறுவனங்கள் என்ற அடிப்படையில் அரசுசாரா நிறுவனங்கள் உருவாகின்றன." இங்கு ஹென்றி வெல்ட்மெயர் முன்னிறுத்தும் மூன்று சூழ்நிலைகளும் வேறுபட்ட அரசியல் நலன்களைச் சார்ந்திருந்த போதும், மூன்றும் ஒரு பொதுப்புள்ளியில் சந்திககின்றன. அது மக்கள் மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவத்திற்கு எதிராக கிளர்ந்தெழுவதைத் தடுத்து, அவர்களை ஒரு வகையான சமரச அரசியல் கட்டமைப்புள் முடக்குவதாகும்.

உண்மையில் இவ்வாறான அரசுசாரா நிறுவனங்கள் (INGOs) ஆரம்பத்தில்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

மீள்கட்டுமானம், புனருத்தாரணம், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் போன்றவற்றை மையப்படுத்தித் தமது வேலைத்திட்டங்களை முன்னெடுத்தபோதும், காலப்போக்கில் முற்போக்கு இயக்கங்களால் முதன்மைப்படுத்தப்பட்ட "மக்கள் அதிகாரம்", "அதிகாரம் பெறச்செய்வது", "ஆண் பெண் சமத்துவம்", "நீடித்த நிலையான வளர்ச்சி", "கீழ் மட்டத் தவர்களைத தலைமைக்கு உயர்த்துவது," - போன்ற இடதுசாரிச் சொற்றொடர் களைத் தமக்கான சுலோகங்களாக மாற்றிக் கொண்டன. இத்தந்திரோபாயம் அதிகமான முற்போக்காளர்கள் கூட அரசுசாரா நிறுவன வழிமுறையை நோக்கி நகர்வதைச் சாத்தியப்படுத்தியது. இது பற்றி அமெரிக்க இடதுசாரி அறிஞரும் "லத்தீன் அமெரிக்காவில் நவதாராள வாதமும், வர்க்க முரண்பாடும்" என்ற நூலின் ஆசிரியர்களில் ஒருவருமான 'ஜேம்ஸ் பெட்ராசின்' ஆய்வு நோக்கு முக்கியமானது. அவர் கூறுவார்:

"1980களின் ஆரம்பத்தில் நவதாராளமயமாக்கலின்மீது எதிர்ப்பு அதிகரித்தவுடன் அமெரிக்க ஐரோப்பிய நாடுகள், ஐரோப்பிய அரசுகள், உலகவங்கி ஆகியவை அரசுசாரா நிறுவனங்களுக்கான தனது நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தன. நவதாராளவாத மாதிரியைக் கேள்விக்குள்ளாக்கும். சமூக இயக்கங்களின் வளர்ச்சிக்கும் அவற்றை ஒடுக்கும் மாற்று வடிவங்களாக சமூக நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதற்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது "தேசியம்" என்பதனை எதிர்ப்பது என்பதுதான், அரசுசாரா நிறுவனங்களும், உலக வங்கியும் ஒருங்கிணையும் மையப் புள்ளியாக இருந்தது. அரசுசாரா நிறுவனங்கள் ஒரு இடதுசாரிக் கண்ணோட்டத்துடன் சமுதாயத்தை ஆதரித்து மேலோட்டமாக அரசை விமர்சிக்க இதே காரியத்தை வலதுசாரிகள் சந்தை என்ற பெயரில் செய்தார்கள். உலக வங்கியும் நவதாராளவாத அரசுகளும் மேற்கத்தைய அடிப்படை நிறுவனங்களும் ஒன்றுசேர்ந்து பன்னாட்டு கழகங்களினால் (MNCS) பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூகசேவை மூலம் நஷ்டஈடு கொடுத்து தேசிய நல்வாழ்வுத் திட்டங்களை முறியடித்து வந்தன. வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால் ஒரு புறம் நவதாராளவாத அரசுகள் மேலே இருந்துகொண்டு சமூகங்களை நாசப்படுத்துவற்கான மலிவான இறக்குமதிகளை நாட்டினுள் குவித்து, வெளிநாட்டுச் செலாவணியை அதிகரித்து தொழிலாளர் நலனுக்குரிய சட்டங்களை நீக்கி. குறைந்த கூலிக்கு உழைப்பவர்கள் வேலையில்லாதவர்கள் என்று நாளுக்கு நாள் பெரும் கூட்டத்தை உருவாக்கிவிடுகின்றன. மறுபுறம் அரசுசாரா நிறுவனங்கள் "சுய உதவித்திட்டங்கள்" "பரவலான கல்வித் திட்டம்", "வேலைப் பயிற்சி" ஆகியவற்றை வழங்கி ஏழைகளுள் சிறுசிறு குழுக்களை உருவாக்கி உள்ளூர் தலைவர்களுடன் ஒத்துழைக்கச் செய்து, அமைப்புக்கு எதிராக




**மற்றுமொரு மாலை**

*"இன்று நலிந்து இனிப்பிறக்கும் நாளையிலும்*
*பிஞ்சுகள் விழலாம் பூக்கள் உதிரலாம்*
*கஞ்சியும் இன்றி வாழ்க்கை ஓடலாம்*
*நெஞ்சுகள் நிமிர்த்தயென் பேரன் பிறப்பான்"*

இதுபோன்ற நம்பிக்கை தரும் கவிதைகளின் தொகுப்புநூல் இது. 'மற்றுமொரு மாலை' தொகுப்பு நல்ல கவிஞர்களின் வருகையை நமக்கு உணர்த்துகின்றது.

ஆசிரியர்: செ.சுதர்சன்

வெளியீடு:

ஏகலைவன் வெளியீடு.
சிவசம்புப் புலவர் வீதி,
உடுப்பிட்டி.

எழக்கூடிய ஒருங்கிணைந்த போராட்டங்களை ஒடுக்கிவிடுகின்றன. துரதிஸ்டவசமாக இடதுசாரிகள் பலரும் மேலிருந்தும், வெளியிலிருந்தும் செயல்படும் நவீன தாராளமய வாதத்தை (சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி) மட்டுமே மையப்படுத்தினார்களே ஒழிய அடியிலிருந்து (அரசு சாரா நிறுனங்கள் மூலம்) எழும் நவீன தாராளமயமாக்கலை விட்டுவிட்டார்கள். இந்தத் தவறு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் பல முன்னாள் மார்க்ஷிஸ்டுகள் மற்றும் இடதுசாரிச் செயற்பாட்டாளர்கள் அரசுசாரா நிறுவன வழிமுறைக்கு மாற்றப்பட்டுவிட்டதுதான்" (நமது சூழலில் தற்போது இலங்கை முழுவதையும் மையப்படுத்திய அளவில் இயங்கும், முக்கியமான அரசுசாரா நிறுவனங்களின் இயக்குநர்கள் பலர், முன்னைநாள் மார்க்ஷிஸ்டுகள் என்பதை இதனுடன் இணைத்துப் புரிந்து கொள்ளலாம் - கட்டுரையாளர்)

3

இலங்கையைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ மூவாயிரம் அரசுசார்பற்ற நிறுவனங்கள் இருப்பதாக ஒரு கணிப்பீடு (2000) தெரிவிக்கின்றது. (சர்வதேச, உள்ளூர் நிறுவனங்கள் அடங்கலாக) தற்போது மேற்படி எண்ணிக்கை இன்னும் சில நூறுகளால் கூடியிருக்கலாம். தமிழர் தேசத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய ஐ.என்.ஜி.ஓக்களின் சமூகத் தலையீடு எத்தகையது? அவற்றின் வேலைத் திட்டங்கள் என்ன? அதன் சாதக பாதக விளைவுகள் என்ன? என்பவை விரிவான ஆய்வுக்குரிய விடயங்களாகும். தமிழர் தேசியத்தைப் பலப்படுத்த வேண்டுமென்பதில் அக்கறையுடைய புத்திஜீவிகள் அப்படியொரு ஆய்வை நோக்கிச் செல்லவேண்டிய தேவைப்பாடு அதிகமாகவே இருக்கிறது. ஆனால் எமது பல்கலைக்கழக புத்திஜீவிகள் கூட என்.ஜி.ஓக்களின் கவர்ச்சி நிலைக்கு ஆட்பட்டிருக்கும் நிலையில், எத்தனை புத்திஜீவிகள் அப்படியொரு ஆய்விற்குத் தயாராகுவார்கள்? என்பதும் கேள்விக்குரிய ஒன்றுதான். இன்றைய சூழலில் ஏனைய சமூகங்களோடு ஒப்பிடுமிடத்து, தமிழர் சமூகமே அதிகம் என்.ஜி.ஓக்களின் சார்பு நிலைக்குட்பட்ட சமூகம் என்பது ஒரு பொதுவான அபிப்பிராயம். இந்த அதிக சார்பு நிலைதான் என்.ஜி.ஓக்கள் குறித்த விழிப்பு நிலை அவசியம் என்பதையும் உணர்த்துவதாக இருக்கிறது. யுத்தம் இத்தீவின் சகல மக்களையும் பாதித்தது உண்மையானாலும் ஒப்பீட்டளவில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். பேரினவாத ஆக்கிரமிப்பும், அழித்தொழிப்பு யுத்தமும் தமிழர் சமூகத்தை அகநிலையில் மோசமாகச் சிதைத்தது. சுருங்கச் சொன்னால் பேரினவாதம் கட்டவிழ்த்த ஆக்கிரமிப்பு யுத்தம் தமிழர் சமூகத்தை ஒரு கையேந்தும் சமூகமாக மாற்றியது. இந்தப் பின்னணிகளைக் கருத்தில் கொண்டுதான் நாம் தமிழ்ச் சமூகத்தின்மீதான என்.ஜீ.ஓ. தலையீட்டினைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பொதுவாக என்.ஜி.ஓக்களின் வேலைத் திட்டங்கள் எல்லாமே புண்ணுக்குப் புனுகு தடவுவது போன்ற வேலைத்திட்டங்கள்தான். அதாவது புண்ணை மாற்றுவதற்கான வழியைக் காட்டாமல் அல்லது அத்தகைய வழியை நோக்கி நகராமல் வெறுமனே புண் மணமெழுப்பி விடக்கூடாது என்பதில் கவனம் கொள்ளும் வேலைத்திட்டங்கள். அதற்காக இத்தகைய நிறுவனங்களால் எந்த நன்மையும் ஏற்படவில்லையெனக் கூறுவதும் பொருத்தமானதல்ல. அபிவிருத்தி உட்பட சில நன்மைகள் ஏற்படத்தான் செய்கின்றன. குறிப்பாக தமிழ் மக்கள்மீதான மனித உரிமை மீறல்கள் சர்வதேச மயப்பட்டதற்கு இத்தகைய என்.ஜி. ஓக்களும், என்.ஜி.ஓ. நபர்களும் ஒரு முக்கிய காரணம் எனலாம்.

எனவே ஒரு இடதுசாரிக் கண்ணோட்டத்தில் "அரசுசாரா நிறுவனங்கள் ஏகாதிபத்தியக் கைக்கூலிகள்" எனக் கூறி ஒரேயடியாக நிராகரிப்பது பெரிய நன்மைகள் எதனையும் தந்துவிடப்போவதில்லை. அவ்வாறு நிராகரிப்பதுதான் பொருத்தமாக இருந்தாலும்கூட, ஒரு ஒடுக்கப்பட்ட தேசம், குறிப்பாக அகநிலையில் மோசமான சிதைவுகளை எதிர்கொண்டி

ருக்கும் தேசம் என்ற வகையில் நிராகரிப்பின் பின் எமக்குள்ள மாற்றுவழி என்ன? மாற்று வடிவங்கள் என்ன? என்பதும் முக்கியமான பிரச்சினையாகும். ஆனாலும் தமிழர் தேசியத்தை பலப்படுத்துவதில் அக்கறையுடையோர் இத்தகைய நிறுவனச் செயற்பாடுகள் குறித்தும் அவற்றின் அரசியல் உள்ளடக்கங்கள் குறித்தும் விழிப்பு நிலையில் இருப்பது அவசியம். அத்தகையதொரு விழிப்பு நிலையை முன்னிறுத்துவதுதான் இக்கட்டுரையின் நோக்கமுமாகும்.

4

முதலில் நாம் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். தமிழ்ச் சூழலை மையப்படுத்தி இயங்கும் எந்தவொரு சர்வதேச அரசுசாரா நிறுவனமும், தமிழர் தேசியத்திற்கோ, தமிழர் விடுதலைப்போராட்டத்திற்கோ ஆதரவானவையல்ல. ஆதரவு என்பதற்கு அப்பால் தமிழ் மக்களின் உணர்வு நிலைகளை ஓரளவிலாவது இத்தகைய நிறுவனங்களால் புரிந்துகொள்ளமுடியுமா? என்பதும் சந்தேகம் தான். இன்று சமாதானம் பற்றியும், மனித உரிமைகள் பற்றியும், முரண்பாட்டுத்தீர்வு பற்றியும் பிரமாண்டமாகக் பேசிவரும் எந்தவொரு சர்வதேச அரசுசாரா நிறுவனமும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக இதுவரை வாய்திறந்ததில்லை. அது பற்றி நாம் கேள்வி எழுப்பினால் அது ஒரு அரசியல் பிரச்சினை, உங்களது அரசியலில் நாங்கள் தலையிட முடியாதென நழுவிவிடுகின்றனர். தங்களின் வசதிகருதி சமாதான முன்னெடுப்புகளை அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகக்காட்ட முற்படுகின்றனர். உண்மையில் சமாதானம்வேறு அரசியல் வேறல்ல, இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. சமாதானமின்மைக்கான காரணம் ஆதிக்க அரசியலுடன் தொடர்புபட்டது. அந்த அரசியலை கேள்விக்குள்ளாக்காமல் அது பற்றி விவாதிக்காமல் வெறுமனே சமாதானம் பற்றிப் பேசுவது விழலுக்கு இறைத்த நீருக்கு ஒப்பாகும்.

இன்று எமது சூழலில் இயங்கும் சகல அரசுசாரா நிறுவனங்களினதும் பிரதான தங்குமிடம் சமாதானத்திற்கான வேலைத் திட்டங்களாகும். அபிவிருத்திப் பணிகளில் மட்டுமே நாட்டமுடைய நிறுவனங்கள்கூட அபிவிருத்திப் பணிகளுடன் சமாதானம் குறித்த தேடலையும் இணைக்க வேண்டுமென வாதிடுகின்றன. சமாதானம் குறித்துப் பேசும் அரசுசாரா நிறுவனங்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் இரண்டு விடயங்களை முன்னிறுத்தி வருகின்றன. ஒன்று "வன்முறையற்ற செயற்பாடு" (Active Non Violence) மற்றையது "சிவில் சமூகத்தைப் பலப்படுத்துதல்" தமிழ்த்தேசிய கருத்து நிலையில் நின்று நோக்கினால் இவ்விரு விடயங்களினதும் அரசியல் சிக்கலுக்குரியதாகும். என்.ஜி.ஓக்களால் முன்னிறுத்தப்படும் வன்முறையற்ற செயற்பாடு என்றால் என்ன? விடுதலைப்புலிகள் காந்தியைப் போன்றோ அல்லது மார்ட்டின் லூதர் கிங்கைப் போன்றோ இந்தப்பிரச்சினையை அணுகியிருந்தால் அல்லது தற்போது அணுக முற்பட்டால் இத்தீவில் உடனடியாகவே சமாதானத்தைக் கொண்டுவரமுடியும் என்பதே இக்கோட்பாட்டின் சாராம்சம். அதாவது வன்முறையின் மூலம் (ஆயுதப்போராட்டத்தின் மூலம்) எதையும் சாதித்துவிட முடியாது என்பது தான் இக்கோட்பாட்டின் அரசியல் கருத்து நிலை. இங்கு புரட்சிகர அரசியலுக்கு மாற்றாக ஒரு சமரசவாத அரசியல் முன்வைக்கப்படுகிறது.

இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், மீண்டும் மீண்டும் சமாதானமின்மைக்கு அல்லது இனமுரண்பாட்டிற்கான காரணமாக ஒடுக்கப்பட்ட மக்கள் குறிவைக்கப்படுகின்றார்களே ஒழிய, ஒடுக்கும் அரசு (சிங்களமக்கள்) குறிவைக்கப்படவில்லை. ஒடுக்கும் அரசின் ஆதிக்கப் போக்கினையும், ஆக்கிரமிப்பு அரசியலையும் கேள்விக்குள்ளாக்காமல் மறுதலையாக ஒடுக்கப்பட்ட மக்களை சமரச நிலைக்குத் தள்ளுவதன் மூலமான இணக்கப்பாட்டை அல்லது தீர்வு முயற்சியைத்தான் அரசுசாரா நிறுவனங்கள்

முன்னிறுத்துகின்றன. இந்த இடத்தில்தான் அரசுசாரா நிறுவனங்களின் அரசியல் சார்பு நிலையும் அம்பலப்பட்டுப் போகிறது.

சிலவேளை தமிழ் மக்களின் பிரச்சனைகள் குறித்து சிறிலங்கா அரசும் அரசுசாரா நிறுவனங்களும் (INGOs) ஒரே திசை வழியில்தான் பயணிக்கின்றனவோ! என்றும் எண்ணத் தோன்றுகின்றது. சமீபத்தில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் வடக்கு கிழக்கு தமிழ் இளை ஞர்கள், யுவதிகள் பேசித் தீர்க்க வேண்டியதொரு பிரச்சினைக்காக ஆயுதத்தைத் தூக் கிப் பெரும் அழிவை ஏற்படுத்திவிட்டார் கள் என்று கூறியி ருந்தார். இக்கருத்து நிலைக்கும் அரசு சாரா நிறுவனங்களின தீர்வு யோசனைக் கும் இடையில் பெரிய வித்தியாச மில்லை.



இதே போன்றுதான் சிவில் சமூகத்தை உருவாக்குதல் என்பதும் சிவில் சமூக உருவாக்கம் என்பதும் எதிர்க்கக்கூடிய தொரு விடயமல்ல அது நல்ல நோக்கின் பாலானதாக இருக்குமானால். ஆனால் என்.ஜி.ஓக்களின் சிவில் சமூக உருவாக்கம் என்பது இராணுவச் சார்பற்ற சமூகத்தை உரு வாக்குதல் என்ற அர்த்தத்தில்தான் அணுகப் படுகிறது. தமிழ் தேசிய அரசியல் நோக்கில் இது மிகவும் சிக்கலுக்குரியதாகும். உண்மை யில் சிவில் சமூக உருவாக்கத்தின் விளைவு மக்களில் செல்வாக்குச் செலுத்தும் அரசிய லோடு தொடர்புபட்டது. இன்று சிங்கள மக்க ளுக்கும், தமிழ் மக்களுக்கும் உள்ள பிரதான வேறுபாடு, ஒடுக்கும் மக்களுக்கும் ஒடுக்கப் படும் மக்களுக்கும் உள்ள வேறுபாடாகும். ஆனால் அரசுசாரா நிறுவனங்கள் சமூக யதார்த்த நிலையைக் கருத்தில் கொண்டு நமது திட்டங்களை வடிவமைப்பதில்லை. மாறாக தாம் ஏலவே வைத்திருக்கும் முடிவு களை நியாயப்படுத்துவதற்கு ஏற்பவே திட்டங்களை வடிவமைக்கின்றன. இன்று சிங்கள மக்கள் ஆக்கிரமிப்பு அரசியலாலும் தமிழ் மக்கள் விடுதலை அரசியலாலும் வழிநடத்தப்படுகின்றனர். விடுதலை (போராட்ட) அரசியலால் வழிநடத் தப்படும் மக்கள் மத்தியில் இராணுவச் சார்பற்ற சமூக உரு வாக்கம் என்பது விடு தலைப் போராட்ட அமைப்பிற்கும், மக்களுக்கும் இடையில் பிரிவை (விரிசலை) உருவாக் கும் உள் நோக்கத் தைக் கொண்டதாகத் தான் இருக்க முடியும். ஏலவே நாம் பார்த்த லத்தீன் அமெரிக்க அனுபவங்களும் இதைத்தான் சொல் லுகின்றன. என்.ஜி.ஓக் களின் சிவில் சமூக உருவாக்கம், பற்றி 'ஜேம்ஸ் பெட்ராஸ்' கூறும்போது அரசு சாரா நிறுவனங்கள் அரசுக்கு எதிரான நட வடிக்கை, 'சிவில் சமூகங்களை உருவாக்கு தல்' என்ற பெயரில் சிறு முதலாளிகளுக் கும் தனியார் மயமாதலால் பயனடையும் ஏகச் சந்தையாளர்களுக்கும் இடையே ஒரு கொள்கை ரீதியான பாலத்தைக் கட்டி யெழுப்பின" என்பார். இது ஒரு மார்க்ஷியக் கண்ணோட்டத்திலான பார்வையாகும்.

முடிவாக.....

இது அரசுசாரா நிறுவனங்களின் அரசியல் உள்ளடக்கம் குறித்த ஒரு அவதானமே தவிர,

விரிவான ஆய்வல்ல. ஆனால் விரிவான ஆய்விற்கான அடித்தளத்தைக் கொண்ட தாகும். போதிய மாற்றுக்கள் இன்மையும், சமூக இயக்கங்களின் வீழ்ச்சியும் அரசுசாரா நிறுவனங்கள் பல்கிப் பெருகுவதற்கான வாய்ப்பை வழங்கின. வெளிநாட்டு நிறுவனங் களின் நிதி உதவிகள் அதிகரிக்கும் போதெல் லாம் அரசுசாரா நிறுவனங்கள் பெருகுகின் றன. நாம் தமிழ்ச்சூழலில் இந்நிலைமையை தெளிவாக இனம்காணலாம்.

மொத்தத்தில் அரசுசாரா நிறுவனச் செயற் பாடுகள் உலகமயமாக்கலின் நீட்சியையும், ஏகாதிபத்திய அரசியல் நலன்களையும் தன்ன கத்தே கொண்டதாகும். காரணம், இத்தகைய நிறுவனங்கள் (INGOs) சுயாதீனமானவை யல்ல. அரசுசாராதவை என்னும் சுயாதீன அடையாளத்தால் தம்மை இனம்காட்டிக் கொண்டாலும், அரசு சாராத நிறுவனங்கள் எவையுமே அரசு சாராதவை அல்ல. தமக்கு நிதி வழங்கும், தமக்கான கொள்கைகளை வகுக்கும் ஐரோப்பிய, அமெரிக்க அரசுகளின் ஆளுகைக்கு உட்பட்டவைகள். எனவேதான் ஒடுக்கும் அரசை கேள்விக்குள்ளாக்காமல், ஒடுக்கப்பட்ட மக்களை சமரச நிலைக்குள் அல்லது மெத்தனப் போக்கில் தக்கவைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றன. உள்நாட்டள விலான சர்வாதிகார நடவடிக்கைகளையும் மனித உரிமை மீறல்களையும் கண்டிக்கும் எந்தவொரு சர்வதேச அரசுசாரா நிறுவனமும் ஒடுக்கும் அரசுக்கு ஆயுத உதவிகளையும், இராணுவப் பயிற்சிகளையும், இராணுவத்திற் கான நிதி உதவிகளையும் வழங்கும் ஐரோப் பிய, அமெரிக்க அரசுகளை விமர்சிக்க முற்ப டாததன் காரணத்தையும் இந்தப் பின்னணி யின் ஊடாகத்தான் நாம் பார்க்கவேண்டும். எனினும் சில விதிவிலக்கான அரசுசாரா நிறு வனங்களும் உண்டு. அவை உலகவங்கி ஐ.எம்.எப். அமெரிக்க அரசு ஆகியவற்றின் நடவடிக்கைகளுக்கு எதிரான நடைமுறைகளைக் கொண்டவை. குறிப்பாக விடுதலைப்போராட்ட அமைப்புக்களுக்கும் புரட்சிர அரசியலுக்கும் ஆதரவானவை.

தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில் அரசுசாரா நிறுவனங்கள் நலிவுற்றோருக்கு உதவி வழங்குதல் என்ற அடிப்படையில் காலூன்றியிருக்கின்றன. நாம் அவற்றை உதவி பெறுதல் என்ற அடிப்படையில் அணுகுவது பிரச்சினையல்ல. ஆனால் இந்நிறுவனங்களின் அரசியல் குறித்த விழிப்புநிலை அவசியம். ஏனெனில் நாம் அறியாமல் நமது சூழலில் ஏதுவுமே நடந்துவிடப்போவதில்லை. ஆபிரிக்கச் சிந்தனையாளர் ‘அமில் கப்ரால்’ ஏகாதி பத்தியம் பற்றிய கருத்தாடல்களின் போது ஒரு ஆபிரிக்கப் பழமொழியை பயன்படுத் துவார். “அரிசி பானைக்குள்ளேதான் வேகிறது” உலகமயமாக்கல், ஏகாதிபத்தியம் இடைவெளி களை பயன்படுத்திக் கொள்ளுதல் அனைத் தும் நம்மைத் தாண்டியே நிலை பெறுகின்றன. (நடக்கின்றன) எம்மால் எதிக்கப்படவேண்டிய விடயம் குறித்த விழிப்புநிலையே எதிர்ப்பிற் கான அடித்தளமாகும். இது எல்லாவற்றுக் குமே பொருந்தும்.





**சுயம் நிர்ணயம் உரிமை**

ஆசிரியர்: பி.ஏ.காதர்

இச் சிறுநூல் சுயநிர்ணய உரிமை என்பதனை வரலாற்றுக் கண்ணோட்டத்திலும், சமூகவியல் கண்ணோட்டத்திலும் விளக்குகின்றது. ஆசிரியரின் நீண்ட அரசியல் அனுபவமும் படிப்பாற்றலும் இந்நூல முழுவதும் இழையோடியுள்ளதைக் காணமுடியும்.

*வெளியீடு:* அப்பால் தமிழ்

*தொடர்புகளுக்கு:*

***Appaal - Tamil Publications and Book Distribution***
***465, Kandy Road,***
***Trincomalee,***
***Sri Lankan.***

# இகழ்ச்சி அல்லது இளிவரல்

- கல்வயல் வே.குமாரசாமி



பனை பிடுங்கிப் பல்துலக்கும் பரம்பரையில் வந்தார்
புனை மனத்தைக் காணப்புகும்.

ஏடு பாடியது: இராவணன்
எல்லாம் முதலாம் நாள் போரில் இழந்துவிடக்
கொல்லாது விட்ட குலராமன் நற்குணத்தை;
வில்லால் நிகழ்ந்த விறுவிறுப்பை; பொல்லாப்பை
சொல்லி முடித்தும் முடியாத சோகத்தில்

மாலிய வானும் மகோதரனும் முன்னிருக்க
காலடியை நோக்கித் தலைகவிழ்ந்த வாறிருந்தான்.
மாலுகந்த ராவணனின் மானசிகப் போராட்டம்.
சோலிகளுக் கஞ்சாத தொல்லிலங்கை மன்னனுள்ம்
இனிப் போரை விடலாமா? இனிப்போரை விடுவோமா?
மனப்போரில்;

மகோதரனார் மாட்டி விட்ட ஊக்கமது
மயிர்க்கால் இடையூறி மீண்டும் மனைந்தோடி
ஆட்டிப் படைத்த அடிபட்ட நெஞ்சிடையே

இனிப்போரை முடிப்போமா? இவ்விளக்கை அணைக்க
இனிப் போரை முடிப்போமா? இவள் சிரிக்க விடலாமா?
தனிப் போரைத் தொடருவமா?
தனிப் போரைத் தொடங்குவமா?
தனிப்போரே தஞ்சமெனத்
தவிப்போரைக் கைவிட்டு
இனிப்போரைத் தொடர்வதெனில்
இலேசான காரியமா?
இனிப்போரை விடலாமோ?
இன்றைக்கும் திண்டாட்டம்
இது பலர்க்குக் கொண்டாட்டம்

எங்களுக்கோ மன்றாட்டம்

இப்படியே
பனிப்போரே தொடர்வதனால்
பகல் இரவாய் அழுகிறது.
இனிப் போரே! இனிப்போரே?
இனிப் போரே!! எது விருப்பம்
ஏடு பாடியது முற்றிற்று.
ஆக வருத்தம் இருபத்தொரு ஆண்டு அடிகள்

வீடு பாடியது
தலைவன் நெஞ்சொடுகிளத்தல்.
அல்லது சேவல் கூறியது.

இல்லத்தரசி;
அடைகாத்த முட்டைகளோ
அத்தனையும் கூழ்முட்டை
இடையிடையே தூக்கி யெறி
விடஇவளோ முட்டைகளைத்
தடையின்றி இட்டபடி
குனுகி அடைகிடப்பாள்

கன்னிப்பேடு, நீடு நினைந்திரங்கல்
முழு மதிப்பெண்கள் எல்லாம்
மூச்சினை அடக்கிக் கொள்ளும்
எழுமதிப் பெண்களாக
இரக்கிறார் இளைஞர் மோகம்.
வீடு பாடியது முற்றிற்று.
இனி; நாடு பாடியது.

கோவில் குருக்கள் கிரியா கலாபமணி
சீவக சிந்தா மணியாய்த் திகழ்கின்றார்.
பாவம் குமர்கள் பரிகாரம் தேடவந்து
நாவிடுங்கப் பட்டு நடக்க முடியாமல்.

மலடு தட்டி நிற்கின்ற மாடுகளைக் கொண்டுவந்து
விலைபேசு கின்ற தரகர் விளம்பரத்தில்
சைவருக்குத் தக்கபடி சாதகத்தை நீட்டுகிறார்.

நாளை நலமே எதிர்பார் நலம்புதுக்காக
காளைகளின் மூக்கு நுரைதள்ளி
மூச்சிரைக்க
வண்டிகளின் அச்சு முனகிடவே
மேடேற

வெண்டயங்கள் ஓசை கிளம்ப
வெளிக்கிட்டுவரக்
கொப்பு முறிந்து குறுக்கே கிடக்கிறது.
எப்படிப்போக?
பயணம் தடைப்பட்டு
நிற்கிறது பாதி வழியில்
நிலை வரத்தைப் பற்றிக் கதைக்கப் பயந்து
பசி அடக்கி
பற்றுக்கோடற்றுப்
பலரும் பல நினைக்கச்
சற்றும் மிரளாமல்;
சாதாரணமாக;
சீந்தில் கொடியும்
குருவிச்சைக் கொப்புகளும் ஏந்தி
முறிஞ்சுபோய் -
குழைப்பாரந் தாங்காமல் -
கொப்பு முறிந்து
குறுக்கே கிடக்கிறது.
கொப்பில் குடியிருந்த
கூகை, மரணாய், பருந்து
திக்குத் திக் காகப் பரந்து பறக்கின்ற
மாம்பழ வெளவால்கள், மந்திக் குரங்குகள்:



சூம் பல் உடம்போடும் சுற்றிவருந் தேவாங்கு,
ஊர் அடங்க எங்கும்
உலாவுகிற வல்லூறு
தீராக் கவலை தரத் தேயும் சமா தானம்
ஈர நெஞ்(சு) ஆடிக் கிணறாய்
அடியிடிந்து
வேர்மூலம் பற்றி விசனம் விடிவிடிய;
பூக்க இதழ் விரித்தாற் போலப் பார், யார் கிழித்த
தீக்குச்சி பற்றித் திடீரென்(று) எரிகிறது.

தொட்டியிலே இப்போது வீட்டுக்குள்
மீன்வளர்ப்பு
கெட்டித்தனம்தான்
கிறுகிறெண்டு ஒவ்வொன்றும்
கீழேபோய் மேலைவர; மேலிருந்து கீழவர
ஆழம் – அகலம்? அதற்குள்ளே நாள்முழுதும்
ஆடு வளர்ப்பிலே ஆதாயம் இல்லை என்று
பேடைஞ்சு சாவலொன்று கொண்டுவந்து விட்டிருக்கு
கால் நிலத்தில் வைக்க வயிற்றைக் குமட்டுகுது
வால் முளையா வெள்ளடியன் பேடு துரத்துகுது
முற்றத்து மண்கிளம்பிக்காற்றெடுத்து மூக்கிலிட
சுற்றுவட்டாரம் அதிரப் பெருந்தும்மல்.

2

## உறவு பாடியது.

என்னடா தம்பி எப்படிச் சுகங்கள்
எப்படா வன்னியால் வந்தாய்
பொன்னையா அம்மான் பொடியள் கந்தையர்
போயிலைச் சின்னரின் பேரர்
நன்னியர், முகத்தார், நல்லம்மாரீச்சர்
பாடுகள் எப்படி? என்ன?
சின்னையாக் குஞ்சி செத்துப்போனாரோ?
சிவசிவா சொல்லுசொல் ஐயோ!
எத்தனை கடிதம் கடிதமேல் போட்டம்
ஏன் பதில் எழுதலை எண்டால்
பத்திக் கொண்டுனக்கேன் வருகுது என்று
பலபட யோசித்தன் முன்னர்
சத்திய மாக இப்பதான் எனக்குச்
சங்கதி விளங்கு(து) உன் வீட்டுப்
பத்தியில் மரமும், வளைகளும், கதவும்
பரமனா பிடுங்கினான் இல்லை.

அயலவர், பேர்ஏன்? அனைவரும் சேர்ந்தே
ஆளுக்காள் பிடுங்கினர் நானும்
இயலும் என்றால்தான் தடுக்கலாம்; பின்னை
இரண்டொன்றை எடுத்தது பிழையோ?
வயல் வரம்பு அழிச்சுக் கொத்தி எல்லைக்கல்
வைச்சது மாத்தி; நான் எண்டும்
மயிலருக் கேதோ சொன்னியாம் நான் உன்
மண்ணுக்கும் ஊம்புவனோ சொல்.

கதைக்கலாம் எல்லாம் எழுதலாம் சும்மா
காரியம் செய்கையில் விதிவந்(து)
உதைக்கிற போதே உண்மைகள் விளங்கும்
உதுக்கெலாம் கலங்கிறாய் வீணாய்
விதைக்கிறதெல்லாம் முளைக்குமோ? முளைச்சு
விளையுமே? பேய்க்கதை வேண்டாம்.
வதைக்கிற தார்? ஆர் ஆரையார்?
கொஞ்சம், வந்தபின் ஆகுதல் சிந்தி.

கொழும்பிலை நான்வந் திருக்குதெண் டுனக்குச்
சொன்னதார்? கொடுத்ததார் விலாசம்?
எழும்பினால், இருந்தால், இறங்கினால் செலவை
எழுதினால் பிறெசர்தான் வாழ்க்கை
விளிம்பிலே கிடந்து தவிக்கிறம் விடிஞ்சால்
என்னென்ன வில்லங்கம் வருமோ?
தளம்பிறம் நித்தம் தயங்கிறம் நித்தம்
விற்றெல்லாம் ஊரை விட்டோடி

வேட்டியும் பீத்தல், சட்டையும் ஊத்தை
விரசன் போல் தாடியும் வள(ர்)த்துக்
காட்டு வா சியைப்போல்; வேலைகள்கிடக்கு
(இம் இம்) ம்... ம்...
என்னென்ன? காசு வேணும்மோ?
வீட்டிலே படுற பாட்டையார் அறிவார்
வெளியிலே கதைப்பதைக் கேட்டுக்
கேக்கிறாய் நீயும் கொட்டியே கிடக்கு
போட்டுவா போட்டு வா போ!.. போ!!.

உறவு பாடியது முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம்: –ဝ

கவிதை எழுதத் தெரியாத கம்பன் எழுத்தாணி வாழ்க.
பொன்னம்பல வடி கள் வாழ்க
இகழ்ச்சி ஒருவாறு முற்றுப்பெற்றிற்று

வடலி பல பெருக நெடிய பனை தழுவ
கடலின் அடி ஊடே புதிய கதிரெழுக.
□□

ஆடலிறை, திருச்செந்தூரன், பொய்கையார், செந்தூரான் ஆகிய புனைபெயர்களுடன் படைப்பிலக்கியத்துறையில் ஈடுபட்டுவரும் பி.நடராசன் 14.08.1939 இல் மயிலங்கூடலில் பிறந்தவர். விஞ்ஞானப் பயிற்சி ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்ற இவர் 1961 முதல் படைப்பாளியாகவும், பதிப்பாளராகவும், தொகுப்பாளராகவும், இதழாசிரியராகவும் இயங்கி வருபவர். சுதந்திரமாய்ப் பாடுவேன். (சிறுவர் கதைகள்), சிந்தனைச் செல்வர், பொ.கைலாசபதி: ஆக்கமும் ஆளுமையும் (தொகுப்பு), கைலாயமலை (பதிப்பு), கட்டுரைக்கோவை (வித்துவான் க.சொக்கலிங்கத்துடன் இணைந்து), தமிழியற் கட்டுரைகள் (கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவுடன் இணைந்து, இடப்பெயர் ஆய்வு (பதிப்பு) ஆகிய நூல்கள் இவரது கைவண்ணத்தால் ஆனவை.

தமிழரசுக் கட்சிப் பாசறையில் வளர்ந்த இவர் ஒரு தமிழ்த்தேசியச் சிந்தனையாளரும் ஆவார். ஈழத்துப் பதிப்பு மற்றும் தொகுப்பு முயற்சிகளில் இவரது பங்களிப்பு விதந்து குறிப்பிடத்தக்கது. சுதந்திரன் முதலாக ஈழத்துப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பலவற்றில் இவர் அரசியல், தமிழ் இலக்கியம், சிறுவர் இலக்கியம், வரலாறு உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகளையும், ஆய்வுகளையும், விமர்சனங்களையும் எழுதியுள்ளார்.



**மயிலங்கூடலூர் பி. நடராசன்**

# நேர்காணல்

**நேர்கண்டவர்: இயல்வாணன்**

***கேள்வி: பதிப்பு மற்றும் தொகுப்பு முயற்சிகளில் தங்களது பணி விதந்து குறிப்பிடப்படுகிறது. தமிழ் இலக்கண, இலக்கியச் சூழலுக்குள் எவ்வாறு நுழைந்து கொண்டீர்கள்?***

பதில்: ஆங்கில மொழி மூலம் கல்வி பயிலும் மாணவனாக இருந்து உயர் வகுப்பில் அறிவியல் பயின்றுகொண்டிருந்த நிலையி லும் மகாஜனக் கல்லூரியில் தமிழும் சமய மும் கற்பித்த ஆசிரியர்கள் மூலம் தமிழ்ப் பற்று ஏற்பட்டது. ஆசிரியர் கவிஞர் செ.கதிரே சர்பிள்ளை அவர்களின் வழி காட்டலில் பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் தொடர்ந்து கலந்துகொள்ள முடிந்தது. அயலவரான பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின் தொடர்பால் இளமையில் நல்ல தமிழ் நூல்களைத் தொடர்ந்து படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. உயர் வகுப்பு அறிவியற் கல்வியை இடையில் நிறுத்த நேரிட்டது. இக்காலத்தில் கவிதை எழுதினேன். கவிதைகளோடு கவிஞர் கதிரேசர்பிள்ளை அவர்களிடம் சென்றேன். அவர்கள் யாப்பியல் கற்பித்துக் கவிதை எழுத வழிகாட்டினார்கள். தொடர்ந்து விழிசிட்டியில் பண்டிதர்களிடம் தமிழ் பயில முடிந்தது. அங்கு கற்பித்த பண்டிதர் வே.சங்கரப்பிள்ளை மல்லாகம் பண்டித வகுப்பில் சேர்த்துவிட்டார். பால பண்டிதம் படித்துத் தேர்வுக்குத் தோற்றிச் சித்திபெற முடிந்தது. தொடர்ந்து பண்டித வகுப்பில் பயின்றுகொண்டிருந்தபோது வவுனியா ஊரொன்றில் பாடசாலை தொடங்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஆசிரியர் ஆனேன். பின்

விஞ்ஞான ஆசிரியர் பயிற்சிபெற்று விஞ்ஞான ஆசிரியரானேன். எனினும், தமிழ் ஆர்வம் தொடர்ந்தது. எழுத்துத் துறையில் ஈடுபட முடிந்தது. இதனால், நூல் தொகுப்புத் துறையிலும் பதிப்புத் துறையிலும் ஈடுபடும் வாய்ப்பும் கிடைத்தது. ஆனால் மரபுவழித் தமிழ் இலக்கண, இலக்கியச் சூழலுக்குள் முற்றாக ஈடுபட முடியவில்லை.

மல்லாகம் பண்டித வகுப்பில் பயின்று கொண்டிருந்தபோது "பண்டிதம்" என்ற கையெழுத்து இதழ் ஆசிரியனானேன். பின் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்றபோது அறிவியல் துறை ஏடான "சுடரி"ன் ஆசிரியனானேன்.

பல "சுடர்" தட்டச்சு ஏடுகளைப் பதிப்பித்து வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தது. இரண்டாம் ஆண்டு இறுதியில் (1966) "சுடர்" இதழை அச்சுமலராகவும் பதிப்பித்து வெளியிட முடிந்தது. விஞ்ஞான ஆசிரியர் என்ற வகையில் தொண்டைமானாறு விஞ்ஞான வெளிக்கள நிலையத்திலும் (Field Work Centre) பணியாற்றி அறிவியற் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. அந்நிலைய ஆங்கிலச் செய்தி ஏட்டின் (FWC News Letter) ஆசிரியராகிப் பல ஆண்டுகள் (1978-1984) அதனைப் பதிப்பித்து வெளியிடும் வாய்ப்பும் கிடைத்தது. எமது ஒருசாலை மாணவராயிருந்த ஆ.சிவநேசச்செல்வனுடன் இணைந்து, மகாஜனக் கல்லூரியை நிறுவிய "பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலரை"யும் 1972இல் பதிப்பித்து வெளியிட்டேன். 1973இல் அவருடன் இணைந்து தெல்லிப்பழை கலைப் பெருமன்றச் சார்பில் "மறுமலர்ச்சிக் காலம் - இலக்கியச் சிறப்பிதழை"யும் வெளியிட முடிந்தது.

நாயன்மார்கட்டில் 1977இல் கலாநிதி, வித்துவான் க.சொக்கலிங்கம் ('சொக்கன்') "முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்" உருவாக வழிவகுத்தார். பல சிறந்த நூல்களை இக்கழகம் வெளியிட்டது. 'சொக்கன்' அவர்கள் எனது ஆசிரியராக இருந்த காலத்தில் அவருடன் இணைந்து கழகம் வெளியிட்ட முதல் ஐந்து நூல்களையும் பதிப்பிக்கும் வாய்ப்புப் பெற்றேன். இவை சொக்கன், பேராசிரியர் நா.சுப்பிரமணியம், துணைவேந்தர் சு.வித்தியானந்தன், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோருடைய நூல்களாகும். நூற்பதிப்புத் துறையில் சுன்னாகம் திருமகள் அழுத்தகம், யாழ்.ஆசீர்வாதம் அச்சகம் என்பன முன்னோடி வழிகாட்டிகள். பதிப்புத் துறையில் எனக்கு நீண்ட காலம் வழிகாட்டியாக உதவிவருபவர் பாரதி பதிப்பக முதல்வர் இ.சங்கர் ஆவார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



**வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் தமிழருக்கான அதிகாரம் மிக்க கூட்டாட்சித் திட்டத்தை அவர்கள் உருவாக்கிச் செயற்படுத்த முன்வரவேண்டும். இல்லையேல் நாடு பிளவுபடுவது வரலாறாக அமைந்துவிடும். சிங்கள மக்கள் இலங்கை நாட்டின் நலன்கருதித் தமிழருக்கு உரிமை வழங்கும் விருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த நீண்ட விடுதலைப்போராட்ட வரலாறு சிங்களத்திலும் நூலுருப்பெற வேண்டும்.**

*கேள்வி: தமிழிலக்கிய வளர்ச்சிக்கு - ஒரு தொடர்ச்சியான பாரம்பரிய உருவாக்கத்திற்கு - சில கல்லூரிகளின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. அவ்வகையில் மகாஜனக் கல்லூரி ஆற்றிய பங்களிப்புத் தொடர்பாக அதன் 'இயங்கு நிலை'யில்*

*முக்கிய பங்காற்றிவரும் தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?*

பதில்: பாடசாலை என்பது மாணவருக்குக் கற்பித்துத் தேர்வில் சித்தியடைச்செய்யும் நிலையம் மட்டுமல்ல. அது மாணவர்களின் பல்துறை ஆற்றல்களையும் வளர்க்கும் நிலையமாகவும் செயற்படுகின்றது. போட்டி அடிப்படையில் பேச்சு, எழுத்துத் துறைகளில் மாணவர்களின் ஆற்றலைப் பாடசாலை வளர்ப்பதோடு இலக்கிய மன்றங்கள் மூலமும் மன்றக் கையெழுத்து இதழ்கள் மூலமும் பாடசாலை மலர்கள் மூலமும் மாணவரின் தமிழிலக்கியத்துறை வளர்ச்சி ஏற்படுகின்றது. யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, தெல்லிப் பளை யூனியன்கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி மகாஜனக் கல்லூரி முதலிய பழைய கல்லூரி கள் முதல் பல கல்வி நிறுவனங்கள் இலக்கிய வளர்ச்சிக்கும் எழுத்தாளர் பரம்பரை உருவாக் கத்துக்கும் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகின்றன. பாடசாலைகள் ஒவ்வொன்றும் இத்துறை சார்ந்த தமது பங்களிப்புகளை ஆராய்ந்து வெளிப்படுத்த முயலவேண்டும்.

நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடியாக மகாகவி சுப்பிரமணியபாரதியார் குறிப்பிடப்படு கிறார். பாரதியாருக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே ஈழத்தில் நவீன தமிழ்க் கவிதையின் தோற்றத்துக்கு முன்னோடியாக அமைந்தவர் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை. இவர் 1910 இல் மகாஜனக் கல்லூரியை நிறுவி அதன் அதிபரானார் (1910 - 1929). இக்கல்லூரியின் மூத்த மாணவராகவும் ஆசிரியராகவும் அமைந்த க.சின்னப்பா புகழ்பூத்த கவிஞரா கவும் பாவலர் மூலம் உருவாக்கப்பட்டார். பாவலர் மறைந்தபின் இவரே மகாஜனாவின் அதிபராகப் பணியாற்றினார் (1929 - 1945). ஈழத்தின் புகழ்பூத்த கவிஞர்களும் எழுத்தாளர் களுமான செ.கதிரேசர்பிள்ளை, அ.செ.முருகா னந்தம், அ.ந.கந்தசாமி, மகாகவி து.உருத்திர மூர்த்தி முதலிய புகழ்பெற்ற எழுத்தாளர்கள் உருவாக கவிஞர் க.சின்னப்பா காரணமானார். இவரது மறைவின் பின் பாவலரின் மகன் தெ.து.ஜயரத்தினம் கல்லூரியின் மாணவராக வும் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற் றினார். இக்காலத்தில் கற்பித்த ஆசிரியர்க ளான செ.கதிரேசர்பிள்ளை, புலவர் நா.சிவபா தசுந்தரனார், த.சண்முகசுந்தரம் முதலியோர் புகழ்பெற்ற எழுத்தாளர்களாக விளங்கியதோடு பல எழுத்தாளர்கள் கல்லூரியில் உருவாகவும் வழிவகுத்தனர். இக்காலத்தில் புலவர் ம.பார்வதிநாதசிவம் முதலான எழுத்தாளர்கள் கல்லூரியில் உருவாக்கப்பட்டனர். இன்றும் இப்பணியைக் கல்லூரி தொடர்ந்து மேற் கொண்டு வருகின்றது. இன்றும் கல்லூரியில் எழுத்தாளராக விளங்கும் ஆசிரியர்கள் உள்ளனர். இன்று உலகெங்கும் மகாஜனப் பழைய மாணவர்கள் பணியாற்றி வருகின்ற னர். இவர்களுள் பலர் புகழ்பெற்ற எழுத் தாளர்களாகவும் தமிழ் இதழ் ஆசிரியர்க ளாகவும் விளங்குகின்றனர். உலகப் பழைய மாணவர் கிளைகளின் உறுப்பினர்கள் அண் மையில் கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தில் கூடியபோது மகாஜனப் பழைய மாணவ எழுத்தாளர் ஆக்கங்களைத் தொகுத் துப் பல்வேறு நூல்களாக வெளியிட முடிவு செய்துள்ளனர். இங்கு பழைய மாணவராக



இக்கல்லூரி ஆசிரியர்களும் கொள்ளப்படு கின்றனர். கல்லூரி நூற்றாண்டு விழா வரை (2010) இந்நூல்கள் தொடர்ந்து வெளிவரும். இவற்றிலிருந்து மகாஜன எழுத்தாளர் மரபை விரிவாகவும் தெளிவாகவும் உணர முடியும்.

***கேள்வி: ஈழத்தில் பதிப்பு மற்றும் தொகுப்பு முயற்சிகளின் வளர்ச்சி பற்றிப் பெருமைப்படலாமா? அது தொடர்பான முக்கிய பதிவுகள் என எவற்றைக் கருது கிறீர்கள்?***

பதில்: தமிழ் கூறும் நல்லுலகில் ஈழத்து ஆறுமுகநாவலரும் சி.வை.தாமோதரம் பிள்ளையும் முக்கியமான தொன்மை நூல்க ளைப் பதிப்பிக்கும் முயற்சியில் முன்னோடி களாக அமைந்தனர். இவர்கள் வழிகாட்டலி லேயே உ.வே.சாமிநாதையர் முதலானோர் பதிப்பு, தொகுப்பு முயற்சிகளில் பெரும்பணி யாற்றினர். அச்சுமுறையின் குறைபாட்டால் இம்முயற்சி குறைவாகவே தொடர்ந்தது.

இன்றைய காலகட்டத்தில் கணினிமுறை அச்சுப்பணி வளர்ந்து வருவதால் தொகுப்பு, பதிப்பு முயற்சிகள் சிறப்பாகவே இடம்பெறு கின்றன. எனவே, அச்சுப்பதிப்பக வெளியீடு கள், நூலாசிரியர்களின் வெளியீடுகள், நூல் வெளியீட்டுமன்ற வெளியீடுகள், இலக்கியக் கழக வெளியீடுகள், இதழ் நிறுவன வெளியீடு கள் எனப்பலவகை வெளியீடுகள் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றன. இவ்வகை யில் பெருந்தொகையான அன்பளிப்பு நூல் களை வெளியிட்ட மில்க்வைற் நிறுவன வெளியீடும் குறிப்பிடத்தக்கது. இவற்றை விரிவாகக் கூறுவது பொருத்தமாகாது என்பதால் கூறவில்லை. எனினும், பல எழுத் தாளர்களின் கவிதைகளையும் சிறுகதைகளை யும் தொகுத்துப் பதிப்பித்த சில நூல்களைக் குறிப்பிடலாம் என எண்ணுகின்றேன். கவிதைச் செல்வம், ஈழத்துக் கவிமலர்கள், அமைதி குலைந்த நாட்கள், மரணத்துள் வாழ் வோம், தமிழ் எங்கள் ஆயுதம், பதினொரு ஈழத்துக் கவிஞர்கள், காலமெழுதிய வரிகள், வேற்றாகி நின்ற வெளி, வெளிப்படுதல், மீகான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள், வெளிச்சம் கவிதைகள், ஆனையிறவு, செம்மணி முதலிய கவிதை நூல்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இதேபோல ஈழத்துச் சிறுகதை, கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள், போட்டிக் கதைகள், சுதந்திரன் சிறுகதைகள், ஈழகேசரிச் சிறுகதைகள், ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள், மல்லிகைச் சிறுகதைகள், பன்னிரு சிறுகதைகள், வெள்ளிப் பாதசரம், வாசல் ஒவ்வொன்றும், வெளிச்சம் சிறுகதை கள் முதலிய சிறுகதை நூல்களும் குறிப்பிடத் தக்கன. மேலே குறிப்பிடப்பட்ட கவிதை, சிறு கதை நூல்களிற் பல தமிழரின் உரிமைப்போர் சார்ந்த அரைநூற்றாண்டு காலத்தொடர் சிந்தனைகள் என்பது குறிப்பிடத்தக்கது. ஈழத் தமிழர் ஆக்கங்கள் ஈழத்தில் மட்டுமன்றி உலக நாடுகள் பலவற்றிலும் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஈழத் தமிழரின் புலப்பெயர்வால் உலகநாடுகள் பலவும் இன்று தமிழ் கூறும் நல்லுலகமாக விளங்குகின்றன.

ஈழத்தில் வெளியான நூல்கள் பற்றிய முன்னோடிப்பதிவாக "வரதரின் பலகுறிப்பு *1964 - 1965*" என்ற நூலில் உள்ள ஒன்பது பக்கப் பட்டியல் அமைந்துள்ளது. அண்மை யில் லண்டனில் வெளிவந்த 'நூல் தேட்டம் - I' *(2002)*, 'நூல் தேட்டம் - II' *(2004)* ஆகிய தொடர்நூல்களும் குறிப்பிடத்தக்கது. இவற் றில் இரண்டாயிரம் ஈழத்து நூல்கள் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஐயாயிரம் நூல்வரை இப்பதிப்புத் தொடருமெனப் பதிப் பாசிரியர் என்.செல்வராசா குறிப்பிட்டுள்ளார். இப்பதிவால் நூல்கள் மேலும் பெரிய அளவில் மக்களிடையே பரவமுடியும்.

ஈழத்தில் தமிழ் நூல்களின் பதிப்பு மேலும் வளரவேண்டும். புதிய நூல்கள் மட்டுமன்றிப் பழைய நூல்களும் தொடர்ந்து வெளியிடப் படவேண்டும். இன்று கணினி முறையில் நூல்கள் சிறப்பாகப் பெருமளவில் வெளிவரு கின்றன. இவற்றில் அச்சுப்பிழைகள் ஏற்படு கின்றன. இக்குறை நீக்கப்படக் கணினி அச்சாளர்கள் தமது அறிவையும் ஆற்றலை யும் வளர்க்கவேண்டும்.

***கேள்வி: ஈழத்தின் பழந்தமிழ் நூல்கள் பல இன்று புழக்கத்தில் இல்லை. வரலாறு சார்ந்த சில நூல்கள் "ஆசிய கல்வி மையம்" முதலியவற்றால் மீள் பதிப்புச் செய்யப்படுகின்றன. ஈழத்தில் இவற்றை வெளியிட முடியாதுள்ளமைக்கு என்னென்ன காரணங்கள் இருக்கமுடியும்? எவ்வாறு வெளியிடலாம்?***

பதில்: பாடசாலைக் கல்வி மரபு இன்று தேர்வுகளையே சிறப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுவே மாணவர்களினதும், பெற்றோரினதும் நோக்கமாகவும் உள்ளது. ஈழத் தமிழ் இலக்கியம், ஈழத்தமிழர் வரலாறு முதலியவற்றில் மாணவர் ஆர்வம் கொள்ளச் செய்யும் வகையில் கல்வி அமையவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மாணவர் அறிவியல், கணிதம், கலை, வணிகம் முதலிய துறைகளைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு பயின்றாலும் ஈழத்தமிழர் இலக்கியங்களையும் வரலாறுகளையும் கற்கவேண்டும்: அவை பற்றிப் பேசவும் எழுதவும் வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். இவற்றின் மீது வாசகருக்கு ஆர்வம் ஏற்படாமையே அவை வெளிவராமல் இருப்பதற்கு முக்கிய காரணம் ஆகும். இவ் ஆர்வமின்மையால் நூல்கள் குறைவாகவே விற்பனையாகின்றன. எனவே, வெளியிடுவோர் இவற்றில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. இத்துறை நூல்களை வெளியிட நிதிப்பிரச்சினை முக்கிய காரணமாக அமைகின்றது. நூற்பதிப்பாளர்களுக்கு நிதி வழங்கி, நூல்களை விற்பதற்கு உதவி, தொடர்ந்து இந்நூல்களை வெளியிட உதவும் நிறுவனம் ஒன்று உருவாகவேண்டும். பல்கலைக்கழகங்களில் தமிழ், வரலாறு முதலியவற்றைக் கற்கும் மாணவர் இத்துறைகள் சார்ந்த ஈழத்தமிழ் நூல்களைக் கற்கும் பாடத்திட்டங்களையும் உருவாக்குவது அவசியமாகும். இவ்வாறு செய்யப்பட்டால் இந்நூல்களைக் கற்கும் ஆர்வம் மாணவரிடையே தொடர்ந்து வளரும்.

ஈழத்தில் அண்மையில் கமலம் பதிப்பகம் சார்பில் கலாநிதி க.குணராசா, ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் "யாழ்ப்பாணச் சரித்திரம்" (2002), மயில்வாகனப் புலவரின் "யாழ்ப்பாண வைபவமாலை" (2001), எஸ்.ஜோனின் "யாழ்ப்பாணச் சரித்திரம்" (2002) ஆகியவற்றை வெளியிட்டுள்ளார். எனினும் ஈழத்துத்தமிழ் வரலாற்று நூல்களை மீளப் பதிப்பித்துப் பரப்பும் ஆர்வம் குறைவாகவே உள்ளது. ஆனால் ஈழத்தின் முக்கிய நூல்களை வெளியிடும் பணியில் தமிழகம், கனடா முதலிய நாடுகள் ஈடுபடுகின்றன. கனடாவில் வாழும் ஈழத்தமிழரான வல்வை ந.நகுலசிகாமணி, வல்வெட்டித்துறை வரலாற்று ஆவணக் காப்பகம் 1918இல் வெளிவந்த க.வேலுப்பிள்ளை அவர்களின் "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" வரலாற்று நூலை (2001)யும் "அருணகிரிநாதர் அருளிச்செய்த கந்தரலங்கார மூலமும் வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் ச.வயித்திலிங்கம்பிள்ளை அவர்கள் இயற்றிய உரையும்" என்ற 1912 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பு நூலையும் (2001) வெளியிட்டுள்ளார். மேலே குறிப்பிட்ட முத்துத்தம்பிப்பிள்ளையின் "யாழ்ப்பாணச் சரித்திரம்" என்ற நூலைச் சென்னை ஆசிய கல்வி மையம் தமிழகத்தில் வெளியிட்டுள்ளது. இதே மையம் சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்களது நூல்களையும் வெளியிட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் "ஈழத்து இலக்கிய முன்னோடிகள்" (2001), "பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்" (1999), "இரு மகாகவிகள்" (2001) முதலிய நூல்களை சென்னை குமரன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. விபுலானந்த இலக்கியம் என்ற தொடரில் சென்னை கலைமகள் காரியாலம் "விபுலானந்தச் செல்வம்" (1963), "விபுலானந்த ஆராய்வு"(1963,64,65) முதலிய நூல்களை வெளியிட்டுள்ளது. பேராசிரியர் கா.சிவத்தம்பியின் "ஈழத்தில் தமிழ் இலக்கியம்" (1978,1987) சென்னை தமிழ்ப் புத்தகாலயத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு இன்னும் பல நூல்கள் வெளிவந்துள்ளன.

இந்நூல்கள் வெளிநாடுகளில் வெளிவர அந்நாட்டவர்களின் ஆர்வமே காரணம். அவற்றை இங்கு வாங்க மூன்று அல்லது நான்கு மடங்கு பணம் தேவைப்படும். எனவே

முக்கியமான நூல்களை இங்கு வெளியிடுவது இன்றியமையாத பணியாகும்.

***கேள்வி: உலகமயமாக்கல், தகவல், தொழில்நுட்பம் ஆகியன பிராந்திய மொழிகளின் பிரயோக நிலையிலான அழிவுக்கு வழிகோலுகின்றன என்ற குற்றச்சாட்டு உள்ளது. இது தொடர்பான தங்களின் அவதானம் யாது?***

பதில்: பல சின்னஞ்சிறு நாடுகளாகப் பிரிந்திருந்த நாடுகள், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய ஐந்து கண்டங்களாகி, இணைந்து இன்று உலகம் என ஒன்றாகியுள்ளன. ஆய்வாளர்களும் ஆட்சியாளர்களும் உலகமயமாக்கலுக்குக் காரணமாக இருந்தனர். பிரிந்த நாடுகளில் வாழ்ந்த மக்கள்குழுக்கள் தனித்தனி மொழிகளைப் பேசுவோராக உள்ளனர். எனினும், நாடுகளை வென்று மக்களை அடிமைப்படுத்தும் அயல் நாட்டினர் வென்ற நாடுகளில் தமது மொழிகளைப் பரப்பி மக்களின் தாய்மொழிகளை அழித்து வந்தனர்; வருகின்றனர். இந்தியாவில் "இந்தி" ஆட்சி மொழியானது. ஈழத்தில் "சிங்களம்" ஆட்சி மொழியாக்கப்பட்டது. இவை ஏனைய மொழிகளை அழிக்க முயன்றபோதிலும் மக்களின் எழுச்சியால் அவர்களின் மொழிகள் காக்கப்பட்டுள்ளன. விசயன் தலைமையிலான ஆரியர் சிலர் இலங்கைக்கு வந்தனர். அசோகன் என்ற வட இந்திய அரசன் காலத்தில் பௌத்தம் இலங்கைக்குட் புகுந்தது. பாளி மொழியின் செல்வாக்காலும், விசயன் குழுவினர் செல்வாக்காலும், பௌத்தமதம் சார்ந்த தென்னிலங்கைத் தொன்மைத் தமிழர் சிங்கள மொழி என்ற புதுமொழி பேசுவோராயினர். எனினும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர் இன்றுவரை தமிழ் பேசும் மக்களாக நிலைத்துள்ளனர். சேர, சோழ, பாண்டியரின் செல்வாக்கு ஈழத்தமிழ் மொழி அழியாது நிலைக்க உதவியது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலம் ஆட்சிமொழியாகவும், கல்விமொழியாகவும் செல்வாக்குப் பெற்ற போதிலும், தமிழ் மொழியை அழிக்க முடியவில்லை. நாளையும் தமிழ் நிலைக்கும்.

***கேள்வி: "மரணத்துள் வாழ்வோம்" கவிதைத் தொகுப்பு தமிழ்த் தேசியக் கருத்துருவாக்க நிலைநின்ற முக்கியமான தொகுப்பு எனலாம். அத்தொகுப்புச் சார்ந்த தங்களின் அனுபவங்களையும் அதன் முக்கியத்துவத்தையும் கூறுங்கள்.***

பதில்: ஈழத்தில் வாழ்ந்து தனியாட்சி புரிந்த ஈழத்தமிழர் அந்நியர் ஆட்சிகளால் தமது ஆட்சியை இழந்தனர். ஆங்கிலேயர் தமது நலன் கருதி இலங்கையை ஒரு நாடாக்கினர். 1948இல் இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றது. எனினும் தமிழர்



**1970 களில் அறநெறிப் போர்நோக்குத் தொடங்கியது. எனினும் அறநெறிப் போராட்டம் சாத்தியமற்றது என்ற கொள்கையுடன் தமிழ் இளைஞர்களிடையே போர்நோக்கு வளர்ந்து உச்சநிலையை அடைந்தது. இப்போரால் வடகிழக்கின் பெரும் பகுதி தனித் தமிழீழமாக பிரிவடைந்தது. இந்த நிலையில் போரை நிறுத்தி அமைதியை ஏற்படுத்த விடுதலை இயக்கம் முன்வந்தது.**

விடுதலையோ ஆட்சியுரிமையோ பெறவில்லை. இந்நிலையில் தமிழர் உரிமைப் போராட்டம் உருவானது. இக்காலத்தில் "தமிழ் எங்கள் ஆயுதம்" என்ற கவிதை நூல் தோன்றியது. தமிழர் உரிமை மறுப்புத் தீவிரம் அடைந்தபோது தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இக்காலத்தில் அறப்போர் ஆயுதப் போரானது. கூட்டாட்சிக் கோரிக்கை தமிழீழக்

கோரிக்கையானது. இக்காலத்தில் "எமக்கு மரணம் ஏற்படலாம். எனினும், நாம் நிலைபெற்று உரிமையுடன் வாழ்வோம்." என்ற கருத்து உருவானது. இக்காலத்தில் இந்நிலை பற்றிய பல கவிதைகள் உருவாயின. 1977 முதல் 1985 வரை பல்வேறு இதழ்களிலும் நூல்களிலும் இக்கருத்தை வெளிப்படுத்தும் கவிதைகள் வெளியாயின. இ.பத்மநாபஐயர், அ.யேசுராசா, உ.சேரன் ஆகியோருடன் நானும்



சேர்ந்து இக்காலத்தில் எழுதப்பட்ட இப் பொருள்சார்ந்த கவிதைகளைத் தொகுத்து "மரணத்துள் வாழ்வோம்" என்ற நூலாக வெளியிட்டோம். இந்நூலில் முருகையன் முதல் விமல்வரை 31 கவிஞர்களின் 82 கவிதைகள் வெளியிடப்பட்டுள்ளன. "அலை" என்ற இதழில் வெளியான 19 கவிதைகளும், "புதுசு" என்ற இதழில் வெளியான 16 கவிதைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மல்லிகை, சுவர், சக்தி, தீப்பொறி, படிகள், தீர்த்தக்கரை, மார்க்சியம் இன்று, வானம்பாடி ஆகிய தமிழக, ஈழ இதழ்களில் வெளியான ஓரிரு கவிதைகளும் "யமன்" முதலிய ஐந்து நூல்களில் வெளிவந்த கவிதைகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவைதாம் "மரணத்துள் வாழ்வோம்" தொகுப்பின் அடிப் படைகளாக இருந்தன. இவ்வகையில் இடம் பெற்ற 31 கவிஞர்களின் ஆக்கங்களே தொகுக் கப்பட்டன. எவரையும் விலக்குவது தொகுப் பாளர்களின் நோக்கமாய் இருக்கவில்லை.

***கேள்வி: நீண்ட விடுதலைப்போராட்டம் நடைபெற்று, போர்த்தணிவுக் காலமாக இன்றைய காலமுள்ளது. நடைபெற்ற போரின் அவலங்களை, தியாகங்களை, நியாயங்களை, சாதனைகளை, சம்பவப் பதிவுகளை ஆவணப்படுத்தவேண்டிய காலம் இதுவாகும். எவ்வாறு இத்தகைய ஆவணப்படுத்தல்களைச் செய்யலாம்?***

பதில்: ஈழத்தமிழரின் விடுதலைக்கான அறநெறிப் போராட்டம் கூட்டாட்சி (சமஷ்டி) நோக்குடன் 1949 இன் பின் தமிழீழ மக்களால் தொடங்கப்பட்டது. எனினும், பேரின அரசுகள் இதற்கு எதிராகச் செயற்பட்டு 'இனக்கலவரம்' என்ற தவறான பெயரில் தமிழர்களை அழித்துவந்தன. இந்த நிலையில் 1970 களில் அறநெறித் தமிழீழ விடுதலைப்போர் நோக்குத் தொடங்கியது. எனினும் அறநெறிப் போராட் டம் சாத்தியமற்றது என்ற கொள்கையுடன் தமிழ் இளைஞர்களிடையே போர் நோக்கு வளர்ந்து உச்சநிலையை அடைந்தது. இப் போரால் வடகிழக்கின் பெரும்பகுதி தனித் தமிழீழமாகப் பிரிவடைந்தது. இந்த நிலையில் போரை நிறுத்தி அமைதி ஏற்படுத்த விடுதலை இயக்கம் முன்வந்தது. அரசும் போரை நிறுத்தி சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத் தியது. இப்போர்க்காலங்களில் நிகழ்ந்த அவலங்கள், ஈகங்கள், சாதனைகள், போருக் கான நியாயங்கள் என்பன உடனுக்குடன் செய்திகளாகப் பதிவு செய்யப்பட்டன. இவை சம்பவப் பதிவுகளாக மட்டும் அமையாமல் வரலாற்றுப் பதிவுகளாகவும் உருவாகவேண் டும். இவை நூல்வடிவில் வரலாற்று நிலை யில் அமையவேண்டும். இது மிக விரிவாகப் போராட்டத்தை முழுமையாக ஆராய்ந்து வெளியிடப்படவேண்டும். தமிழ்மொழியில் மட்டுமன்றி உலகநாடுகள் அனைத்துக்கும் வெளிப்படுத்தும் ஆங்கில நூலாகவும் வெளிவர வேண்டும். இவ்வாறு உருவாகும் வரலாறு தமிழ்மக்களிடையே தொடர்ந்தும் விடுதலைப் போராட்ட உணர்வை வளர்ப்பதாக அமையும். கூட்டாட்சி அமைப்பு இன்று தமிழரின் கோட் பாடு அல்ல. நாடு பிளவு படாமல் தமிழரும் சிங்களவரும் இணைந்து வாழவேண்டுமானால் 1929இல் பண்டாரநாயக்கா முன்வைத்த கூட் டாட்சிக் கோரிக்கை சிங்களமக்களால் ஒன்றி ணைந்து முன்வைக்கும் கோரிக்கையாக

மாறவேண்டும்: வடக்கு, கிழக்கை இணைக்கும் தமிழருக்கான அதிகாரம் மிக்க கூட்டாட்சித் திட்டத்தை அவர்களே உருவாக்கிச் செயற் படுத்த முன்வரவேண்டும். இல்லையேல் நாடு பிளவுபடுவது வரலாறாக அமைந்துவிடும். சிங்கள மக்கள் இலங்கை நாட்டின் நலன் கருதித் தமிழர்க்கு உரிமை வழங்கும் விருப் பத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த நீண்ட விடுதலைப்போராட்ட வரலாறு சிங்களத்திலும் நூலுருப் பெறவேண்டும்.

***கேள்வி: சிறுவர் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டுள்ளீர்கள். சிறுவர் இலக்கியம் உளவியல் சார்ந்து கட்டியெழுப்பப்பட வேண்டு மெனக் கூறப்படுகிறது. சிறுவர் இலக்கியம் எமது சமூகத்தில் எவ்வாறு இருந்துள்ளது? அது பெறவேண்டிய மாற்றம் யாது?***

பதில்: ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி, வெற்றிவேற்கை முதலிய காலத்தால் முற்பட்ட இலக்கியங்கள் சிறுவர் இலக்கியங்கள் எனக் கருதப்படுகின்றன. எனி னும், இவை சிறுவர் அறிந்த கருத்துக்களைச் சிறுவர் நோக்கில் கூறுவனவாகவோ எளிமை யான சொற்களைக் கொண்டனவாகவோ அமையவில்லை. எனினும், இவை கீழ்வகுப்புக ளுக்கு ஆசிரியர் கற்பிக்கும் நூல்களாக இடம பெறுகின்றன.

இன்று சிறுவர் இலக்கியம் குழந்தை நோக் கில் அமைவதோடு, எளிமையான சொற்களு டனும் கருத்துக்களுடனும் அமைகின்றன. குழந்தைக் கவிதை, குழந்தைக் கதை, குழந்தை நாடகம், குழந்தைக் கட்டுரை எனக் குழந்தை இலக்கியம் இன்று உருவாகிச் சிறப்புப் பெற்றுள்ளன. கவிதை, கதை, என்பன பல நூல்களாகவும் வெளிவந்துகொண்டிருக்கின் றன. இவற்றின் முக்கிய கூறாகக் கருத்தை விளக்கும் படங்களும் இடம்பெறுகின்றன. நூலில் மட்டுமன்றி வானொலியிலும் தொலைக் காட்சியிலும் சிறுவர் நிகழ்ச்சிகள் இடம்பெறு கின்றன. ஒலிப்பேழை (கசெற்) வடிவிலும் சிறுவர்க்கான பாடல்களும் கதைகளும் வெளி யிடப்படுகின்றன.

பாடசாலை ஒன்றைத் தொடங்கி ஆசிரியரா கப் பணியாற்றிய காலத்தில் குழந்தைக் கவிதைகளைக் கற்பிக்கும் பொறுப்பு ஏற்பட் டது. எனவே, குழந்தைக் கவிதைகளைப் படிப் பதிலும் எழுதுவதிலும் எனக்கு மிகுந்த ஆர்வம ஏற்பட்டது. 1980 இல் நான் நல்லூர் கல்விவள நிலையப் பொறுப்பாளராகி மாணவர்க்கும் ஆசி ரியர்க்கும் அறிஞர்களின் கருத்தரங்குகளை நடத்தினேன். 1985 இல் யாழ்.இந்து மகளிர் கல லூரியில் சிறுவர் இலக்கியக் கருத்தரங்கும் கண்காட்சியும் இடம்பெற்றன. இதில் குழந் தைக் கவிதை சிறப்பிடம் பெற்றது. இந்து மகளிர் க.பொ.த. உயர்தரத் தமிழ்ப்பாட மாண விகளும் இதில் கலந்துகொண்டனர். இம்மாணவி யர்க்குக் குழந்தைக் கவிதை எழுதும் பயிற்சி யும் அளிக்கப்பட்டது. அவர்கள் குழந்தைக் கவிதைகளை எழுதினர். இவற்றுள் சிறந்த கவிதைகளைத் தொகுத்து, வேண்டிய திருத் தங்கள் செய்து, அக்கல்லூரி வெளியீடாகக் கல்வி வள நிலையம் "பாலர் பா அமுதம்" என்ற பெயரில் பதிப்பித்து வழங்கியது. இக் கருத்தரங்கு குழந்தை இலக்கிய வளர்ச்சியில் ஒரு புதிய செல்நெறியாக அமைந்தது. 1964 இல் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் "மழலைச செல்வம்" என்ற அன்பளிப்பு நினைவுமலர்க் குழந்தைக் கவிதை நூலை வெளியிட்டார். அண்மையில் இவர் ஐந்து குழந்தைக் கவிதை நினைவுமலர்களை வெளியிட்டுள்ளார். இதைத் தொடர்ந்து தில்லைச்சிவன், கல்வயல் வே.குமார சாமி, மு.பொன்னம்பலம், சபா.ஜெயராசா முதலியோர் தமது குழந்தைக் கவிதைகளை அன்பளிப்பு நினைவுமலர்களாக வெளியிட் டனர். குறமகள், புத்தொளி, பா.சத்தியசீலன், கவிஞர் கதிரேசர்பிள்ளை முதலியோரும் இப்பணியில் ஈடுபட்டனர். நினைவுமலர்களைத் தொகுத்துப் பதிப்பிக்கும் பொறுப்பைப் பலர் எனக்குத் தந்தபோதெல்லாம் குழந்தைக் கவிதை நூல்களையே அன்பளிப்பு நினைவுமலர்களா கத் தொடர்ந்து தொகுத்து வெளியிடத் துணை செய்வது எனது பணியாக அமைந்தது. பல்வேறு கவிஞர்களின் இவ்வன்பளிப்புப் பணிகள் மூலம் ஈழத்துக் குழந்தைக் கவிஞர்களின் கவி தைகள் குழந்தைகளிடமும் பெரியோரிடமும் செல்வாக்குப் பெற்றன.



# பொங்கும் தமிழாக மட்டுமல்லாது பொங்கும் தமிழர்களாகவும்...

புதுவை இரத்தினதுரை

எவனெவனோ
எதையெதையாயினும்
சொல்லிப்போகட்டும்.
நீ தொடர்ந்து பயணம் செய்க
உன் இலக்கு நோக்கி.
பயணவழி நாட்கள் சுகமானதல்ல.
வதை நிரம்பியது
வலி நிறைந்தது.
விடுதலை பெறுவதென்பது
பூப்பறிப்பதல்ல,
புல்லாங்குழல் வாசிப்பதுமல்ல
உயிர் விதைத்து முன்னேறுவது.
விலங்கறுக்க விரும்பாத மனங்களுக்கு
போராட்டம் சுமையானது.
தப்பித்துக் கொள்ளும் தங்களை
நியாயப்படுத்த
அடிக்கடி ஏதேனும் அலட்டுவர்.
கணக்கிலெடுக்காதே.
அவர்களால் முடிந்ததெல்லாம்



போராட்டத்தை கொச்சைப்படுத்தும்
கதைகளும்,
சில கவிதைகளும்,
ஓரிரண்டு கட்டுரைகளும் மட்டுமே.
நாய்கள் குரைக்கட்டும்
தொடர்ந்து நடப்பீர்.
நிலவை நோக்கியல்லவா பயணம்?
சின்னப் பொறிமுட்டுங்கள் கண்ணில்
அது பெருநெருப்பாய் எரியட்டும்.
சிறுவிரலால் ஒரு துளிசிந்து
அது கடலாய்பரந்து அலையெற்றட்டும்.
உம்மால் முடியும்
பூமிப்பந்தையே நெம்பக் கூடிய ஈழத்தமிழரல்லவா.
நிமிர்ந்தெழுவீரானால்
நிச்சயம் முடியும் உம்மால்.
வல்லமை மிக்க வலியரே!
பொல்லாச் சுழிகிடந்தது போதும்
இழிவகற்ற எழுந்துகொள்வீர்.
“பொங்கு தமிழ்” என்று

இங்கொரு அக்கினிக்குஞ்சைப் பிரசவித்தோம்.
இன்று அகலச் சிறகுவிரித்துவந்து
கனடாவில் தரையிறங்கியுள்ளது
சாம்பலிலிருந்து உயிர்ப்புப்புறும் பீனிக்ஸ் பறவை.
திசையெங்கும் விடுதலைத்தீ மூட்டவல்ல
திறன் படைத்தது இது.
கனடியத் தமிழரே!
காலம் உமக்கொரு பணியளித்து காத்திருக்கிறது.
ஈழத்தமிழரிடம் இன்னும் அதிகமாய் எதிர்பார்க்கும்.
பொங்குதமிழன்று
“இராணி பூங்கா” வில் எழும்
குரலும்,
உயரும் கரங்களும்
புதிய செய்தியொன்றைப் பிரகடனம் செய்யட்டும்.
உலகெங்கும் பரந்தாலும் ஒன்றானோம்,
ஒரு குடையின் கீழே இன்றானோம் என்று
இருட்திரை கிழித்து எழட்டும் வைகறை வெளிச்சம்.
ஈழத்தமிழர் அகதிகளல்லர்,
அனாதைகளும் அல்லர்,
வயிற்றுப் பிழைப்புக்காக
வந்திறங்கியவரும் அல்லர்.
எமக்கொரு தாய்மடி உண்டு
எலிவளையானாலும் தனிவளையாக
இருந்தோம் நாம்
இந்த வெள்ளைக்காரர் வந்திறங்கும் வரை.
வந்தவன் போகும் போது
இருந்தவனிடம் கொடுத்தேகினான்
அன்றிருந்து அந்தரித்துப் போனோம்.
ஏதிலிகளாக எல்லாநாட்டுத் தெருக்களிலும்
அலையும் விதியென்றாச்சு எமக்கு.
மாறணும் இந்நிலை



மாற்றணும் இந்நிலையை.
கனடியத் தமிழர்களே!
காலம் இப்போது உம்கையில் அடைக்கலமென
வந்துளது
எடுத்து முத்தமிட்டபடி முன்னேறுங்கள்.
பொங்கு தமிழன்று “இராணிபூங்கா” வில்
கடலாய் திரள்வீர்
கனலாய் எழுவீர்.
ஒன்றானோம் நாங்கள் ஒருகொடியில் பூவானோம்
என்றெழுந்து
வையப்பரப்புக்கு வாயடைக்கச் செய்யுங்கள்.
இராணி பூங்காவுக்கு
உங்கள் பிள்ளைகளையும் கூட்டிச் செல்வீர்
சின்னப் பூக்களின் நெஞ்சில்
தாயக நேசிப்பைப் பதியம் வைப்பீர்.
ஒரு யூதனைப் போல,
ஒரு சீக்கியனைப் போல
ஊரின் நினைவுகளுடன் ஒன்றச் செய்யுங்கள்.
வாழும்நாடு வேறெனினும்
தாயின்மடி தமிழீழம்தான்.
நீ எங்கேனும் சென்று விழுதிறக்கு
வேரைமட்டும் இங்கிருந்து வெட்டிவிடாதே.
எங்கள் துயருரைக்க,
பட்ட சோகத்தைச் சொல்ல,
உயிர் விதைத்து செய்யும் வேள்வியை விளக்க
பொங்கு தமிழை வசப்படுத்திக் கொள்வீர்.
அறிந்தவரே அறியாத பெருநெருப்பாய்
கனன்று கிடக்கிறது விடுதலைத்தீ
நீரூற்ற அணையாத நெருப்பிது.
பாதிதூரம் கடந்த பயணத்தில்
கொஞ்சம் காலாற இருக்கிறோம்.
காலாறுவதைக் கரைந்து போவதாக எண்ணி
சீண்டிப் பார்க்கின்றனர் சிலர்.
வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு.
கனடாவின் இராணி பூங்காவில்
பொங்கு தமிழன்று புயலே மையம் கொள்ளும்.
நாங்கள் மனிதர்கள்
அதிலும் தமிழர்கள்
தமிழரிலும் ஈழத்தமிழர்கள்.
ஒன்றே கொடி
ஒருவனே தலைவன்
பொங்கும் தமிழர்களாகப் புறப்படுவீர்.
எதிர்காலம் எம் பக்கம்.
□□

*24.09.2004 அன்று கனடிய தமிழ் வானொலி ஒலிபரப்பிய கவிதை*

உங்கள் மொழியில் இளைய சகோதரனை எப்படி அழைப்பீர்கள். அக்காவை, அக்கா கணவனை என்று கேட்டுக்கொண்டிருந்தாள் மீக்கோ. குமார் ஒவ்வொன்றாகப் பதில் கூறினான். நாகசோன் அதுதான் மீக்கோவின் கணவன், அதிகம் பேசாதவன். புன்னகை செய்தபடி இந்த உரையாடலைக் கருவியில் பதிவுசெய்தான். நாகசோன், மீக்கோ, குமார் ஆகிய மூவரும் குரோய்டன் சொனி தொழிலகத்தில் பொறியியல் பணியாற்றுகின்றனர். இலண்டன் மாநகரின் அருகாமையில் குரோய்டன் தொழிற்பேட்டை இருக்கின்றது.

மூவரும் மூன்று துருவங்ளைச் சேர்ந்தவர்கள். ஒரே நாடானாலும் நாகசோன் தம்பதியர் வெவ்வேறு சமுதாயத் தட்டுகளைச் சேர்ந்தவர்கள். பல நூற்றாண்டு பழமை வாய்ந்த சாமுராயெனப்படும் சத்திரிய குலத்தவன் நாகசோன். இரண்டாம் உலகப்போருடன் இவர்கள் தமது பாரம்பரிய போர்த்தொழிலை கைவிட்டுள்ளனர். இப்போதெல்லாம் அவர்களுக்கு உயர்கல்வியில் மிகுந்த நாட்டம்.

மீக்கோ, தலைநகர் தோக்கியோவுக்கு நூறு மைல் வடக்கிலுள்ள மீன்பிடிக் கிராமத்தில் பிறந்தவள். அவளுடைய தந்தை பத்துக்கு மேற்பட்ட நவீன மீன்பிடிக் கப்பல்களிற்கு அதிபதி. ஆழ்கடலிற்குச் சென்று அங்கு தங்கிநின்று மீன் பிடித்துத் தகரத்தில் அடைக்கும் தொழில் நுட்பத்தை பத்துக்கப் பல்களும் கொண்டிருந்தன. வடதுருவம் தொட்டு தென்துருவம் வரையும் பசுபிக்மாகடலில் இருந்து இந்துமா கடல்வரையும் மீக்கோவின் தந்தை செய்யும் தொழில் பரந்துகிடந்தது.




மீக்கோவின் அண்ணன் யுக்கி படகு விபத்தில் படுகாயம் அடைந்து இரு கால்களின் செயற்பாட்டையும் இழந்தவன். தந்தையின் தொழிற்சாலை நிர்வாகத்தை அவன் திறம்படச் செய்தான். மின்கலம் பொருத்தப்பட்ட சக்கரநாற்காலியில் அமர்ந்து, அவன் படுவேகமாகத் தொழிற்சாலையையும் நிர்வாக மையங்களையும் சுற்றி வருவான். ரொயோட்டா கார் நிறுவனம் அவனுடைய பாவனைக்கு ஒரு விசேட வாகனத்தைத் தயாரித்து வழங்கியுள்ளது. அதையோட்டிக்கொண்டு யுக்கி வெகுதூரம்வரை சென்று தனது அலுவல்களைக் கவனித்தான். திருமணமான அவனுக்கு இரு சிறுவர்களும் ஒரு பெண் குழந்தையும் உண்டு.

தம்பி என்றால் மீக்கோவிற்கு உயிர். தம்பி தோயோவை அவள் தூக்கி வளர்த்தவள். அவனிற்கு மூன்று வயதாக இருக்கின்றபோது தாய் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டாள். மறுமணம் பற்றிய யோசனை இல்லாமல் தந்தை தனது தொழிலில் மூழ்கிவிட்டார். அவருடைய விதவைச் சகோதரி வீட்டையும் பிள்ளைகளையும் கவனித்துக்கொண்டாள். படிப்பை முடித்துக் கொண்டு தந்தையின் கப்பலில் பணியாற்றுவான் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் தோயோ வேறுவிதமாகத தீர்மானித்தான். அவன் ஜப்பான் தேசியக் கடற்படையிற் சேர்ந்து தனது

திறமை மூலம் அதிகாரி நிலைக்குயர்ந்தான்.

திருமணமாகிச் சில வருடங்களாகியும் நாக சோன் தம்பதிக்குப் பிள்ளைப்பேறு கிடைக்க வில்லை. அவர்களும் அதுபற்றி அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. தாமுண்டு தங்கள் வேலையுண்டு என்று வாழ்கின்றனர். மீக்கோவிற்கு வீட்டெண்ணம் வரும்போது தம்பியைப் பற்றித்தான் சிந்திப்பாள். குமாரு டன் பழகிய பின் அவளுக்கு அவனை மிகவும் பிடித்துவிட்டது. தம்பிமீது சொரிந்த அன்பின் ஒரு பகுதியை குமாருக்கு ஒதுக்கினாள். பெண் சகோதரத்தோடு பிறவாத குமாருக்கு அவள் காட்டிய பரிவும் பாசமும் மிகவும் இதமாக இருந்தது. ஆழமாகச் சிந்திக்கும் இயல்பின னான நாகசோன் குமாரின் நலனில் தீவிர அக்கறை காட்டினான். வளரக்கூடியவன் நம் மாலானதை உதவுவோம் என்று அவன் தீர்மானித்தான்.

நாகசோன், மீக்கோ திருமணம் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் தீர்மானிக்கப்பட்டது. தோடாய் என்று சுருக்கமாக அழைக்கப்படும் இப்பல்கலைக்கழகம் ஜப்பானின் மிகப் பழமைவாய்ந்த கல்வி நிலையம். ஜப்பான் நாட்டின் முதல்வடி மாணவர்களுக்கு மாத்திரம் இதில் அனுமதி உண்டு. அன்றுதொட்டு சிவப்பு வர்ணம் பூசப்படும் தோடாயின் வாயிற் கதவுகளைக் கடந்து உள்நுழையும் மாணவர் களின் எதிர்காலம் மிகவும் பிரகாசமாக இருக் கும். இந்த நாட்டின் அரசியல் நிர்வாக இரா ணுவ மற்றும் வர்த்தகத்துறைத் தலைமைகள் தோடாயில் படித்துப் பட்டம் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

பொறியியல் துறை இலத்திரனியல் பிரிவில நாகசோனும் மீக்கோவும் சமகாலத்தில் உள் நுழைந்தனர். இருவரும் ஒரே வகுப்பறை மற் றும் ஆராய்ச்சிப் பகுதி. இருவரும் குணத்தில் எதிரும் புதிருமானவர்கள். நாகசோன் அதிகம் பேசாதவன் என்றால் மீக்கோ அதற்கு எதிரா னவள். பெரிய வாயாடி, அவள் இருக்கும் இடத்தில் ஒரே கலகலப்பு. தனக்குப் படிப்பில் அக்கறை இல்லையென்று பாசாங்கு செய்வாள். ஆனால் தேர்வில் அவள்தான் முதலிடத்தில் இருப்பாள்.

வாய்திறவாமல் இருக்கும் சாமுராய் வீரனைச் சீண்டுவதில் அவளுக்கு அலாதிப் பிரியம். அதேநேரத்தில் நாள்பூராகவும் கல கலப்பாக இருக்க இவளால் எப்படி முடிகிறது என்று நாகசோன் சிந்தித்தான். எதிரும் புதிருமானவர்கள் நெருங்கி வருவதற்கு அதிக நேரம் எடுப்பதில்லை. இங்கும் அதுதான் நடந்தது. இலத்திரனியல் சமிக்ஞை வேகத் தில் இருவரும் காதலராகிவிட்டனர். அத்தோடு திருமணம் செய்யவும் உறுதி பூண்டனர். இறுதிப்பரீட்சையின் பெறுபேறுகள் வந்தபோது நாகசோன் முதலிடத்தில் நின்றான். மீக்கோ விற்கு இரண்டாம் இடம் கிடைத்தது. அவள் தனக்காக விட்டுக்கொடுத்துவிட்டாளோ என்று அவனுக்கு எப்போதும் ஒரு சந்தேகம். கேட் டால் சிரித்து மழுப்பி விடுவாள். அவனால் கண்டுபிடிக்கமுடியவில்லை.

திருமணமானவுடன் ஜப்பானுக்குப் போட்டி யான தாய்வான், தென்கொரியா நாட்டுத் தொழிற்சாலைகளைப் பார்க்கச் சென்றார்கள். அதன்பின் ஜப்பான் பெருமளவு முதலீடு செய்த தாய்லாந்துக்கும் இந்தோனேசியாவுக் கும் சென்று திரும்பினார்கள். சொந்த முதல், வங்கிக்கடன் உதவியுடன் ஒரு மென்பொருள் நிறுவனத்தைத் தொடங்கலாம் என்று இரு வரும் தீர்மானித்தனர். இதற்கு மீக்கோவின் அண்ணா யுக்கி முழு ஆதரவு கொடுத்தான். அந்த நேரம் பார்த்து ஒரு மறுக்க முடியாத அழைப்பு இரு வருக்கும் வந் தது.



சொனி இலத திரனியல் நிறு வனத்தின் புதிய நிர்வாகத் தலை வராக அக்கியோ மொறிற்றா தெரிவு செய்யப்பட்டார். இந்த நிறுவன த்தை உலக தரத் திற்குக் கொண்டு வந்த சிறப்பு

இவரைச சாரும். சொனி என்றால் மொறிற்றா. மொறிற்றா என்றால் சொனி என்னும் அளவிற்கு அவர் தன்னை அதனோடு இணைத் துக்கொண்டார். விரிவாகத் திட்டத்தின் ஒரு அங்கமாக நாகசோன் தம்பதி பற்றிக் கேள் விப்பட்ட அவர். அவர்களைத் தன்னிடம் வரும் படி அழைப்பு விடுத்தார். இங்கிலாந்துக் கிளையின் பொறியியற் பிரிவைப் பொறுப் பேற்கும்படி அவர் இருவரையும் கேட்டுக் கொண்டார். உயர்ந்த சம்பளம் சலுகைகளோடு இருவரும் குறோய்டன் வந்து சேர்ந்தனர்.

குமார் வன்னியின் மருதநிலமான ஒட்டு சுட்டானில் பிறந்தவன். முள்ளியவளையில் படித்தபின் கொழும்பு தொழில்நுட்பக்கல்லூரி இலத்திரனியல் கற்கை மாணவனாக இணைந் தவன். தொழிநுட்பக் கல்லூரிப் படிப்பை அவன் முடிக்க முடிய வில்லை. அதற்கிடை யில் அவனுடைய வாழ்க்கை திசை திரும்பிவிட்டது. திருத்த முடியா தென்று யாரோ கைவிட்ட 'சொனி' தொலைக்காட்சிப் பெட்டியொன்று அவ னுக்குக் கிடைத்தது. ஓய்வு நேரத்தில் அதற்கு உயிர்கொடு க்க அவன் முயற்சித் தான். உதிரிப்பாகங் கள் கிடைக்காத போது மாற்று உபா யங்கள் மேற்கொண் டான். வயர்களைப் பிரித்தொட்டினான். தனக்குத் தெரிந்த வித்தை களைச் செய்துபார்த்தான்.



தான் செய்யும் ஒவ்வொரு கட்டத் திருத் தத்தையும் தனது பதிவேட்டில் வரைபடம், விளக்கம், மேலதிகக் குறிப்புகள் ஆகியவற் றையும் வரிசைக்கிரமமாகப் பதிந்து வைத் தான். அவனுடைய முயற்சி கைகூடியது. பெட்டி உயிர் பெற்றபோது பெருமகிழ்ச்சி அடைந்தான். அந்தளவோடு விட்டிருந்தால் பரவாயில்லை. கொழும்பு கிரகோரி வீதியி லுள்ள ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக முகவர கத்திற்கு தனது பதிவேட்டை எடுத்துச் சென் றான். சொனி நிறுவனத்தின் ஜப்பான் முக வரியை அவன் கேட்டபோது தகவல் வழங் கும் அதிகாரி அவனைப் பக்குவமாக விசா ரிக்கத் தொடங்கினார்.

பதிவேட்டை மிகவும் கவனமாகப் பரிசீ லித்த அந்த மனிதர் தனது வியப்பை மறைத் தவாறு ஒன்றை மாத்திரம் மீண்டும் மீண்டும் கேட்டார். இவற்றை உனது சொந்த முயற் சியில் செய்தாயா அல்லது யாரேனும் உதவி னார்களா? நானே தன்னந்தனியாகச் செய்தேன் என்று பதில்கூறியபோது அந்த உத்தர வாதத்தை எழுத்தில் தரும்படி கேட்டார். அத் தோடு பதிவேட்டைப் பொறுப்பேற்று அதைச் சொனி நிறுவனத் திற்கு அனுப்பி வைப்பதாகவும் சொன்னார். இதற் கான பற்றுச் சீட் டையும் தயாரித் துக் குமாரிடம் கொடுத்தார்.

சில வாரங்கள் சென்ற பின் குமா ரின் குருவிக்கூடு போன்ற வாடகை அறைக்கு முன் னால் இரு ஜப்பா னியர்கள் வந்து நின்றனர். ஒருவர் வர்த்தக முகவர கத்தைச் சேர்ந்த வர். அடுத்தவர் சொனி நிறுவனத் தின் ஆளணிப் பிரிவைச் சேர்ந்த இடைநிலை அதிகாரி குமாரைச் சந்திப்பதற்காக ஜப்பா னில் இருந்து விசேடமாக வந்தவர். சுற்றி வளைக்காமல் சொனியில் உன்னை இணைத் துக்கொள்கிறோம். ஜப்பான் வருகிறாயா? என்று கேட்டார்கள்.

போக்குவரத்துக் கடினமான போர்ச்சூழல். ஒட்டுசுட்டான் சென்று திரும்புவது மிகவும் கடினம். தாயாருக்குக் கடிதம் எழுதிப்போட்டு விட்டு ஜப்பான் பயணமானான். கடவுச்சீட்டு,

பயணச்செலவு போன்றவற்றைச் 'சொனி' நிறுவனம் கவனித்துக்கொண்டது. 'சொனி' நிறுவனத்தின் பரந்த இலத்திரனியில் பிரிவின் ஒவ்வொரு பகுதியிலும் அவனுக்குத் துரித கதியில் பயிற்சி வழங்கப்பட்டது. மேலதிகாரிகள் அவனுடைய கிரகிக்கும் திறனை அவன் அறியாமல் அளவீடு செய்தனர். திருப்தியேற்பட்டபோது குமார் குரோய்டன் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டான். அதன்பின்பே நாகசோன் தம்பதியுடன் நெருக்கமானான்.

குமாரின் தந்தை நவசி எனப்படும் நமசிவாயம் யாழ்நகர் எல்லைப்புறக் கிராமமான நாயன்மார்க்கட்டில் பிறந்தவன். சிறுவயதில் பெற்றார்களை இழந்தபடியால் அறச்சொற்பப் படிப்புடன் கடையொன்றில் உதவியாளனாகச் சேர்ந்தவன். வயது வந்தவுடன் வியாபாரம் செய்யும் நோக்குடன் கிளிநொச்சி நகரம் வந்தவன். அங்கு காலூன்றும் வேளையில் சிங்கள இராணுவத்தின் படையெடுப்புத் தொடங்கி விட்டது. கையில் அகப்பட்டதை மூட்டை கட்டிக்கொண்டு புதுக்குடியிருப்பு வந்தான். சில காலத்தில் அவனிற்குக் கனகசபை என்ற வயோதிபரின் நட்புக் கிடைத்தது. அவர் ஒட்டுசுட்டான் சிவன்கோயிலடியைச் சேர்ந்தவர். சில நிலபுலன்களிற்குச் சொந்தக்காரன். புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டானிற்குக் காட்டினூடாகச் செல்லும் கிரவற்சாலை உண்டு. முல்லைத்தீவு மாங்குளம் நெடுஞ்சாலையின் கேந்திர இடத்தில் ஒட்டுசுட்டான் சிறுநகரம் காணப்படுகிறது. பழைய வன்னிக் குறுநில மன்னர்கள் ஆதரித்த பிரம்மாண்டமான சிவன் கோயில் ஊரின் நடுநாயகமாக விளங்குகின்றது.

சிவன்கோயிலுக்கு அண்மையில் உள்ள தனது நிலத்தில் நவசியைக் கனகசபை குடியிருத்தினார். அவர் நிலவாடகை கேட்கவில்லை. கோயிலின் தீர்த்தக்கேணியை மாத்திரம் வருடம் ஒருமுறை திருவிழாவிற்குமுன் சொந்தச் செலவில் இறைத்துச் சுத்தம் செய்யும்படி கேட்டுக்கொண்டார். நவசி சரியென்றான். இங்கு நவசி வேரூன்றினான். காசுபணம் பெரிதாகத் தேடாவிட்டாலும் ஊரில் மதிப்பாய் வாழ்ந்தான். ஒரு கெட்ட பழக்கமும் இல்லாத ஆசார சீலனாக இருந்தபடியால் அவனிற்குத் தனி மதிப்பிருந்தது. ஏதோ காரணத்திற்காக நவசி கடைபோட்ட நிலத்தை கனகசபை விற்கவேண்டிய தேவை ஏற்பட்டது. அவர் சொன்ன விலைக்கே நவசி அதை வாங்கினான். இதன்பின் ஊர் மதிப்பு இன்னும் கூடியது.

அவனிற்குக் கலியாண வயதாகிவிட்டது. பலர் தமக்குத் தெரிந்தவர்களின் பெண்களைப் பேசி வந்தார்கள். நவசி பிடிகொடுக்காமல் நழுவி வந்தான். அவனுடைய மனதில் ஒரு யோசனை அதை நிறைவேற்றக் காத்திருந்தான். பட்டு என்ற பட்டம்மாள் அவனுடைய கடைக்குப் பிற பெண்களுடன் வந்துபோவாள். அவளொரு விவசாயத் தொழிலாளி. வெய்யிலில் காய்ந்து கறுத்துப்போயிருந்தாள். தலை நிறைந்தமுடி நன்றாக அழுத்தி முடிந்திருப்பாள். கண்ணிலொரு பிரகாசம். மூக்கும் முளியுமாகப் பார்க்க நன்றாக இருப்பாள். நவசியைப்போல அவளும் நல்ல உயரம்.



ஒரு நாள் ஏதோ காரியமாகப் பட்டு தன்னந்தனியே கடைக்கு வந்தாள். அவள் கேட்ட பொருளை கொடுத்ததோடு அவன் கதையிலி றங்கினான். "கோவிக்காதே ஒன்று கேட்கப் போகிறேன்" என்றான் நவசி. "சரிகேள்" என்றாள் பட்டு. "எனக்கு யாருமில்லை, தனிக்கட்டை. எனக்கு உன்னைப் பிடிச்சுப்போச்சு" என்றான் நவசி. அவளுக்குக் கோபம் தலைக்கேறியது. ஏனையா உனக்கு இது இருக்கா? ஒரு வயசுக்கு வந்த பெண்ணை இப்படி யாரும கேட்பார்களா? உனக்கு ஆசையிருந்தா வா வீட்டுக்கு வந்து முறையாகக் கேளய்யா என்று கொட்டித் தீர்த்தாள். என்றாலும் அவளுக்கு உள்ளத்தில் நிறையச் சந்தோஷம்.

சுந்தருக்குத் தரகு சென்ற சிவனுக்கு நவசி ஒரு தாராளமான அர்ச்சனை செய்வித்தான். பின்பு அர்ச்சனைப் பொருட்களுடன் புதுச் சேலை, இறவுக்கைத் துணியையும் எடுத்துக்

கொண்டு படையாச்சி பொன்னுச்சாமி வீட்டுக்குச் சென்றான். "கடைக்காரத் தம்பி நீரு வித்தியாசமான ஆளுதான். தனியே வாரீரே, எதிலும் அவசரம் ஆகாது தம்பி" என்று இழுத்தார் படையாச்சி. நயினா நான்தான் அவரை வரச் சொன்னேன் என்ற குரல் உள்ளுக்கிருந்து கேட்டது. "தாயில்லாத பொண்ணு அவளுக்குச் சம்மதமின்னா.... எனக்குந்தான்" என்று முடித்தார் அவளுடைய தந்தை. அடுத்த வெள்ளி சிவன் வாசலில் இருவர் திருமணமும் நாலுபேருக்கு முன்னால் நடந்தேறியது. பட்டு, கடைக்காரன் பெண்டாட்டியானாள். ஐந்து வருட வித்தியாசத்தில் இரு பையன்களுக்கு நவசி தந்தையானான். குமார் மூத்தவன். நிலவன் இளையவன். குடும்பம் சீராக நடந்தது. மலையகத்தில் வாழ்ந்து அங்கிருந்து விரட்டப்பட்டு முல்லைத்தீவு வந்து சேர்ந்த பின்பு ஒட்டுசுட்டானில் குடியேறிய படையாச்சி



பொன்னுச்சாமி நோய்வாய்பட்டு படுக்கையில் வீழ்ந்தார். மருத்துவமனையில் சேர்ப்பித்து தன்னாலியன்ற உதவியை நவசி செய்தான். அவரிறந்தபோது ஈமக்கிரியை களைத் தானே நடத்தினான். எல்லாவகைச் செலவுகளையும் தானே பொறுப்பேற்றான்.

பட்டுவுக்குத் தலைகால் தெரியாத பெருமை. ஆனால் சில நாட்களில் அவளுக்குப் பேரிடி வீழ்ந்தது. "பட்டு! பெடியளையும் கடையையும் பார்த்துக்கொள், ஒரு முக்கிய அலுவல் யாழ்ப்பாணம் போய்வாறன்" என்று சொல்லி நவசி கிளம்பினான். கடற்படைத் தாக்குதலில் கிளாலிக் கடலில் காணாமல் போனான். உடல்கூட மீட்கப்படவில்லை. கடும் அதிர்ச்சியில் சில நாள் கிடையாய்க் கிடந்தவள் போகும்போது நவசி சொன்னபடி செய்யத் தீர்மானித்தாள். குமாரின் கல்லூரித் தலைவர் ஆலோசனைப்படி அவனைக் கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரிக்கு அனுப்பினாள்.

அதே ஆலோசனைப்படி இளையவனின் படிப்பை இடைநிறுத்தினாள். அவனுடைய உதவியோடு கடையைத் தானே நடத்தினாள். அதுவும் நெடுநாள் நீடிக்கவில்லை. மாங்குளத்திலிருந்து இராணுவம் ஒட்டுசுட்டான் வந்தபோது சனத்தோடு சனமாக அவளும் மகனும் வெகுதூரம் சென்று விசுவமடுவில் தஞ்சம் புகுந்தனர். கையிலிருந்த பணம் முடியும் கட்டத்தை நெருங்கியபோது குமார் இங்கிலாந்திலிருந்து அனுப்பத் தொடங்கிவிட்டான். இனித் தாயைப்பற்றிய கவலையில்லை என்ற தீர்மானத்துடன் புலிகள் சேனையில் ஒரு போராளியாக நிலவன் இணைந்தான். ஒட்டுசுட்டான் மீண்டும் தமிழர் பூமியாகிய பின் ஒருமுறை பட்டு அங்கு சென்றாள். உருக்குலைந்த அந்த மண்ணைப் பார்த்தபோது அவளுக்கு என்னவோ செய்தது. அவள் வாழ்ந்த வீடும் கடையும் சிதைந்து கிடந்தன. கோயில் வாசலில் சிறிதுநேரம் நின்றுவிட்டு மீண்டும் விசுவமடு வந்துவிட்டாள். அதன்பின் அவள் ஒட்டுசுட்டான் பக்கம் செல்லவில்லை. நிலத்திற்கு விலைபேசி வந்தவர்களுக்கு விற்க முடியாது என்று சொல்லிவிட்டாள். சுறுசுறுப்பாக வாழ்ந்தவளுக்குச் சும்மா இருக்கப் பிடிக்கவில்லை. பெண்களுக்கான அமைப்பில் சேர்ந்து இயன்ற தேசப்பணியைச் செய்தாள்.

இயலாமையை உணர்ந்த சிங்களதேசம் புலிகளோடு அமைதி உடன்படிக்கையைச் செய்தது. இதனொரு அங்கமாக புலம் பெயர்ந்த தமிழர்கள். தாயகம் வந்து செல்லும் வசதி ஏற்பட்டது. நெடியவிருப்பில் தாயையும் தம்பியையும் பார்ப்பதற்குக் குமார் ஓடோடி வந்தான். 'போதும் எழுந்திரு' என்று தாய் சொல்லும்வரை அவள் காலடியில் நெடுஞ் சாணாக வீழ்ந்து கிடந்தான். வீடு திரும்பிய அண்ணனைப் பார்ப்பதற்குத் தன்னுடைய முகாமிலிருந்து நிலவன் வந்தான். இருவருமே முன்புபோல் இல்லை. ஒருவன் பொறியியலாளன். அடுத்தவன் போராளி. தேசப்பற்றொன்று தான் பொதம்சம். இரு நாட்களில் நிலவன் முகாம் திரும்பிவிட்டான்.

ஒருநாள் மதியம் அக்காவென்ற குரலோடு பெண்ணொருத்தி வந்தாள். குமாரைப் பார்த்து வணக்கம் என்றாள். தனது மிதிவண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு வந்தவளின் கால்களை அவன் பார்த்தான். ஒன்று ஜெய்ப்பூர்க்கால். அதுபற்றி அவள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவன்தான் அதிர்ச்சியடைந்தான். வந்த காரியத்தை முடித்துக்கொண்டு அவள் மிதிவண்டியில் ஏறிப்போய்விட்டாள். அதன் பின் இரு நாட்களாக குமாரின் மனதில் ஒரு யோசனை. யாருக்கும் சொல்லாமல் குமைந்து கொண்டிருந்தான்.

இதைக் கவனியாதவள்போல் தானுண்டு தனது அலுவலுண்டு என்றிருந்தாள் பட்டு. உணவருந்தும்போது தாய் தன்னைக் கூர்ந்து கவனிப்பதைக் குமார் உணர்ந்தான். என்ன என்பதுபோல் தாய்முகத்தைப் பார்த்தவனைப் பட்டு "உன் எண்ணப்படி நடக்கும் பேசாமல் சாப்பிடு" என்றாள். "நீ என்ன சொல்றே அம்மா இப்பவே சொல்லேன்" என்றான் குமார். "நான் உன் அப்பன் மனசறிஞ்சு வாழ்ந்தவ. உன் மனசை எனக்கு நன்றாய்த் தெரியும். அந்தப் போராளிப் பொண்ணு உனக்குப் பொருத்த மானவதான். இனி ஆகவேண்டியதைப் பாரு" என்றாள் அந்தத் தாய்.



**அழகெழல் : 2004**

தொகுப்பாசிரியர்: திரு.க.ரட்ணேஸ்வரன்.

யாழ்ப்பாணத் தேசியக் கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம் நடத்திய ஓவிய, நடன கலைப்போட்டிகளில் பரிசு பெற்ற படைப்புக்களின் தொகுப்பு.

*வெளியீடு:*
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
நுண்கலை மன்றம்.

பாதை திறப்பு
பட்டாசு வெடிப்பு
மூலைக்கு மூலை விழாக்கள்
முழக்கங்கள்...
எமக்குள் மட்டும் மாற்றம் இல்லை.....
மரணித்துப்போன எம்வாழ்வும் விழித்தெழவில்லை.
காத தூரம் வழி நடந்த களைப்பு
இளைப்பாற இன்னமும் நிழல் இருப்பேதும் இல்லை.
வலிகாமம் வடக்கிற்கு வருகையில்
இயலாது மூச்சிழந்து இறுகிய வலியிலே நாமும்
சமாதானம் தூவப்படுகிறதாம்
விதைகளாய் எங்கள் ஊர்களில்
ஏன் முளைவிடவில்லை?
இன்னமும்
பாதாள வேலிகள் களையப்படவில்லை
ஏங்கிக் கலங்கித் தெளிவுறாத மண்ணைப்
பாதுகாத்துத் தழுவிக் கொள்ளவும்
எமக்கேயான சட்டமும் இல்லை
சமாதானம் இங்கென்ன நீதிக்கு மாறா?
நாம் மட்டும் என்ன தேசத்தில் விலக்கா?
பாதை திறப்பு ஊர் சுற்ற அழைப்பா?
உல்லாசிகளின் வழியா?
வென்று விட்டோம் என்று பிறநாட்டவர்க்குக் காட்டவா?
சொர்க்கம் இங்கே திறந்தது விரிந்தது
தமிழ்க்குலமே வாருமென
இத்தாலி, இலண்டன், கனடா, டென்மார்க்கெல்லாம்
பறையறைந்து அமைச்சர்கள் பரவசமாம்...
இங்கோ.... அகதி முகாம்கள் அப்படியேதான்.
ஒழுகும் கூரைகள் ஒழுகிய படிதான்
ஒழுக்குக்கு வைத்த பாத்திரங்கள் போலவேதான்
அகதிகள் வாழ்வும்
அதிலேதும் மாற்றம் இல்லை.
மீள் குடியேற்றமும் இல்லை.
சிரித்தபடி இறங்கும் பிறதேச தூதுவர்களுக்கு
வாய்ச் சொற்களில் சர்க்கரையாம்.
தமிழ்க்குலமே!
உச்சரிப்பதைத் தெளிவாக உற்றுக்கேள்
வாழ்வில் குடிகொண்ட நரகம்
இன்னும் எம்மைவிட்டு இடம்பெயரவில்லை
இடம் பெயர்ந்த எம் வாழ்விற்கு
இன்னும் மீள்வில்லை.
இன்னும் நாங்கள் அகதிகளாய்....
இன்னும் எமக்குள் ரணகளந்தான்.

**க.சந்திரா**

# மனநடை 5

ஞானரதன்



## நினைவுகளுக்கு மூப்பில்லை

'சினிமாப் பித்துப் பிடித்து இன்றைய இளம் சந்ததியினர் சீரழிந்து போகின்றனர். இப்படியே தொடர்ந்தால் எம்முடைய மொழி, பண்பாட்டு விழுமியங்கள் எல்லாம் காற்றோடு பறந்துவிடும்"

இது எனது அயல்வீட்டு வயோதிபரின் அண்மைக்காலக் கணிப்பீடு. முதியவர்களைச் சீண்டித் துன்பியலில் மகிழ்ச்சிகாணும் இன்றைய இளவட்டங்களிடம் கிழவனார் அகப்பட்டிருக்கக்கூடும். அல்லது அவர்கள் பாடிக்கொண்டு செல்லும் இன்றைய தமிழ் சினிமாப் பாடல்கள் எரிச்சலை ஊட்டியிருக்கும்.

முன்னைய காலத்தில் சினிமாப்படப் பாடலாசிரியர்கள் அர்த்தமில்லாத சொற்களைப் பாவித்தால் கடும் விமர்சனங்களுக்கு உள்ளவர். முன்னாள் சினிமாப்பாடலாசிரியர் தஞ்சை ராமைய தாஸ் என்பவர் 'அமரதீபம்' என்ற படத்தில் 'ஜாலிலோ ஜிம்கானா....' என்றொரு பாட்டை எழுதியிருந்தார். இப்பாடலில் அர்த்தமில்லாத சொற்களைப் பாவித்தார் எனப் பல விமர்சகர்களி டமிருந்து வாங்கிக் கட்டினார் தஞ்சை ராமைய தாஸ். இதனால் அவர் எழுதிய நல்ல பாடல்களும் பெறுமதி இழந்தன. இது அன்றைய நிலை. ஆனால் இன்று தமிழ்ச் சினிமாப் பாடல்களில் உள்ள தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிக்கும் போட்டியை நடத்துவதுபற்றி ஆங்கிலம் பேசித் தமிழ் நிகழ்ச்சித் தொடர்கள் நடாத்தும் தமிழக தொலைக்காட்சி நிறுவனங்கள் பரிசீலிக்கலாமே?

மொழிச்சிதைப்பு, இசைச்சிதைப்பு, குரற்சிதைப்பு எல்லாம் புதிய கலை வடிவங்களாகிக் கலக்குகிற தமிழ்ச் சினிமா உலகம் கிழவனாரை வெகுதூரம் விரட்டியிருக்கலாம். ஆகவே கிழவனாரின் ஆதங்கம் அர்த்தமற்றதாக எனக்குப்படவில்லை.

இப்பொழுது யாழ்.குடாவில் எந்தப் போக்குவரத்து வண்டியில் ஏறினாலும் வரவேற்பது இந்தத் துள்ளல் இசை, ஆபாசப் பாடல்கள்தான். இனவிருத்திக்கான ஊக்க மாத்திரை தமிழர்களுக்கு அவசியம் தேவைப்படுகிறது எனக் கணித்துவிட்டார்களா இன்றைய பாடலாசிரியர்கள். பட முதலீட்டாளர்களின் நோட்டுக்களுக்குச் சோரம் போன சிறந்த கவிஞர்கள் தலையைக் குடைந்து, குடைந்து, ஒலிக்குறிப்புகளுக்கு வசனம் போடுகிற பரிதாபமும் நடந்தேறுகிறது தமிழ் சினிமாவில். சினிமா என்ற வார்த்தகப் பண்டத்தினுள் நுழைந்தால் இப்படித்தான். முதலீட்டாளர்களின் மனங்களுக்குள் புகுந்து எழுதவேண்டிவரும்

என்பதை இவர்கள் அறியாமலா இருந்தார்கள்? அதுபோகட்டும் என்றால் இந்தப்பாடல்கள் எல்லாம் இங்கு வந்து போக்குவரத்து வண்டிகளில் கழுத்தறுக்கின்றன. பயணிகளின் இசைத் தாகத்தைத் தணிக்கவேண்டிய கட்டாயம் ஏதாவது அவர்களின் சங்கச் சட்டதிட்டங்களில் வரையப்பட்டிருக்குமோ தெரியவில்லை.

வியர்வையில் பிதுங்கி வழியும் சனக்கூட்டத்துக்கு 'துள்ளல் இசையோ ஆபாசப் பாடலோ' சாமரை வீசும் என்பது வாகனச் சாரதியின் நினைப்பு. கிழவனாரும் நிச்சயமாக இவ்வாறான வண்டியொன்றில் பிரயாணம் செய்யாமல் இருந்திருக்க முடியாது.

அவர் தனது இளமைக்காலந்தொட்டு கர்நாடக சங்கீத இசையில் லயித்திருந்தவர். பெண்குரலில் 'காற்றினிலே வரும் கீதம்' என்ற எம்.எஸ்.சுப்புலக்சுமியின் பாடலோ அல்லது ஆண் குரலில் ஜி.என். பாலசுப்பிரமணியத்தின் 'இன்பக்கனாவொன்று கண்டேன்' என்ற பாடலோ எப்போதாவது காற்றில் கலந்து அவரைத்தேடி வருவதாக உணர்ந்திருக்கக்கூடும். அவரின் காதுகளைத் தீண்டிய இன்றைய சினிமாப்பாடல்கள் அவரை வதைக்கூடத்துக்கு அனுப்பியிருக்கும். வாகனத்தைத் தன்பாட்டில் திட்டிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்திருப்பார் கிழவனார். ஒரு காலத்தில் அவர் இசைப்பைத்தியம் பிடித்து பல சங்கீத வித்துவான்களின் குரல்களின் பின்னால் அலைந்திருக்கிறார்.

ஜி.என்.பாலசுப்பிரமணியம், செம்பை வைத்தியநாத பாகவதர், மதுரை மணிஐயர், தண்டபாணி தேசிகர், எம்.எஸ்.சுப்புலட்சுமி, என்.சி.வசந்தகோகிலம், கிட்டப்பா, சுந்தராம்பாள், பட்டம்மாள் எனப்பல இசை விற்பன்னர்களின் புகழ்பெற்ற பாடல்களையும், எம்.கே.தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா, டி.ஆர்.மகாலிங்கம் போன்றவர்கள் நடித்துப் பாடிய சினிமாப்பாடல்களையெல்லாம் மனப்பாடமாகப் பதித்து வைத்திருந்த மனிதன்தான் இந்தக் கிழவனார்.

இவரின் காதுகளுக்கு வாகன இரைச்சல்களோடு கலந்து பீறிட்ட

'அருச்சுனர் வில்லு... அரிச்சந்தர் சொல்லு....
எதிரியைக் கொல்லு.... இமையத்தை வெல்லு....

என்ற 'கில்லி' சினிமாப்பாடல் என்ன செய்திருக்கும்? சித்திரவதையாகவே அவர் அந்தப் பாடலுக்குச் செவி சாய்த்திருந்தால் உணர்ந்திருப்பார்.

அவருக்குரிய காலம் எப்பொழுதோ அவரை விட்டு விலகிச் சென்றுவிட்டதையும் அது திரும்பிவராது என்பதும் அவருக்குத் தெரியும். அதனால் கூடியவரை பௌதீக உலகிலிருந்து அகரீதியாக விலகி வாழ்வதே அவருக்குச்



சுலபமாக இருந்திருக்கலாம். இருப்பினும் இளவட்டங்களுக்கும் அவருக்குமிடையே இடைக்கிடை இடறல்கள் அவ்வப்போது வந்துபோயின.

புலப்பெயர்வின் உபரி உற்பத்திகள் இப்பொழுது யாழ்ப்பாணத்தை எட்டிப்பார்க்கின்றன. நல்லதும் கெட்டதுமான பிறநாட்டுப் பண்புகளோடு வளர்ந்த கனேடியத்தமிழர், பிரெஞ்சுத்தமிழர், ஜேர்மன்தமிழர் என்று வந்து தமது மூதாதையர் வாழ்ந்து மரித்த நிலத்தை அடையாளம் கண்டார்கள். தமது மூதாதையர் தமது கைகளாலேயே

நட்டு வளர்த்திருந்த மரங்கள் எங்கே போயின - என்று அவர்களுக்குச் சிந்திக்க நேரம் இருக்கவில்லை. கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அவர்கள் தொடவேண்டிய நாள் விரட்டிக்கொண்டிருக்க உறவுகளின் முகங்களைப் பார்த்தார்கள். கிழவனாரின் வீட்டின் முன்பாகவும் ஒருநாள் ஒரு 'டொல்பின்' வாகனம் நின்றது. அன்று மாலையே அந்த வாகனம் போய்விட்டது. இனி கிழவனார் இறந்தால் முக்கியமான சிலர் மீண்டும் வரலாம். பத்திரிகைகளில் கலர்ப் படம்போட்டு, மரணஅறிவித்தல் கொடுத்து, தடல்புடலாக கிழவனாரின் புகழைப் பரப்பமாட்டார்களா வந்துபோன புலம்பெயர் உறவுகள்?

கிழவனாரின் நரைத்த 'கிறீல்' தலைமுடியின் பின்னால் உள்ள வரலாறு இது. இளமைக் காலத்தில் அவருக்கு எம்.கே.தியாகராஜா பாகவதர் என்ற சினிமா நடிகர் மீது அளவு கடந்த பக்தி இருந்தது. அன்றைய சினிமாவில் நடிகர்கள் சொந்தக்குரலில்தான் பாடவேண்டும். பின்னணிக் குரல் தொழில்நுட்பம் வராத காலகட்டத்தில் சிறந்த பாடகர்கள் சினிமாவிலும் புகழ்பெற்றனர். பாகவதர் 'மன்மதலீலையை வென்றார் உண்டோ'' எனப்பாடி தமிழ்த்திரையுலகில் புகழின் உச்சியில் இருந்த காலமது. அன்றைய காலத்திலும் இந்த சினிமாப்பித்து இளைஞர்களைச் சும்மாவிட்டதா? இல்லை! பாகவதர் போன்று பலர் 'கிறீல்' வளர்த்தனர். பாகவதரின் உள்ளூர் மாதிரிகளாக ஊரில் வலம் வந்தனர். சிலர் பி.யூ.சின்னப்பா விசிறிகளாக இருந்தனர். சின்னப்பாவுக்கும் 'கிறில்' தலைமுடிதான். பாகவதரைப் பின்பற்றியோ, சின்னப்பாவைப் பின்பற்றியோ 'கிறில்' நாகரிகம் கொடிகட்டிப் பறந்தது. மக்களின் (பெண்கள் உட்பட) அவதானிப்பும் இவர்களுக்கு இலகுவாகக் கிடைத்தது, பாகவதரின் சோடியாகத் திரைப்படங்களில் நடித்தபடி டி.ஆர்.ராஜகுமாரி அன்றைய கவர்ச்சிக்கன்னி, கண்ணழகு, உதட்டழகு பற்றிக் கிழவரைக் கேட்டால்தான் அறிந்துகொள்ள முடியும். உள்ளூர் 'கிறீல்'காரர்கள் டி.ஆர்.ராஜகுமாரியின் கனவில் வாழ்ந்தார்களா அல்லது உள்ளூரில் இராஜகுமாரி போன்ற கவர்ச்சிக் கன்னியைத் தேடியலைந்தார்களா என்பது தெளிவில்லை. அத்தகைய 'கிறில்'காரர்களில் ஒருவர்தான் இன்றைய அயல்வீட்டுக் கிழவனார். 'பூதத்தம்பி' நாடகத்தில் பூதத்தம்பியாகப் பாடி நடித்துப் பெயர் வாங்கியதாக ஒரு சமயம் குறிப்பிட்டார் கிழவனார். அவரின்ன வாழ்க்கைப் பாலத்தின் கீழாக ஓடிய தண்ணீரின் அளவை என்னால் எப்பிடிக் கணக்கிடமுடியும். அவருக்கென்றொரு வாழ்க்கை இருந்தது. எனக்கென்றொரு வாழ்க்கை இருந்தது. எப்பொழுதாவது சந்தித்தால் பேச்சு அவ்வளவுதான்.

டி.ஆர்.ராஜகுமாரியின் லீலைகளைப் பற்றிப் புட்டுப்புட்டு எழுதிவந்த லட்சுமிகாந்தன் என்ற எழுத்தாளர் "ரிக்ஷா" வண்டியில் வந்துகொண்டிருந்தபோது கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டது - பின்னர் இந்தியப் பத்திரிகைகளில் பிரபலமடைந்த லட்சுமிகாந்தன் கொலை வழக்கு - எம்.கே.தியாகராஜபாகவதர், என்.எஸ்.கிருஷ்ணன் இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறையில் அடைபட்டது - 'கலைஞர்களை விடுதலை செய்' என்ற தமிழக மக்களின் கோஷத்துடன்





**திருக்குமரன் கவிதைகள்**

*ஆசிரியர்:* தி.திருக்குமரன்

*"ஆரெண்டெனக் குன்னைத் தெரியாது*
*ஆனாலும் பேரோடு பிறப்பிறப்பும் கண்ணீரஞ்சலியும்*
*ஏதோ கவர்ச்சியுள்ள*
*முக அமைப்பும், ஒரு சிரிப்பும்*
*காதோரமாய்ப் போன கதையும்*
*மதில்மீது ஒட்டப்பட்டிருந்த உன்னைப்பார்த்ததும்*
*கிட்டவந்து பார்க்கத்தோன்றியது."*

திருக்குமரன் கவிதைகள் அதிகம் வெளித்தெரியாது ஆழத்தில் கிடந்தன. இனி அதிகம் பேசப்படும்.

தொடர்புகளுக்கு:

தி.திருக்குமரன்
95/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்குடா சினிமா, கலை ரசிகர்களும் இணைந்து கொண்டமை - பின்னர் ஐந்து வருடச் சிறைத் தண்டனையாகக் குறைக்கப்பட்டுப் பாகவதரும், கலைவாணரும் வெளியே வந்தமை - இவர்களால் பின்னர் பிரகாசிக்கமுடியாமல் போனமை - எல்லாமே கிழவனாரின் மனத்தை அழுத்திய விடயங்கள் என ஒரு முறை என்னிடம் கூறினார். திரை உலகில் உயர்ந்து நிற்பதும் பின்னர் கீழிறங்குவதும் ரசிகர்களின் கைகளில்தான் உள்ளது என நினைக்கிறீர்களா? பொறாமை, பணபலம், குத்துவெட்டு, அடிதடி, அரசியல் செல்வாக்கு என்ற இன்னோரன்ன குணாம்சங்கள் தமிழ்ச் சினிமா உலகுக்கு இன்று நேற்று வந்த பண்டமல்ல என்பதே சரியானது. அது போக, கிழவனாரிடம் வருவோம். இந்தியாவில் பிறந்திருந்தால் சிலசமயம் பாகவதர், சின்னப்பா, மகாலிங்கம் போல ஓரிடத்தைப் பிடித்திருக்கக்கூடும். இவ்வாறான சிந்தனை சிலசமயம் கிழவனாரின் மனதில் இன்றும் மூலையில் உறங்கிக் கொண்டிருக்கலாம். அப்படிச் சிந்திக்கும் சுதந்திரம்கூட அவருக்கு இருக்கக்கூடாதா என்ன? அவர் மகிழ்ந்தது, வேதனைப்பட்டது எல்லாமே அவருடைய இளமைக் கால பிடிப்புகளோடு பெரும்பாலும் தொடர்புடையனவாகவே இருந்தன.



டி.ஆர்.ராஜகுமாரி என்ற ஆணகளைக் கண்களால் கொத்தி இழுத்த சினிமா நடிகை கவர்ச்சியிழந்து, வயோதிபமடைந்து இறந்துபோய் விட்டாலும் அவரிடம் அந்நாட்களில் இருப்புக் கொணட நினைவுத்தடம், அதாவது அவரை ஈர்த்த அந்த வசீகரம் முதுமையடையாமல்தான் இருக்கிறது. இன்றைய இளவட்டங்களைக்கவரும் நடிகைகளான சினேகாவையோ, ஜோதிகாவையோ, சிம்ரனையோ அவரால் எப்படி மாற்றீடாக ஏற்றுக்கொள்ளமுடியும். டி.ஆர்.ராஜகுமாரியைத் தாண்டக்கூடிய அழகி எவரும் அவளுக்குப் பின் வரவில்லை என்றே கிழவனாரின் தீர்மானம். இதேபோன்று இன்றைய இளைஞர்களும் வயோதிபமடைந்து தற்போதைய சினிமா நடிகைகள் அவர்களின் மனங்களில் ஏற்றிவைத்த மாய விளக்கின் துணையோடுதான் பாதையைத் தேடுவார்களா அல்லது இந்தப் போலிக் கனவுலக யாத்திரையிலிருந்து மீண்டு, சினிமாக்கலை என்ற அகன்ற பரப்புலகைப் புரிந்துகொள்ளவும், வளர்த்துச் செல்லவும் முயல்வார்களா அல்லது மாதவன், கமல் மொட்டையென்றும், விக்கிரம், பிரபு தேவா தாடி என்றும், ஒற்றைக்கடுக்கன் என்றும் தொப்புள் நடனத்துக்குத் தாளம் போடுவார்களா என்பதைக் காலம் பதில் சொல்லக் காத்திருக்கின்றது.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் யாழ் நகரில் புதுப் படங்கள் வெளியிட்டால் சனங்கள் நிரம்பி வழியும். வின்சர், வெலிங்டன், ராணி, ராஜா, மனோகரா, றீகல் - நகரின் பிரபல படமாளிகைகள். தமிழ் படங்களான பராசக்தி, மலைக்கள்ளன், ஔவையார், மதுரை வீரன், தேவதாஸ், மனோகரா போன்ற படங்கள் திரையிட்ட போது அலைமோதும் சனத்திரளைப் பார்த்திருக்கிறேன். இன்று யாழ் வின்சர் தியேட்டர் முன்பாக பலசரக்கு வியாபாரம் நடக்கிறது.

கிழமைக்கொரு புதிய தமிழ்ச் சினிமாப்படம் வி.சி.டி யில் வலம் வருகிறது. தமிழ்ப் பத்திரிகைகளின் கலர் நடுப்பக்கங்களுக்கு மார்பையும், தொடைகளையும், தொப்பிள்களையும் மூஞ்சை நுழைக்கும் கதாநாயகர்களின் நடுவே காட்டி அலுத்துப்போய்விட்டனர் தமிழ்ச்சினிமா உலகின் பெண் நடிப்புத் தொழிலாளர்கள். இந்த சி.டி. வெளியீடுகளோடு வேறும் என்னென்ன சி.டிகளோ யாரறிவார்?

வீட்டோடு படக்காட்சி. பற்றாக்குறைக்குத் தொலைக்காட்சித் தொடர்கள் வேறு. ஊரின் சங்கக்கடையில் பின்னேரம் நான்கு மணிவரையும் 'இலையான்' கலைக்கும் மனேச்சர் ஓடிவரும் பெண்கள் கூட்டத்தைக் கண்டு சரியான நேரத்

நாடகம் முடிந்துவிட்டது. கடை பூட்டுற நேரம் வந்து உபத்திரவம் கொடுக்க வருகிறது பெண்கள் கூட்டம்." ஒரு நாளைக்குத் தொடரை விட்டால் அவர்களுக்கு உறக்கம் பிடிக்காது. இதுவும் ஒருவகைச் சினிமாப் 'பித்து'தான். இந்த நிலையில் திரைப்பட மாளிகைகள் எதற்கு? புதுப்புதுக் கட்டி டங்கள் - குளிரூட்டப்பட்ட அறைகளில் வர்த்தக நிலையங்கள், கையடக்கத் தொலைபேசிகள் சகிதம் உலாவரும் நுகர்வோர் கூட்டம். பெருகி விட்ட வர்த்தக நடவடிக்கைகள் - வாகன நெரிசல் - இராணுவ 'பிக்கப்' வாகனங்களில் உயரதிகாரி களின் நகர்வலம் - என்ன யாழ்ப்பாணம் சிங்கப் பூராக மாறப்போகிறதோ? இனியென்ன எல்லா வற்றையும் மறந்துவிட்டு கும்பாபிஷேகங்கள் செய் வோம். சமயப் பணிகள் செய்வோம் எனச் சனம் முடிவுகட்டிவிட்டதா?

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் சண்டை வந்தாலும் வரலாம் என்று இடைக்கிடை பயமுறுத்துவதையும் பொருட்படுத்தாது புதுப்புது வீடுகள் வர்ண வேலைப்பாடுகளுடன் யாழ் குடாவின் கிராமங்களில்கூட எழுகின்றன. மறுபுறத்தில் யாழ்குடாவைச் சுற்றி வளைத்துள்ள இராணுவ முகாம்களில் அடுக்கி வைக்கப் பட்டுள்ள எறிகணைப் பெட்டிகளுக்கு என்ன நடக்கப்போகிறது என்பதுதான் விளங்காத சங்கதி. ஊர் பார்க்க வந்த புலம்பெயர்ந்த உறவுகளுக்கு எல்லாம் மெத்த விசேசமாகத் தெரிந்திருக்கக்கூடும். "ஆமிக்காரன் தன்ரபாட்டிலை திரியிறான். ஒரு பிரச்சனையுமில்லை." சண்டையுமில்லை, சமா தானமுமில்லை. இப்படியே தமிழ்த் தேசியம் செல்லரித்துப் போகும்வரை தொடரட்டும் என்ற நப்பாசை இராணுவத்துக்கு இல்லாமலா?

மோட்டார் சைக்கிள்களில் இன்று 'கிபிர்' ஓட்டம் ஓடித்திரிகின்ற இளசுகள் சிறுவர்களாக இருந்த போது தமது பெற்றோருடன் பதுங்குகுழிகளில் உணவின்றி மரணபயத்துடன் நாட்களைக் கழிக்க வில்லையா? வீடுகளுக்குள், தெருவோரத்தில் மனித உடற் பகுதிகளை மண்வெட்டியால் கூட்டி அள்ளி, சாக்கினில் கொண்டுபோய் புதைத்தோ, எரித்தோவிட்டு வந்தவர்களை ஞாபகப்படுத்த முடியவில்லையா? அல்லது இவர்கள் வேற்றுக் கிரகத்திலிருந்து அண்மையில்தான் வந்திறங்கிய வர்களா? மாவீரர் துயிலும் இல்லங்களை இவர்கள் தாண்டிச் செல்லும்போது தங்கள் வயதையொத்த இளைஞர்களும் யுவதிகளும்தான் இந்த மாவீரர்கள் என்ற எண்ணம் உள்ளத்தில் துளிர்விட மறுக்கிறதா? அல்லது அவர்கள் ஏற்றிவைத்த விடுதலைத் தீப்பொறியை மௌன மாக உள்ளத்தில் சுமக்கிறார்களா என்பதுதான் விளங்கவில்லை. என் வீட்டின் வாசலைத் தாண்டி இராணுவச் சிப்பாய்கள் அப்பாவிகள் போல போவார்கள். ஆனால் தோளில் துப்பாக்கியைக் கைவிடவில்லை என்பதில்தான் விடயம் இருக் கிறது. குருவி சுடுவதற்காகக் கொண்டு திரிய வில்லை என்பது மட்டும் நிச்சயமானது. பிறகு எதற்காக?

செம்மணியில் நடத்திய திருவிளையாடல்களை மீண்டும் நடத்திக்காட்ட விருப்பமில்லாத பௌத்த மத விசுவாசிகளாக மாறிவிட்டார்கள் என விரும்பி யவர்கள் நம்பிக்கை வைக்கலாம்.

போர் ஓய்வு - முகமாலைக்கு அப்பால் புலிகள் - இந்தச் சமநிலைத் தளம்பலில் அதிகம் அக்கறை காட்டாது மக்கள் தம்பாட்டில் போய்க்கொண்டிருக் கின்றனர். அரசியல்வாதிகளுக்குத் தெரியாத அரசியல் இவர்களுக்குத் தெரிந்திருக்கிறதா?

வெளிச்சத்தில் செங்கைஆழியான் தொடர்ந்து எழுதிவரும் *"யாழ்ப்பாணம் பாரீர்"* தொடர் இவ்விதழில் இடம்பெற வில்லை. அடுத்த இதழில்

**'ஆவுரோஞ்சிக்கல்'**



வெளிவரும்

# அரசி



இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

இரவு பத்து மணியாகி மின்சாரம் மோட்சம் அடைந்துவிட்டது. வழக்கமாகக் கொளுத்தி வைக்கும் மேசை விளக்கினை இன்று அப்படி வைக்காதது அரசிக்கு உறைக்கவில்லை. அந்தகாரமான இருள்.

அவளை விழுங்கிக்கொண்ட இருளால் அவள் கலங்கிப்போனாள். இந்தக்கணமல்ல எந்தக் கணத்திலும் இருளைப் பற்றிக் கொண்டால் பயம் அவளைக் கவ்விக்கொள்கிறது.

பிள்ளைகள் முழிப்பாக இருந்திருந்தால் இருளுக்குப் பயந்து அழுதிருப்பார்கள். நல்லவேளை அவர்கள் தூக்கத்தில்.

விசாலமான அந்த வீட்டில் பிள்ளைகளும் அவளும்தான். கூடவே இப்போது இருள். எழுந்து விளக்கைக் கொளுத்தப் பயமாக இருந்தது. நசநசவென்று அவளோடு ஒட்டிக் கொண்டிருந்தது இருள்.

பனிக்காக யன்னற்கதவை மாலையே பூட்டிவிட்டபடியால் பிறைநிலவின் மெல்லொளிகூட அறைக்குள் பரவவில்லை.

வீட்டின் ஹாலிற்குப் போனால் சற்று ஒளிர்வு வரலாம். இருளைவிட அந்தக் மைமல் இருள் அவளைப் பொறுத்தவரை அதிக அதிர்ச்சியைத் தரவல்லது. முழு இருட்டில் ஆளை ஆள் தெரியாது. ஆனால் மைமலில் உருவங்களின் விளிம்புகள் தெரியும். அவற்றின் விகாரமான அசைவுகள் நெழியும்.

அரசி கண்களை இறுக மூடிக்கொண்டாள். மறுபடியும் இருள், கொந்தளிப்பான இருள். கண்கள் வழியாக இறங்கிய இருள் வயிற்றைப் பிசைந்து எப்போதும் வலியைக் கொடுத்தது. உடம்பு நடுங்கியது. விழிகளை மலர்த்தினால் இருள்தான்.

மறுபடியும் மறுபடியும் அவளுள் எழும் கேள்வி இருளைக் கண்டு ஏன் பயம் வருகிறது. இருளைக் கண்டு ஏன் நடுக்கம் வருகிறது. உடம்பு சில்லிடுகிறது. மனம் செத்துப் போகிறது.

ஊர் மகாவித்தியாலயத்தில் அவள் படிப்பு சுமாராகத்தான் போயிற்று. ஓ.எல்.பாஸ் பண்ணி ஏ.எல் வந்தபோது மனத்தில் உற்சாகம் வந்தது. மூன்று அண்ணாக்களும் சுவிஸ், கனடா என்ற படியால் வசதிக்குக் குறைவில்லை.

பிரபல்லியமாக இருந்த ஐயா வளைத்துப் போட்ட ஏக்கர்களால் காணிக்குக் குறைவில்லை. பிறகென்ன பிரச்சினை. படித்துப் பாஸ்பண்ணி தொழில் தேடி மேல் அதிகாரிகளின் கிடுக்குப் பிடிக்குள் சிக்கி வாழவேண்டிய அவசியம் இருக்கவில்லை.

என்றாலும் படித்தாள். ஏ.எல் **(A/L)** சாதாரணமாகத்தான் பாஸ். அவளுக்கு வேலைக்குப் போக விருப்பம். அம்மாவும் விரும்பினாள். ஆனால் அதெல்லாம் எடுபட வில்லை. அண்ணாக்கள் அவளுக்குக் கலியாணம் பேசு என்றார்கள்.

- பாஸ் எடுத்து, பஸ் பிடித்து ஐயா அடிக்கடி வவுனியாபோய் அண்ணாக்களுடன் ரெலிபோனில் கதைத்து வந்தார். அவளும் ஒரு தடவை வவுனியா போய் மனம்கனக்க அண்ணாக்களு டன் கதைத்தாள்.

கலியாணம், கணவன் என்பதெல்லாம் அவளுக்கு ஒரு பெரிய விடயமாக இருக்கவில்லை. ஓ.எல். செய்தபோது தாடிமாமா வீட்டுப பெடியன் தன்னையே அடிக்கடி பார்ப்பதைக் கண்டாள்.

அவன் பார்வையில் ஒருவித பரிதவிப்பு இருந்தது. அதில் உள்ளது ஏக்கமா, தாபமா என்று புரியவில்லை. அவன் ஓ.எல் வரை அவளுடன்தான் படித்தவன். அத்துடன் படிப்பு பட்டுப்போச்சு. தாடிமாமாவின் மச்சானின் பாட்ஸ் கடையில் பாட்ஸ் அடுக்கத் தொடங்கி யிருந்தான்.

அரசி மகாவித்தியாலயத்தால் வரும் நேரங் களை அவன் தான் சாப்பிடப்போகும் நேரமாக மாற்றியிருக்க வேண்டும். அவனது பார்வை தோற்றம் என்பனவற்றால் அரசிக்கு அவன்மேல பரிதாபம் ஏற்பட்டது.

ஒருநாள் சுகந்தியிடம் எக்கணமிக்ஸ் கொப்பி வாங்கிக்கொண்டு வந்தபோது தெரு ஓய்ந்தி ருந்தது. அது ஒரு விடுமுறைநாள், இடைப் பட்ட நேரம்.

பிள்ளையார் கோயில் முன்புறம் இருந்த ஆலமரத்தடியில் அவன் நின்று கொண்டிருந்தான். அவள் நெருங்கினாள். தவிர்க்க முடியாமல் அவனைப் பார்க்க வேண்டியதாயிற்று. "அரசி" என்றான் அவன்.



அவன் குரல் நொந்துபோயிருந்தது. அழுதிடுவான்போல இருந்தது.

"என்ன" எப்படி அந்தக் கேள்வி அரசியிடம் இருந்து பிறந்தது என்று தெரியவில்லை.

அவன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. முடுக்கிவிடப்பட்ட பொம்மைபோல் சேட் பொக்கற்றில் இருந்து கடிதத்தினை எடுத்து நீட்டினான்.

வெய்யில் இல்லாத அந்தவேளை மிகரம்மியமாக இருந்தது. கோயில் மணிக்கூட்டுக் கோபுரத்தில் மயில் ஒன்று ஏறிநின்று அசைந்தது. நாலைந்து குரங்குகள் ஆலமரத்தில் கலைபட்டன.

அரசி அதிரவில்லை. கடிதத்தினை வேண்டாமல்விட மனம் வரவில்லை. அவன் முகம் பட்டபாட்டைக் காணச் சகிக்கவும் இல்லை பட்டென்று வாங்கினாள். பிறகு அந்த இடத்தை விட்டுப் பறந்துபோனாள். அவன் விழிகளில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு போய்விட்டான்.

பிறகு எத்தனை தடவை அவள் யோசித்திருப்பாள். தாடிமாமாவின் மகனின் காதலைக் கருத்துடன் ஏற்றிருந்தால் எப்படி இருந்திருக்கும். அவனுக்கு ஒரு பாட்ஸ்கடை வைத்துக் கொடுத்து அவனுடன் சந்தோஷமாக வாழ்ந்திருக்கலாம். கோயில் திருவிழாக்கள், நண்பர்கள் வீடுகள், கலை நிகழ்ச்சிகள் என்று எத்தனை இடங்களுக்கு அழைத்துக்கொண்டு போயிருப்பான். எலலாம் போச்சு. இப்போது யோசித்து என்ன பயன்.

அவன் இப்போதும் அதே பாடஸ்கடை அதேவேலை - அதேமாதிரியாக பாட்ஸ்களை அடுக்கிக் கொண்டு.

அரசி அவனை நிராகரித்த காலத்தில் அவன் படையாய் ஊத்தை படிந்த சேட் சகிதம் வேலைக்கும் போகாமல் பிள்ளையார் கோயில் ஆலமரத்தடியில் படுத்துக்கிடந்தான்.

தாடிமாமா அவனை ஒருநாள்

அடிபோட்டு அழைத்துக் கொண்டு போனார். பிறகு விசரன் போல வீட்டிலேயே கிடந்தான். காலம் கரைந்து அவன் மறுபடி வேலைக்குப் போய் மனுசனான போது அவளைக் கண்டும் காணாதவன்போலவே போனான். அரசிக்கு அப்போதுதான் ஒருவகை வேதனை பிறந்தது. அவளை அறியாமலே அவள் கண்கள் கலங்கின.

கலியாணப்பேச்சுக்கள் நடந்தன. அவளுள் கலியாண நினைப்புகள் முளைவிட்டன. பிறகு வளர்ந்து மலர்ந்தன. மணம் பரப்பின. அவள் முகம் சிரித்தாள். விழிகளில் சந்தோஷம் நிரம்பி வழிந்து நெஞ்சு துடித்து நிமிர்ந்தது.

முதலில் பேசிய மூன்று நான்கு பேச்சுக்கள் குழம்பிக்கலைந்தன. சாதகம் பொருந்தவில்லை - அவளைப் பிடிக்காமற்போயிற்று - அவள் நிறம் குறைவு என்றனர் - சாடையான கூனல் என்றனர்.

அரசிக்கு இப்போதுதான் தாடிமாமாவின் மகனின் அருமை புரிந்தது. அவனுக்கு என்னில் என்ன பிடித்தது என்று யோசிக்கத் தொடங்கினாள்.

“அரசி உன்னைக் காணும்போதெல்லாம் நெஞ்சு படபடக்கிறது. உன் கண்களை எப்போதும் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டும் போல உள்ளது.” என்று அவன் எழுதிய கடிதத்தில் இருந்ததை யோசித்தாள்.

நான்காவது கலியாணப் பேச்சும் சரிவரா மற்போன இரவு அவள் வெகுநேரம் விழித்திருந்தாள். வானத்தில் முழுநிலவு. தென்னை மரங்களில் அது பாலாய் வழிந்தது. மிஞ்சியது மணலில் சேர்ந்து பொங்கிச் சரிந்தது.

அரசி கிணற்றடிக் கல்லில் இருந்து வெகுநேரம் அழுதாள். அழுதுகொண்டு வந்த அம்மா அவள் தலைதொட்டு முகம் தடவி சமாளித்தாள். அரசி எழுந்து வீட்டுக்குள் போனாள்.

அடுத்தநாளே கலியாணப் புறோக்கர் ஐந்தாவது சாதகத்தினைக் கொண்டு வந்தார். சாதகம் எண்பது வீதம் பொருந்தியிருப்பதாகப் புளுகித் தள்ளினார்.

அவளுக்கு அதிசயமாகத்தான்பட்டது. தன்னைப் பார்க்காமலே மாப்பிள்ளை கலியாணத்திற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டாராம்.

ஐயா சீதனத்தை அள்ளிக் கொடுக்கவில்லை. தூக்கிக் கொடுத்தார். வளைத்துப் போட்ட காணிகள் எல்லாம் அவளுக்கும் அவருக்கும் தருவதாக முடிவாயிற்று.

அவள் மனம் துடித்தது. எப்படி அவர் தன்னைக் காணாமல் சம்மதம் தெரிவித்தார். கலியாணம் முடிந்த பிறகு அவர் என்னை வெறுத்தால் நினைக்கவே பயங்கரமாக இருந்தது.

மணமேடையிற்தான் அவரை முதன்முதலில் கண்டது. அவர் அவளை சிநேகமாகப் பார்க்கவில்லை. இதழ்க் கோடியில் புன்னகைக் கீற்றுக்கூட எழவில்லை.

சம்பிரதாயங்கள் முடிந்து படம் எடுத்தபோதும் வீடியோவுக்குப் போஸ் கொடுத்தபோதும் அவர் அவளைக் கவரவில்லை. திருமண நாடக அரங்கு நிறைவு பெற்ற அந்தவேளை அவள் களைத்திருந்தாள்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

அவரும் அவளும் தனித்தபோது இரவு பதினொரு மணியாகிவிட்டது. ஜெனரேட்டர் வேலை செய்துகொண்டிருந்தபடியால் அறைக்குள் லைட் எரிந்து கொண்டிருந்தது.

அறைக்கதவைப் பூட்டிய அவர் லைட்டை நிறுத்தினார். சட்டென்று இருள் புகுந்து கொண்டது. அரசி அதிர்ந்துபோனாள்.

பிறகு எல்லாமே சிதறிப்போனது. இருளில் அவர் பதுங்காமல் பாய்ந்தார். கையைப் பிடித்தபோது அதில் கனிவு இருக்கவில்லை.

இருள் நெகிழ்ந்து மைமலானது. அந்த அறையைவிட ஏனைய இடங்களில் வெளிச்சம் இருந்தபடியால் அறைக்குள் ஆளைஆள் தெரிந்தது. என்றாலும் அவர் முகம் அதில் கிளர்த்தும் உணர்வுகளை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சட்டென்று ஜெனரேட்டரும் நின்று போனது. மைமல் இருள் பறந்தே போயிற்று. அவர் வேகம் கொண்டார். இருளில் அவர் நெகிழ்த்தி களைந்தார். காதுக்குள் என்னவெல்லாம் சொன்னார். “மரம் மாதிரிக் கிடக்காதே”

என்றார். களைத்திருந்த அவள் கலங்கிப் போனாள்.

அதையெல்லாம் கவனிக்காமலே அவர் கணக்கைச் செய்துமுடித்தார்.

இத்தனை வருடங்களுக்குப் பிறகும், ஐந்து பிள்ளைகளுக்குப் பிறகும் இப்போதும் இரவில் தான் அவர் சிரிக்கிறார். இரவு என்பதுகூட தப்பு. இருள்திண்ட இரவுதான் அவருக்குப் பிடிக்கும். அந்த இருளில்தான் காதுக்குள் சிரிப்பார். கரகர வென்ற அந்தச் சிரிப்பு நாசகாரமாக இருக்கும்.

சிகரெட் புகைகுடித்த வாயும் அதை மறைக்க அடித்த கோலோன் மணமும் பச்சைமாமிசமாய் நாறும் என்றாலும் பொறுக்கவேண்டும். இருளில் அவர் காட்டும் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி தெரிவிக்கவேண்டும். பணியவேண்டும். பலியாக வேண்டும். மற்றப்படி.

அன்று காலையில் நாலரை மணிக்கு கண் விழித்தபோது வானவெளியில் ஒரு பறவை சந்தோஷமாகச் சப்தித்தபடி பறந்து போயிற்று. அதற்குக் கிடைத்தபேறு யாருக்குக் கிடைக் கும். நெஞ்சில் வலி எடுத்தது.

அறையின் மூலையில் விடிவிளக்கின் ஒளிச் சிதறலில் இருள் துண்டுதுண்டாய்ப் போய் இருந்தது. நுளம்புவலை மூடிய கட்டிலில் அவர் குப்புறச் சரிந்து கிடந்தார். அவர் பிடியில் தலையணை ஒன்று நைந்துபோய்க் கிடந்தது. குப்புறக் கிடந்ததால் குறட்டையின் சத்தம் அமுங்கிப்போய் இருந்தது.

தரையில் கிடந்த பிள்ளைகள் மூலைக்கு ஒருவராக சுருண்டுகிடந்தனர். கடைசிமகள் தலை யணையை அணைத்தபடி கிடந்தாள். அவளைப் பார்க்க அரசிக்குப் பாவமாக இருந்தது. அவள் முழித்தால் நிச்சயம் தன்னைத் தேடுவாள். ஆனால் என்ன செய்வது?

படுக்கையை விட்டு எழுந்தாள். ஓசைப்படா மல் நடந்தாள். அதிராமல் அறைக் கதவைத் திறக்கவேண்டும். சத்தம் கேட்டால் பிரச் சினை. பிள்ளையும் எழும்பிவிடும்தான் ஆனால் அதனைச் சமாளித்து விடலாம் - அவரை?

அரசி கதவை நெருங்கினாள். என்ன கஷ்டகாலமோ - கதவு அருகே மேசையில் இருந்த செம்பு தட்டுப்பட்டு தரையைத்தொட்டு "கலீர்" என்றது. அரசி வெலவெலத்துப் போனாள்.

தலையணையை விசிறியபடி அவர் கிளர்ந் தெழுந்தார். "இந்த வீட்டில் மனிசர் நித்திரை கொள்ளேலாது - என்ன சனியன்களப்பா இது" கோபமாக வார்த்தைகள் வெடித்துச் சிதறின.

"அதப்பா - செம்பு தவறி விழுந்திட்டுது." அரசி கந்தலாப்போன தன் குரலில் சொன் னாள்.

"போடி.... போய் குசினி வேலையைப் பார் - அதைத்தவிர வேறை என்ன தெரியும்" என்றபடி திரும்பக் குப்புறப்படுத்துவிட்டார்.

அரசி விம்மி வெடித்தபடி வெளியே வந்தாள். பெரியவீடு - பெரிய வளவு எல்லாம் பெரிதுதான் - அவரும் பெரிதுதான் ஆனால் அவர் மனம்.

குசினிக்குள் விளக்குக் கொளுத்தி அடுப்பு மூட்டித் தேனீக் கேற்றிலை அடுப்பில் ஏற்றி அவள் சுறுசுறுப்பாகி விட்டாள். பிள்ளைகள் ஒவ்வொருவராக எழும்பிவர அவள் பம்பரமா னாள்.

காலை எட்டுமணிக்கு பிள்ளைகள் எல் லோரும் பள்ளிக்கூடம் போனபின்னர் வயிற்றை விறாண்டியது. காலை ஐந்து மணிக்கு எழும்பியபின்னர் சொட்டுத் தேனீர் கூட வாயினுள் இறங்காதது அப்போதுதான் தெரிந்தது.

அவர் இன்னமும் எழும்பவில்லை. இன்ன நேரத்திற்குத்தான் எழும்புவார் என்றும் எதிர் பார்க்க முடியாதுதான். அரசி மறுபடி குசினிக் குள்போய் கொஞ்சமாகத் தேனீர் தயாரித்தாள். இரண்டு மிடறுதான் குடித்திருப்பாள்.

குசினிவாசலில் நிழலாடியது.

"நேரஞ்செண்டு படுத்த மனிசன் எழும்பிச் சுதோ என்னவோ எண்டு பார்க்கத் தெரியுமே - நான் எழும்பி எவ்வளவு நேரமாச்சு எண்டு தெரியுமே" என அவர் முறைத்தபடி சொன்

னது அரசிக்கு ஒன்றும் புதினமானதல்ல.

அரசி சுடுதண்ணி குடித்த மிருகம்போல பதறித்துடித்து ரீ தயாரித்து அவர் கையில் தந்தபோது அவள் மனம்போல பதறிய கையில் இருந்து ரீ தவறியது. அவர்மடி - அவர் சாரம் எல்லாம் நனைந்தது.

"படார்" என்று விழுந்தது அடி - அரசியின் கன்னம் வெட்கப்படாமலே சிவந்தது.

அவர் கோபம்கொண்டு போய்விட்டார். மத்தியானச் சாப்பாட்டுக்குக்கூட வரவில்லை. அதற்கு வருவதுகூட ஒழுங்கில்லை. கேட்க முடியாது. சமைத்து வைத்துவிட்டுப் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியதுதான்.

வழக்கமே இப்படி என்றால் இன்றைக்கு எப்படி இருக்கும். அரசி எழுந்து ஹாலிற்கு வந்தாள். நெருப்புப் பெட்டியைத் தேடி எடுத்து விளக்கைக் கொளுத்தியபோது இரவு பதினொருமணியாகிவிட்டது.

மோட்டார் சைக்கிள் வாசலில் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அரசியின் உடல் அணுக்கள் அதிர ஆரம்பித்தன.

வாசல் கதவைத் திறந்தாள். அவர் வந்தார்.

அவருக்குமுதல் அவர் குடித்திருந்ததன் வாடை வந்தது. நேரே அறைக்குள் போனார். உடையை மாற்றிக்கொண்டு ஹாலிற்கு வந் தார்.

அரசி பிரமை பிடித்தவள்போல நின்றாள். 'சாப்பிட வாங்கோ' என்று கேட்பதா? எதைக் கேட்பது என்பதை முடிவு செய்ய முடியாமல் திணறினாள்.

அவர் மறுபடி அறைக்குள் போனார். "அரசி" என்றார். கரகரத்த குரல் அறையை விட்டுப் பாய்ந்தோடி வந்தது.

அரசி அறைக்குள் போனாள். அறைக்குள் விளக்கு இல்லை - மறுபடி இருள் - இருளில் அரசி புதைந்து போனாள். அவர்வாடை அவளை மூச்சு முட்டவைத்தது.



# வாழ்க்கைப் பாடம்

உனது மார்கழிப் பார்வை பட்டு
வசந்தம் பெறும் என்றிருந்த
எனது விளைநிலங்கள்
உப்புக் கோடுகள் விழுந்து
கரித்துப் போனதன் மாயமென்னவோ
யான் அறிந்திலேன்.
உந்தன் மேனி தழுவிய
தாவணித்தலைப்பின் வருடல்களினால்
ஜீவப்பூக்களைச் சொரியுமென்றிருந்த
என் தோட்டத்து ரோஜாக்கூட்டம்
முட்கள் மழிக்கப்பட்டு
கள்ளிச்செடியாய் வழுக்கும் விந்தை
என்னவென்று நான் தெரிந்திலேன்.
நினது நட்பின் துணைகொண்டு
ஓசோன் துவாரத்தை அடைத்துவிட
நிமிர்ந்து நான் எழுந்தபோது
எனது வீட்டின் கூரை
களவாடப்பட்டதை காணமுடியாதபடி
என் வெற்றுக் கண்களை மறைத்த
செயற்கைக் கிரகத்தை
இற்றைவரை நான் உணர்ந்திலேன்.
எனினும் துயில்தலற்றுக் கழிந்த
எண்ணற்ற எனது இரவுகளிற்கு
பரிசாகக் கிடைத்த ஓர்
காகிதத்துண்டின் பலன;
என் காரியாலயக் கதவுகள்
எனக்காக இன்னும்
அகலத் திறந்திருக்கின்றன.
ஓ.... என் வயதொத்த தோழர்களே
இவ்விடயத்தில் நீவிர் சற்று
விழிப்பாயிருக்க வேண்டுகிறேன்,
ஏனெனில்
நாமெல்லாம் சராசரி மனிதர்கள்தானே.
□□

**வேல் லவன்**

நல்ல மனம் கொண்டோரின்
நீர்க் குடுவைகள் மீது
நீரலைகளை வருடச் செய்யும்
சதுப்பு நிலங்களின் மேலே
குன்றுகளின் முதுகுகள்
புறங்கவிந்து கொள்கின்றன.

எரிகின்ற பட்டயங்கள் போல்
துரோகத்தின் வதந்திகள்
பரவுகின்றன.

இரவு வரும் வேளைகளில்
வெளவால் கூட்டங்களை
ஏவி விடுபவர்களும்
அச்சம் என்ற கல்லில்
தங்கள் ஆயுதங்களை
கூர் தீட்டிக் கொள்பவர்களும்
இவர்கள்தான்.

படு நாசம் என்ற
அடிமைக் கப்பல்கள் மீது
வீசும் காற்றலைகளில்

கொங்கோ நாட்டுக் கவிதை.

# ஒரு கை நிறைந்த செய்திகள்



ஊட்டமளிக்கும் குருதியினால்
பூமியின் நாளங்கள் புடைக்கின்றன.
கொம்புகளும்
துழாவிப் பிடிக்கும் கொடுக்குகளும்
கொண்ட
பூதங்கள் நிறைந்த
நகரங்கள் கிராமங்கள் குக்கிராமங்கள்
காடுகள் வனங்களாலும்
இந்தப் பூமி நிறைந்திருக்கிறது.
அவர்களின்
நீண்ட பிடரிமயிர்கள்
சூரியன் முகம் பார்க்கும்
கண்ணாடியாய் இருந்தன.

குற்ற வாளிகளின் ஆன்மாக்கள்
மிதக்கின்றன.
பூமியிலுள்ளோர் பூசல்கள் பற்றி
அவர்கள்
அக்கறை கொள்ளவில்லை.
மின்னலிடம் பறித்தெடுத்த
தீக் கொடுக்குகளால்
அவர்களது வைர நெஞ்சங்கள்
இழைக்கப் பட்டிருந்தன.

சந்தேகமேயில்லை
அந்த வெறுப்பு
ஒரு பிடி

புகையும் தசையினால்
ஆனதாகத்தான் இருக்கவேண்டும்.
சந்தேகமேயில்லை.
அந்த ஆன்மாக்கள்
பழி தீர்க்கும் செபமாலையை
உருப் போட்டபடிதான்
இருக்க வேண்டும்.

ஆனால்
கொடூரத்தின்
கறுப்புக் காதுகள் போலவே
பிடிவாதம் என்ற
உலோக முட் சாட்டை
பேசிய
இருளார்ந்த மொழியின்
ஒரு சொல்லைக் கூட
ஒரு போதும்
அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.
அதற்கெதிராகப்
பாம்பாட்டியின் கோபமோ
ஏறிகத்தியின் வன்செயலோ
ஏதும் செய்ய முடியவில்லை.

**ஆங்கிலத்தில்: அன்ரொய் றோஜர் போலாம்பா**
**தமிழில்: வின்சன் புளோறன்ஸ்**

# கல்வெட்டுப் பண்டிதர்காள்!

**யாழ்பாடியார்**

நீர்
மன்னராயின்
மகுடம் சூட்டி
இந்த மண்ணை அலங்கரியும்
வீண் வண்ணங்கள் பாடி
வாழ்வைக் கழியாதீர்
மாற்றான்
உம் மனைநோக்கி வந்தால்
"ஈண்டு வாரும்..... இரும்...." என்று
மைதோண்டி
மத்தாம் பேனாவால்
'கல்வெட்டு' கடையாதீர்.
'பண்டிதர்' என்று
பலர் கண்டு பயப்பட
நீர் பண்ணுவதோ 'புலம்பல்'?
சின்னப்பு செத்தார்
"சீவனுள்ளளவும்
பொன்னப்பு என வாழ்ந்த புருஷர்
அவர்"
என்று பொய்யடுக்கி
செத்தவரை, அவரைச் சேர்ந்தவரைக்
குளிர்வித்து
"நீர் இல்லாது என்னப்பு இனி எமக்கு?"
ஏக்க முடிப்போடு
எதுகையோடு பல செய்யுள்
தந்தப்பு என்ன பயன் தரணிக்கு?
எதுவும் இல்லாதானுக்கும்
எல்லாம் இருக்கும்
பொல்லாதானுக்குப் புகழ்மாலை
இல்லாததெல்லாம் இருக்கும்
உம் கவியில்....
உம் மனைவி செத்ததுக்கும்
ஊரார் செத்ததுக்கும்
ஒப்பாரி வைத்து
ஒழுகிவரும் உம் கவிதை
எப்பாரிலும் இல்லை இனி.
எனிலும்
போர் பொசுக்கிய எங்கள் பொன்நகரம்,
இன்பப் பொழுதுகள்,
எழில் நிறை கனவுகள்
ஏற்றமிகு உறவுகள்....
இவற்றைப் பாடுமின்
பாவியான எம் பூமிப்பழுதுடைமின்
மீண்டும் எம்பூமி
மிடுக்கோடு சிரித்து நிற்க வேண்டுமின்.
எரியும் பிரச்சினையைப் பூவாக்கிப்
பாமாலை பல தொடுமின்
பன்னீர் தெளித்து
வசந்தத்தின் வாசற்படி நனைய
நீர் மன்னராயின்
மகுடம் சூட்டி
இந்த மண்ணை அலங்கரியும்
□□




எங்கே தவறிற்றென்று தெரியவில்லை. ஞாபக இழையில் எந்தப் பகுதி இளகிப் போயிற்று...? எப்போது எப்படித் தவறியிருக்கக்கூடும்? அவள் இவ்வளவு அவதானமாயிருந்தும் அவளது அவதானம் இன்னும் போதாதா....? இன்னும் கவனமாயிருந்திருக்க வேண்டுமா அவள். தவறிய இடம் தெரியாமல் அவள் வழியெங்கும் தேடினாள். குருட்டாம்போக்கில் நடந்தாள். எங்கேனும் கிடைக்கக்கூடுமோ...? இல்லை. எங்கும் இல்லை. யாரும் எடுத்துவிட்டார்களோ...? அநாதரவாய்க் கிடந்ததென்று. அப்படியும் இருக்குமோ....? எப்படியிருப்பினும் அவள் தவறவிட்டது தவறவிட்டதுதான். இனி அது அவளுக்குக் கிடைக்கவா போகிறது? கிடைக்கலாம். அது அவளுக்குரியது எனில் எப்போதேனும் அவளது காலநீட்சியின் கடைசிப் புள்ளியிலேனும் அவளுக்குக் கிடைக்கலாம். ஆனால் காலநீட்சியின் கடைசிப் புள்ளியில் அதைப் பெற்று அவள் என்ன செய்யப்போகிறாள் என்பதுதான் கேள்வி. அது கிடைப்பதனால் ஏற்படும் ஆறுதலைத் தவிர்த்து.

சின்ன வயதில் தொலைத்ததும் இப்படித்தான். ஒரு கைக்குட்டை. அழகிய மென்சிவப்பு நிறத்தில் துளித்துளியாய்ப் பூக்கள் போட்ட கைக்குட்டை. அவள் கையில் அம்மா தந்த முதல் கைக்குட்டை. ஒரு திருமணத்திற்குப் போகும் போது அம்மா அதைக் கொடுத்திருந்தாள். அது வரைக்கும் அம்மா கையிலிருப்பதை ஆசையாசையாய்ப் பார்ப்பவள் இப்போது தனக்கென்றும் ஒன்று கிடைத்தது குறித்து ஆனந்தப்பட்டிருந்தாள். திரும்பத்திரும்பக் கையில விரித்து, மடித்து பெருமிதமாய்க் கையில் வைத்திருந்தாள்.

அந்தக் கைக்குட்டை தவறிப்போயிற்று. எந்தக் கணத்தில் அது தவறியது என்பதை அவள் அறியாள். சின்ன வயதின் குதூகலத்தில் அங்கு நின்றிருந்த தன்னொத்த சிறிசுகளோடு விளையாடிக் கொண்டிருந்தபோது அது கைகளைவிட்டு நழுவியிருக்கக்கூடும். அல்லது கலியாணத்தில் நீட்டப்பட்ட கற்கண்டுத் துண்டுகளை ஆசையாய்க் கிள்ளி எடுத்தாளே, கலியாணத்தில் சத்தமாய் மேளம் அடித்தபோது எல்லாரும் பூக்களைப்போட இவளும் எட்டிப் பூக்களை வீசிறினாளே அப்போது அவளது கைக்குட்டை தவறியிருக்கக்கூடும். அது நழுவிய வேகத்தை யாரும் கண்டிருக்கக்கூடாதோ...? கைக்குட்டை பெரிய விஷயமில்லை. அந்த வயதிற்கு அது பெரிதாய்ப்பட்டது. ஓடியோடித் தேடினாள். கதிரைகளின் கீழ், சுவர்க்கரைகளில், விரித்துக்கிடந்த பாய் விளிம்புகளுக்குக் கீழே, முற்றத்தில்.... என ஆவலோடு தேடினாள். அம்மா அறிவதற்கு முன் அதைக் கண்டுபிடித்துவிடவேண்டும் என்ற பரபரப்போடு ஆவலாய்த் தேடினாள். கிடைக்கவில்லை.

யார் எடுத்திருக்கக்கூடும்? தனக்குரியதைப் பத்திரமாய் வைத்திருக்கும்போதுதான் அது தன்னிடம் தங்குமோ....? தன்னுடையது தானே என்ற அலட்சித்துடன் இருக்கும் போது அது தவறியேனும் விழுந்து தன்னைத் தேடுபவர்களைச் சென்றடையக் கூடுமோ...? 'அது' தவறித்தான் போயிற்று. 'அது' தேவைப்பட்டவர்கள் அதை எடுத்திருக்கக்கூடும்.

அந்தச் சனங்களுக்கிடையில் அவள் அதை எங்கு தேடக்கூடும்?

அம்மாவிடம் அதைப் பயந்து, பயந்து தான் சொன்னாள். அம்மா அவள் பொருட்களில் கவனமில்லை எனக் காய்ந்தாள். இனியேனும் அவளுக்குரியதைப் பத்திரப் படுத்தத் தெரியவேண்டும் என்றாள். நல்ல வேளையாய். தொலைந்துபோனது கைக் குட்டைதான் என்றும், சங்கிலியோ, தோடோ தொலைந்துபோகவில்லை என்றும் ஆறுதற் பட்டாள். எனவே இனி கைக்குட்டையில் மட்டுமன்றி சங்கிலி, தோடுவரைகூடக் கவனமாக இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தினாள். அப்போதுதான் அவளுக்கு சங்கிலி, தோடுகூட கழன்றுபோய்த் தொலையக்கூடும் என்பது தெரிந்தது. அம்மாகூடச் சேர்ந்து தேடினாள். இவளது ஆக்கினை தாளாமல், அந்தப் புள்ளிப்புள்ளி மென் சிவப்பு நிறக்கைக்குட்டையினை யாராவது கண்டார்களா என அம்மாவும், அவளுக்காக யார்யாரிமோ எல்லாம் விசாரித்தாள். கிடைக்கவில்லை. இவள் கவனயீனமாய் இருக்கிறாள் என்பதே அம்மாவின் குற்றச் சாட்டாய் இருந்தது. அந்தக் கவனயீனத் துக்காக என்ன செய்வதென்பது மட்டும் அவளுக்குப் புரியவில்லை. ஆனால், அந்த வண்ணக் கைக்குட்டை அடிக்கடி கனவில் வந்து கண்ணாமூச்சி ஆடியது. அது கிடைப்பது போன்ற கனவுகள், கனவுக்கும் நனவுக் குமிடையே அவளைத் திண்டாட வைத்தன. அது உண்மையா, பொய்யா என உணரவே சில கணங்கள் பிடிக்கும். அந்தக் கைக் குட்டை எங்கே இருக்கிறதாய்த் தோன் றுமோ, அங்கே விழித்தவுடன் ஓடிப்போய்ப் பார்த்து ஏமாந்திருக்கிறாள். கண்களை முட்டிக் கண்ணீர்வரும். ஏன் இப்படிக் கடவுள் அவளை ஏமாற்றுகிறார் என்று தோன்றும். எத்தனையோ வருடங்கள் கடந்தபோதும் அந்தக் கைக்குட்டை மட்டும் கண்ணுக்குள் ளேயே நிற்கின்றது. இப்போதுகூட தொலைந்துபோன கைக்குட்டையை எங்கேனும் கண்டால் அவளால் அதை அடையாளப் படுத்த இயலும். ஆனால் இதுவரைக்கும் அதைப்போல் ஒன்றை அவள் காண வேயில்லை. அதைப்போல் ஒன்றெனினும் கூட, அதைவிட சிறந்ததாய் இருப்பினும்கூட அது அவள் மனதைக் கவரவில்லை என்பதே உண்மையாய் இருந்தது.

கைக்குட்டை தொலைந்து வருடங்கள் பல கடந்துவிட்டன. அதற்கிடையில் அவள் இன்னும் சிலவற்றைத் தொலைத்திருந்தாள். அவற்றுக்கான பட்டியல் இப்போது அவளிடம் இல்லை. அவை அவ்வளவு முக்கியப் படுகின்ற விஷயங்களாயும் இல்லை. முதன் முதலில் இழந்ததால் கைக்குட்டையின் இழப்புப் பெரியதாய்த் தோன்றியிருக்கக் கூடும் அப்புறம் சில சில்லறைகள், பேனா, புத்தகம், முத்திரைகள், பென்சில் இப்படி தொலைந்தவற்றின் பட்டியல் நீளும். சில காணாமற்போய்த் தேடும்போது கிடைக் காமல், வேறேதும் தேடும்போது கைகளுக்குள் சிக்கி அவளை ஆச்சரியப்படுத்தியிருக்கின்றன. அப்போதெல்லாம் அவளுக் குத் தோன்றும், அவளுக்குக் கிடைக்க வேண்டியது எப்படியும் அவளுக்குக் கிடைத்தே தீரும் சற்றே தாமதமானாலும் கூட. சில கிடைக்காமலும் போயிருக்கின் றன. யாரேனும் எடுத்துக்கொண்டவை எப்போதும் திரும்பி வரப்போவதில்லைத் தான். அந்தச் செருப்பைப்போல....

அப்போது அவள் இளமைத் துடிப்பின் வாசலில் இருந்தாள். கோயில் திருவிழா வுக்குத் தோழிகளோடு சென்றிருந்தாள். நிறைந்த சனங்களின் மத்தியில் ஓரமாய்ச் சைக்கிள்களோடு செருப்பைப் பத்திரப்படுத் தினார்கள். கல்யாண வீடுகள், திருவிழாக் களின்போது எப்படியும் சிலசோடி செருப்

புக்கள் தொலைவது நியதி. இந்தமுறை அந்த ஒரு சிலவற்றுள் அவளுடையதும் அடங்கிப்போயிற்று. கோவிலில் நிற்கிற வரை செருப்புப் பற்றிய சிந்தனையே அற்றுப் போயிருந்தது. மனதொன்றி அபிஷேகத்தால் உளம் கனிந்து வந்தபோது அதிர்வு தூக்கி வாரிப்போட்டது. புதுச்செருப்பு. போன வாரம்தான் வாங்கியிருந்தாள். இன்னும் காலுக்கு இதமாகாமல் நெருடிக்கொண்டிருக்கும் புதிசு. அந்தச் செருப்புக் காணாமல் போயிருந்தது. மற்றவர்களுடையவை அப்படியே இருந்தன. எல்லோருடையதும் அப்படி அப்படியே இருக்க, அவளுடையது மட்டும் ஏன் காணாமற்போயிற்று.



வழிபாட்டில் ஏதும் குறை வைத்தாளோ....? மனதுக்குள் ஏதும் கறை படிந்ததோ...? இல்லாவிட்டாள் ஏன் அவளுடையது மட்டும் காணாமற் போகவேண்டும். தொண்டைக்குள் லேசாய்க் கரித்தது. சற்றே அருகில் சுற்றுமுற்றுமாய் அவளும், தோழிகளும் தேடினார்கள். இருந்தால் அல்லவா எடுப்பதற்கு எங்கும் இல்லை. யாரேனும் மாற்றிப்போட்டுக்கொண்டு போனார்களோ...? சற்று நேரத்தில் திருப்பிக் கொண்டுவருவார்களோ.... தம்முடையதை எடுப்பதற்கு....? தோழிகள் அவளைப் 'பைத்தியம்' என்றார்கள். கொண்டுபோனவள் திருப்பியா கொண்டுவருவாள் என்று அவள் நம்பிக்கையைச் சாடினார்கள். இவளுக்குப் புதுச்செருப்புத் தொலைந்தது என்பதைக் காட்டிலும் அது கோயிலில் தொலைந்தது என்பதுவே வேதனையாய் இருந்தது. சற்றுப் பொறுத்துப் பார்க்கலாம் என்று அவள் நினைத்தாலும் தோழிகளின் கேலியையிட்டு அவள் உடனேயே அவ்விடத்தை விட்டு அகலவேண்டியிருந்தது. இருந்த போதிலும் வழிவழியாய், யாரேனும் மாற்றி எடுத்திருப்பின் சிலவேளை அதைக்கொண்டு வந்து வைத்திருக்கக்கூடும் என்று தோன்றாமல் இல்லை.

இவ்வளவு வெகுளியாய் இருக்கக்கூடாது என்றார்கள் தோழிகள். தன்னுடையது தனக்குக் கிடைக்கும் என்று அவள் நம்புவது வெகுளித்தனமா? சிலவேளை அது உச்ச பட்ச நம்பிக்கையின் எல்லையாய் இருக்கலாம். இல்லாவிட்டால் முட்டாள்த்தனத்தின் அடிமட்டமாகக்கூட இருக்கலாம். இருப்பினும் எப்போதாவது தன்னுடையது தனக்குக் கிடைக்கும் என்பதில்தான் எவ்வளவு நிம்மதி கிடைக்கிறது அவளுக்கு.

அதற்குப்பிறகு கொஞ்ச நாட்களாய் அவள் எல்லோரது கால்களையுமே கவனித்துக் கொண்டிருந்தாள். எவர் கால்களிலாவது அவளது செருப்புக் கிடைக்காதா என்ன....? தனது செருப்பை யார் எடுத்துக்கொண்டார்கள் என்று பார்க்கவேண்டும் போலிருந்தது. அந்தக் கால்களுக்கு அவளது செருப்புப் பொருந்தியிருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். அந்தச் செருப்புக்காக இனி அவள் சண்டை பிடிக்கப்போவதில்லைத்தான். ஆனால் அதை எடுத்துக்கொண்டவள் யாரென அறியவேண்டும் என உள்ளூர ஒரு துடிப்பு. ஆனால் இவளால் தன் செருப்பைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவளுடையதைப்போலத் தென்பட்ட செருப்பை அணிந்தவர்களைக்கண்டு, துருவித் துருவி அவள் பார்க்கும் பார்வை சற்றைக்குள் விழுந்து போய்விடும். சின்ன மாற்றங்களுடன் அவளுடையது போலவே இருக்கும் வேறு செருப்புக்கள்... இன்றுவரைக்கும் தொலைந்துபோன அவளது செருப்பைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. அந்தச் செருப்பினை அப்போது பாவித்திருந்தால்

இப்போது தேய்ந்து அறுந்திருக்கவும்கூடும். ஆனால் அவள் நினைவில் என்றும் புதிசு தான்.

செருப்பிற்குப் பிறகு, அவள் இன்னும் சிலவற்றைத் தொலைத்தாள். ஞாபகத்திலில்லை. அவை அவளது மனதில் அவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தாதவை. மிகமிக விருப்பத்துக்குரியவை காணாமல் போகிறபோது அவைதான் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவோ....? அவள் வரையில் அந்தக் கைக்குட்டை, செருப்பு ஞாபகங்கள் இன்னும் போகவில்லை. இனியும் போகப் போவதாய் அவளுக்குத் தெரியவில்லை.

இப்போது தொலைந்துபோனவன் அவன். உயர்திணை. அவன் அவளது இதயம் முழுவதும் பரந்திருந்தவன். அவன் ஏன், எப்படி, எவ்வாறு தொலைந்துபோனான் என்பது அவளுக்கே தெரியவில்லை. அம்மா சொல்வதுபோல அவள் கவனயீனமாக இருந்திருக்கிறாளா....? தன்னுடையதுதானே! எங்கு தவறியும் தனக்குக் கிடைக்கும் எனும் நம்பிக்கையில் அசட்டை பண்ணியிருந்தாளா அவனை....? அப்படியிருக்கக் கூடுமா....? நினைவுகளின் தடத்தில் எந்தப் புள்ளியில் அவள் அவனை நழுவவிட்டாள். அவனும் அவளுக்கு வெறும் கைக்குட்டையாகவோ, செருப்பாகவோ ஆக முடியுமா? கைக்குட்டையோ, செருப்போவெனில் திரும்பவும் வேறு வாங்கிக் கொள்ளலாம். அவற்றைக்கூட வேறுவாங்கி அவளால் திருப்திப்பட முடியாதபோது முழுவாழ்க்கையுமாகிய அவன் தவறிவிட்டபோது இவளால் என்னதான் செய்யமுடியும்....?

அவனை இழந்துவிட்ட சில நாட்களில் வலி மிகக் கடுமையானதாய் இருந்தது. அவன் ஒரு தொலைபேசியிலோ அல்லது ஒரு ஆறுதலான பார்வையிலோ கிடைக்கக் கூடும் என அவள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். ஒன்றை இழக்கும்போதுதான் அதன் அருமை புரியும் எனில் அது கிடைத்தவுடன் அதன் மீதான கரிசனை கூடும் அல்லவா?

இனி அவன் கிடைக்கின்றபோது அவனைத் தவறவிடுவதில்லை என நினைத்தாள். அவள் மட்டுமா அவனைத் தவறவிட்டாள். அவனும்கூட அவளைத் தவறவிட்டுத்தானே இருக்கவேண்டும். அதனால்தானே இருவரும் மிக எளிதாய் இடறுப்பட்டு எங்கெங்கோ போய் விழுந்தார்கள். இவள் தேடுவதுபோல அவனும் எங்காவது அவளைத் தேடிக்கொண்டிருப்பானா....?

இப்போது தொலைப்பதற்கு எதுவுமேயில்லை. அவளது வாழ்க்கையே தொலைந்துபோய்விட்டது. அவன் தொலைந்தபோது அவளது வாழ்வையும்கூட எடுத்துச் சென்றுவிட்டான். அது எவ்விதத்தில் நியாயம் என்பதுதான் அவளுக்குப் புரியவில்லை. இவளது வாழ்வு அவனது கையில் எப்படியானது...? எப்போது அனுமதி கொடுத்திருந்தாள் அதற்கு.....? அனுமதி கொடுகாமலேயே அதை அவன் எடுத்துக்



**காடு = நாடு**

சிறுவர் நாடகம்

*ஆசிரியர்:* வளநாடன்

நாடகத்துறையில் நாட்டமும், பயிற்சியும் உள்ள அரங்கக்காரன் ஒருவரின் சிறுவர் நாடகம். அரங்கேறியபோது பாராட்டுக்களைப் பெற்ற நாடகத்தின் பிரதி நூலாகியுள்ளது.

தொடர்புகளுக்கு:

கலையழகன் வெளியீட்டகம்
புதுத் தோட்டம்,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.

கொண்டானா....? கடைசியில் தொலைந்து போன தன் வாழ்வை எப்போது தேடிக் கண்டுபிடிக்கப் போகின்றாள் அவள்.

இப்போது தொலைந்துபோன அவனை யோ, அவளது வாழ்க்கையையோ கண்டு பிடிப்பதற்கு அவளது தோழிகள் இல்லை. அவளது தோழிகளும் ஒவ்வொரு திசைக்கு ஒவ்வொருத்தியாய்த் தொலைந்துபோனார் கள். அவர்களது முகவரிகூட இல்லை. அம்மாவும்கூட இவள் தொலைத்தவற்றை



அறியாதிருந்தாள்.

"தேடிப்பார் கிடைக்கும்...." என்பதுவே அவளிடமிருந்து கிடைக்கும் வார்த்தை களாய் இருக்கும்.

எங்கே போயிற்று அவளது வாழ்க்கை....? எங்கே இருக்கக்கூடும் அவளது கைக் குட்டை, செருப்பு... மற்றும் அவன்.

தொலைந்துபோனவை கடைசியில் எங்கேபோய்ச் சேர்கின்றன....?

தவறிப்போய்க் கண்களிலிருந்து விழுந்து சிதறிய கனவுகள் உடைந்தே போயி னவா.....?

அவன் எங்கே காணாமற் போனான்....?

எதிர்பாராமலே போய்விட்டானா...?

"எது இன்று உன்னுடையதோ, அது நாளை வேறொருவருடையதாகும்...." கீதை யின் சாரம் ஏன் இப்போது ஞாபகத்திற்கு வரவேண்டும்.

அவன் யாருடையவன்....?

அவளுடையவன் அல்லனா...?

யாருடையதோ சொந்தத்தை அவள்தான் சிலகாலம் தன்னுடையது என எண்ணி எடுத்து வைத்திருந்தாளா....?

அல்லது, இவளுடையது தொலைந்து போன இந்தக் கணத்தில், யாரோ அதை எடுத்துக்கொள்ளப் போகிறார்களோ....?

எப்படியும் அவளுக்குரியது கிடைத்தே தீரும். எவ்வகைப்பட்டேனும்.... எந்த இம்சை களுக்கப்பாலும், அவளுக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கும். எனினும் அந்தக் கைக்குட்டையும் செருப்பும் அவளுக்குக் கிடைக்கவேயில்லை. என்றோ தொலைத்த அவற்றுக்காக இனியும் காத்திருப்பது மடத்தனம் என்றுதான் எல்லோருமே சொல் லுகிறார்கள். அவளிடம் வேறு கைக்குட்டை களும் செருப்புகளும் நிறையச் சேர்ந்தும் விட்டன. என்றாலும் தொலைந்துபோன அந்தக் கைக்குட்டையையும், செருப்பை யும்தான் மனம் நாடிக்கொள்ளும்.

இடைக்கிடையே திடுக்கிடும்வேளை களில் கனவில் வரும் கைக்குட்டையோ, செருப்போ மனதை அருட்டிப்போகும். திடுக் குற்று எழும்பி அழுதிருக்கிறாள். இல்லை எனும் உண்மை முரட்டுத்தனமாய் மனதை அறையும். என்றாலும் அவளுக்குரியது கிடைத்தே தீரும், வாழ்நாளின் கடைசிப் புள்ளியிலேனும். கடைசிவரை அவை அவளுக்குக் கிடைகாவிட்டாலும்கூட இந்த நம்பிக்கை செத்துப்போகாது. இறப்பு வரைக் கும் அவள் மனநுனியில் அந்தத் தேடல்கள் தான் ஊசலாடிக்கொண்டிருக்கும் தொலைந்து போன அவனது ஞாபகங்களும்கூட.


வாழ்த்து மடல்கள் வடிவமைப்பா
அழைப்பிதழ்கள் வடிவமைப்பா
புத்தகங்கள் வடிவமைப்பா
உங்கள் எந்தத் தேவையாயினும்
எங்களிடம் வாருங்கள்
நாங்கள் உங்களுக்கு
அழகாக அச்சிட்டுத் தருவோம்.
நிலா பதிப்பகம்
பிரதானசாலை,
கிளிநொச்சி.


வெளிச்சம்
கார்த்திகை மாதம் கல்லறைத் திருநாளுக்காக
பூக்கத் தொடங்கிறது கார்த்திகைப் பூ